'பதிவுகள்' 100 கவிதைகள்

(தொகுதி ஒன்று)

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்"

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்" என்பதைத்தாரக மந்திரத்துடன், எழுத்தாளர் வ.ந.கிரிதரனை ஆசிரியராகக்கொண்டு மார்ச் 2000 ஆம் ஆண்டிலிருந்து வெளியாகும் இணைய இதழ் 'பதிவுகள்' (பதிவுகள்.காம்). 'பதிவுகள்' இணைய இதழில் வெளியான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மின்னூற் தொகுப்புகளாக வெளியாகும். இது அவ்வகையில் வெளியாகும் முதலாவது கவிதைத்தொகுப்பு.

'பதிவுகள்.காம்' வெளியீடு!

அக்டோபர் 2020

பதிவுகள் © 2020

உள்ளே..

(1- 6) கவீந்திரனின் (அறிஞர் அ.ந.கந்தசாமி) கவிதைகள்!

1. சிந்தனையும் மின்னொளியும்!

2. எதிர்காலச் சித்தன் பாடல்!

3. வில்லூன்றி மயானம்!

4. தேயிலைத் தோட்டத்திலே!

5. நெடுங்கவிதை: கைதி!

6. எழுத்தாளர் கீதம்!

(7. - 16) லதா ராமகிருஷ்ணன் (ரிஷி) கவிதைகள்.

7. நந்தவனத்திலோர் ஆண்டி

8. நடை

9. போர்த்திறம்

10. வெளியேற்றம்

11. ஒற்றைச் சொல் பற்றி..

12. வலிவாங்கியும் தாங்கியும்

13. செலவு

14. நீள்கவிதை: அகழ்வு

15. நீள்கவிதை பொம்மிக்குட்டியின் கதை!

16. ஒரு சல்லடையும் சில கவிதைகளும் செயல்முறை விளக்கம்!

17. ரண களம். - தாஜ் -சீர்காழி-

18 - 24. சித்தார்த்த 'சே' குவேரா கவிதைகள்(இயற்பெயர்: இரமணிதரன், கந்தையா. திண்ணைதூங்கி, சிசேகு சித்தார்த்த 'சே' குவேரா ஆகிய புனைபெயர்களிலும் எழுதுபவர்)

அப்பா

19. கிளிப்போர்வீரன்

20. சித்தார்த்த 'சே' குவேராவின் (அ)கவிதைகள்

21. வகிட்டுக்கோல் -

22. வழுப்படு தலைப்பிலி- I- vi

23. எதிரிகள்!

24.கவிமனம்

25. . ஒரு பாடலும், சொல்லாத சில சேதிகளும் இளங்கோ,

26. எத்தனை முகங்கள் எத்தனை முகங்கள்.. -நாகரத்தினம் கிருஷ்ணா-

27. இப்போது உனக்காக.. - டானியல் ஜீவா-

28. கீதாஞ்சலி:என் தேசம் விழித்தெழுக ! - ரவீந்திரநாத் தாகூர் தமிழாக்கம்: -சி.ஜெயபாரதன்

29. புதிய தலைமுறைகள்! - சி. ஜெயபாரதன்

30. கானடா நாடென்னும் போதினிலே - சி. ஜெயபாரதன், கானடா

31. யார் நீ ? - சி. ஜெயபாரதன்-

33. பேசலாம் வாரும் -மதுரபாரதி

34. நச்சு விதை - மதுரபாரதி -

35. பிறை நிலவு திலகபாமா (சிவகாசி)
36. அவர்கள் - புஸ்பா கிறிஸ்ரி
37. காதலினால்..... எஸ்.ரமேஷ்
38. எதனால் இப்படி? - சுப்ரமணியன் ரமேஷ்
39. பறவைகள் விட்டுச்சென்ற சுவடுகள் - -இளங்கோ-
40. தேடலில்லா கவிதை போல்.. -இளங்கோ-
41. ஆற்றாமைகளும், ஆற்றுப்படுத்தலும் -இளங்கோ-
42. பிரபஞ்சம் - ரமேஷ்
- 43. பாம்பு போன பாதை
44 . நாலும் தெரிந்த நாய் - ஜீவன்-
45. புதிய பாதையில் - புஸ்பா கிறிஸ்ரி
46. தேடுகிறோம் தடயங்களை
47. திண்ணை தூங்கியின் (இரமணி) கவிதைகள்
- விரல், தறி & வாதம்
- 48. தலைப்பிலி 1
- 49. தலைப்பிலி 2
- 50. . தலைப்பிலி 3
51. அறுத்த அகவிதைக்கும் நட்ட விதைக்கும் நடுவில் முளைத்தவை
52. திரிசங்கு உலகு - திலகபாமா (சிவகாசி)
53. நீ அகதி அல்ல! - புதியமாதவி (மும்பை, இந்தியா)
54. நகர் வலம் - வ.ந.கிரிதரன் -
55. அனகொண்டா வ.ந.கிரிதரன்
56.. எனதும் அவளதுமான மழைபற்றிய சேகரிப்புகள் - கோ.முனியாண்டி, மலேசியா -
57. பேசாதிரு மனமே! - நாகரத்தினம் கிருஷ்ணா -
58. மகளே.. வந்து விடு..! - புதியமாதவி (மும்பை- இந்தியா) -
59. ஞாபகங்கள் - நாகரத்தினம் கிருஷ்ணா (பிரான்ஸ்)
60. ஒரு கிறிஸ்தவனின் விண்ணப்பம் - சுகன்
61. கனவுலகம் - சக்தி சக்திதாசன்
62. ஏகலைவனின் புத்திரி -புதியமாதவி (மும்பை) -
63. காக்கை பொன் - திலகபாமா
64. என் காதல் - ஊட்ஜரூ நுநுக்கல் (Oodjeroo Noonuccal)| தமிழாக்கம்: டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்
65. வேடன் - ஆர்ச்சி வெல்லர் [Archie Weller]| தமிழாக்கம்: டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்
66. தலைப்பிள்ளைகள் - ஜாக் டேவிச் [Jack Davis]| தமிழாக்கம் டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்
67. உனக்குமா ? - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)
68. இத்தனை நாளாய் எங்கிருந்தாய் ? - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)
69. நாளைய அஸ்தமனத்துக்காய் - - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)
70 நீ மட்டும் - பாரதி (ஜேர்மனி) -
71 கனவுக்குள் வாழ்க்கையிது பாரதி (ஜேர்மனி) -.
72. அன்பு மயம்... - மதுமிதா
73. புது யுகம் பிறக்கட்டும்! - சாந்தினி வரதராஜன்

பதிவுகள் © 2020

74. நிழல் தேடும் மரங்கள் - சாந்தினி வரதராஜன்
75 அர்த்தமிழக்கும் காத்திருப்புகள் - திலகபாமா(சிவகாசி)
76. பனிப்போர் - புதியமாதவி
77. புயலடித்துச் சாய்ந்த மரம் - சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி)
78. ரசம் - நெப்போலியன் (சிங்கப்பூர்) -
79. கவனிக்கப்படா உண்மைகள்... - மதுமிதா -
80. தெருவிழா! - ரவி (சுவிஸ்) -
81. வெள்ளி இரவுகள் - - இளங்கோ -
82. எங்கே நீயோ.. .. தேவேந்திர பூபதி
83. அச்சமும் அவலமும் அவரவர்க்கு வந்தால்... - ப.வி.ஸ்ரீரங்கன் -
84. கவிதை: தொப்புள் கொடி! ப.வி.ஸ்ரீரங்கன் -
85. ஆவீன மழைபொழிய இல்லம் வீழ... (சின்னக் கதை) - ப.வி.ஸ்ரீரங்கன் -
86. தவம் - திலகபாமா (சி9 வகாசி)
87. எங்கோ இருக்கும் கிரகவாசிக்கு... - வ.ந.கிரிதரன் -
88. எழுக அதிமானுடரே! - வ.ந.கிரிதரன் -
89. ஆசை! - வ.ந.கிரிதரன் -
90. விடிவெள்ளி - வ.ந.கிரிதரன்
-91. பார்த்துக் களித்திடவே! - பா.தேவேந்திர பூபதி -
92. தற்கால மனிதன்! - - எம்.ஏ.சலாம் -
93. ஹைக்கூக் கவிதை: மின்விசிறி! தீக்குச்சி! கண்ணீர் முத்துக்கள்! - எம்.ஏ.சலாம் -
94: தனிமை! - நெப்போலியன் (சிங்கப்பூர்) -
95. யானை பார்த்த குருடர்கள்! - வ.ந.கிரிதரன் -
96. புறச்சூழலில் அகக் குரல்கள்! - திலகபாமா -
97. வருகல் ஆறு! - நெப்போலியன் (சிங்கப்பூர்) -
98. மனசை உடைத்தெறிய பத்துக்கும் மேற்பட்ட வழிகள்! - மாலதி -
99. கானல்நீர் வேட்டை! - பிச்சினிக்காடு இளங்கோ(சிங்கப்பூர்) -
100. மரமல்லிகைகள்! - மாலதி! -

(1- 6) கவீந்திரனின் (அறிஞர் அ.ந.கந்தசாமி) கவிதைகள்!

1. சிந்தனையும் மின்னொளியும்!

சாளரத்தின் ஊடாகப் பார்த்திருந்தேன் சகமெல்லாம்
ஆழ உறங்கியது அர்த்த ராத்திரி வேளையிலே,
வானம் நடுக்கமுற, வையமெல்லாம் கிடுகிடுக்க,
மோனத்தை வெட்டி யிடியொன்று மோதியதே!
'சட்' டென்று வானம் பொத்ததுபோல் பெருமாரி
கொட்டத்தொடங்கியது. 'ஹோர்' ரென்ற இரைச்சலுடன்
ஊளையிடு நரியைப் போல் பெருங்காற்றும் உதறியது.
ஆளை விழுத்திவிடும் அத்தகைய பேய்க்காற்று
சூறா வளியிதுவா உலகினையே மாய்க்க வந்த
ஆறாத பெருஊழிக் காலத்தின் காற்றிதுவா?
சாளரத்துக் கதவிரண்டும் துடிதுடித்து மோதியது.
ஆழிப்பெரும் புயல்போல் அல்லோலம் அவ்வேளை
உலகம் சீரழிவிற்ற(து); அப்போ வானத்தில்
மாயும் உலகினுக்கு ஒளிவிளக்கந் தாங்கிவந்த
காயும் மின்னலொன்று கணநேரம் தோற்றியதே.
கொட்டுமிடித்தாளம் இசைய நடம் செய்யும்
மட்டற்ற பேரழகு வான்வனிதை போல் மின்னல்
தோன்றி மறைந்ததுவே; சிந்தனையின் தரங்கங்கள்
ஊன்றியெழுந்தன இவ் வொளிமின்னல் செயல் என்னே?
வாழ்வோ கணநேரம்; கணநேரம் தானுமுண்டோ?
சாவும் பிறப்புமக் கணநேரத் தடங்குமன்றோ?
ஜனனப் படுக்கையிலே ஏழைமின்னல் தன்னுடைய
மரணத்தைக் கண்டு துடிதுடித்து மடிகின்ற
சேதி புதினமன்று; அச் சேதியிலே நான் காணும்
சோதி கொளுத்திச் சோபிதத்தைத் செய்துவிட்டு
ஓடி மறைகிறது; வாழும் சிறு கணத்தில்
தேடி ஒரு சேவை செகத்திற்குச் செய்ததுவே!
சேவையதன் மூச்சு; அச்சேவை யிழந்தவுடன்
ஆவிபிரிந்து அகல்வானில் கலந்ததுவே!
என்னே இம் மின்னல(து) எழிலே வென்றிருந்தேன்.
மண்ணின் மக்களுக்கு மின்னல் ஒரு சேதி சொல்லும்.
வாழும்சிறு கணத்தில் வைய மெலாம் ஒளிதரவே
நாளும் முயற்சி செய்யும் நல்லசெயல் அதுவாகும்.

இந்த வாறாகச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன்.
புந்தி நடுங்கப் புரண்டதோர் பேரிடி; நான்
இந்த உலகினிற்கு வந்தடைந்தேன்; என்னுடைய
சிந்தனையால் இச்சகம்தான் சிறிதுபயன் கண்டிடுமோ? -

- *அறிஞர் அ.ந.கந்தசாமியின் ஆரம்பகாலக் கவிதையிது. ஈழகேசரியில் வெளிவந்தது.* -

2. எதிர்காலச் சித்தன் பாடல்!

எதிர்காலத் திரைநீக்கி அதற்கப் பால்யான்
ஏகிட்டேன் ஏகிட்ட போதில் என்முன்
கதிர்போலும் ஒளிமுகத்தான் கருணையூறும்
கமலம்போற் கண்ணினையான் ஒருவன் வந்தான்
"எதிர்கால உலகமிஃது மனிதா நீயிங்
கேன்வந்தாய் இவண்காணும் பலவுமுன்னை
அதிர்வெடி போல் அலைக்கழிக்கும் ஆதலாலே
அப்பனே நிகழ்காலம் செல்க" என்றான்.

அறிவினிலே அடங்காத தாகம் கொண்டேன்
அவ்வுரையால் அடங்கவில்லை அவனை நோக்கிச்
'செறிவுற்ற பேரறிவின் சேர்க்கை வேண்டும்
செந்தமிழன் யானொருவன் ஆதலாலே
மறுவற்ற பேராண்மைக்கோட்டை என்னை
மலைவுறுத்தா தெதிர்காலம்" என்று கூறிக்
குறுகுறுத்த விழியுடையான் குழுத வியான்
குணமென்ன பெயரென்ன என்று கேட்டேன்.

"எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தா ரப்பா
எதிர்காலச் சித்தன்யான் நிகழ்காலத்தர்
உனக்குமுன்னர் வாழ்ந்திட்ட சித்த ரல்லால்
உன்காலச் சித்தரையும் ஏற்கா ரப்பா
மனக்குறைவால் கூறவில்லை மகிதலத்தில்
மடமையொரு மயக்கத்தின் ஆட்சி என்றும்
கனத்துளதிங் கென்பதையே கருதிச் சொன்னேன்
காசினியின் பண்பிதனைக் காணப்பா நீ.

வருங்காலச் சித்தனுரை செய்த வார்த்தை

வையகத்தார் அறிதற்காய் இங்கு சொல்வேன்
"பெரும்போர்கள் விளைகின்ற நிகழ்காலத்தில்
பிளவுறுத்தும் பலவகையாம் பேதமுண்டு
ஒருமைபெறும் மனிதர்களை ஒன்றா வண்ணம்
ஊடமைத்த சுவரனைய பேதம் யாவும்
நோக்கிடுவாய் தூரஎதிர் கால மீதே"

அண்டுபவர் அண்டாது செய்வதேது
அநியாய பேதங்கள் பெயரைச் சொல்வேன்
துண்டுபட்டுத் தேசங்கள் என்றிருத்தல்
தூய்மையாம் இனம்மொழிகள் மதங்க ளென்று
அன்றுதொட்டிங் கின்றுவரை இருக்குமந்த
அர்த்தமிலாப் பிரிவினைகள் எல்லாம் சாகும்.
ஒன்றுபட்டிவ் வுலகெல்லாம் ஒற்றையாகும்
ஒருமொழியில் ஓரரசு புரக்குமப்பா.

அரசெல்லாம் ஒழிந்துலகில் ஓரரசே யுண்டாம்
அறங்கூறும் ஒருமதமே உலகெல்லாம் ஆகும்
விரசமொடு விகற்பங்கள் வளர்க்குமொழி எல்லாம்
வீழ்ந்துவிடும் ஒருமொழியே இவ்வுலகில் உண்டாம்
சரசமொடு உலகத்து மககளெல்லாம் தம்மைச்
சமானர்கள் மனிதகுலம் என்ற இன மென்பார்
அரசர்கள் ஏழைபணக்காரனென்ற பேதம்
அத்தனையும் ஒழிந்து விடும் எதிர்கால உலகில்.

செந்தமிழும் சாமீழச் சிங்களமும் சாகும்
செகமெல்லாம் ஒருமொழியே தலை தூக்கி நிற்கும்.
நந்தமிழர் இனஞ்சாகும் பிற இனமும் சாகும்
நாடெல்லாம் மனித இனம் ஒன்றுதலை தூக்கும்.
எந்தமொழி இவ்வுலகில் நிலவுமெனக் கேட்பில்
எண்ணிக்கை கொண்டமொழி எம்மொழியோ இங்கு
அந்த மொழி தானப்பா அரசாளும் உண்மை
அதுநன்று தானப்பா பிரிவினைகள் ஒழிதல்.

நிகழ்காலச் செந்தமிழர் இது கேட்டுச் சீறி
நீசனுரை நிகழ்த்தாதே செந்தமிழே உலகின்
புகழ்மொழியாய் உலகத்தின் பொது மொழியும் ஆகும்

புதுமைதனை காண்பீர்கள் என்றுபுகன் றிடுவார்.
இகழ்ந்திடுவார் எதிர்காலச் சித்தனுரை தன்னை
இம்மியள வேணும் மானமில்லா மூர்க்கன்
நிகழ்காலத் திருந்திருந்தால் செய்வதறிந்திடுவோம்.
நெஞ்சுபிளந் தெறிந்திருப்போம் என்றிகழ்த்திடுவார்.

பிறப்பாலே யானுயர்வு தாழ்வுரைக்க மாட்டேன்
பிறப்பாலே என்மொழியே சிறந்ததெனச் சொல்லேன்.
பிறப்பென்றன் வசமாமோ? பிரமத்தின் வசமாம்.
பீருவில் பிறந்திருந்தால் பீருமொழி பீடே
வெறிமிகுந்த நிகழ்காலத் தீதுணரமாட்டார்
விழலுக்கே பெருங்கலகம் விளக்கின்றார் அன்னார்
அறிவற்றே துன்பங்கள் அனவர்க்கும் விளைப்பவர்
ஐய்யய்யோ இவர்மடமை என்னென்று சொல்வேன்.

புதுயுகத்தின் குரல்போல் எதிர்காலச் சித்தன்
புகன்றமொழி கேட்டபின்னர் யானவனைப் பார்த்து
"எதிர்காலச் சித்தா உன் இனியமொழி கேட்டேன்.
எண்ணங்கள் விரிவடையும் என்னுடன் நீவந்து
மதி கெட்டார் வாழ்கின்ற வையகத்தில் புதிய
வாழ்வேற்றிச்செல்வாயோ என்றிறைஞ்சி நிற்க
மெதுவாகச் செவ்விதழ்கள் திறந்ததையுமங்கே
மென்னிலவுக் குஞ்சிரிப்புப் பிறந்ததையும் கண்டேன்.

காலத்தின் கடல் தாவி நீங்கு வந்த
காரணத்தால் ஏதறிவு என்பதை நீ கண்டாய்
ஞாலத்தில் நிகழ்கால மயக்கத்தி லுள்ளோர்.
ஞானத்தைக் காண்பாரோ? காணார்களப்பா
காலத்தை யான்தாண்டிக் காசினிக்கு வந்தால்
கட்டாயம் எனையவர்கள் ஏற்றிமிதித்திடுவார்
ஆலத்தைத் தந்தன்று சோக்கிரதரைக் கொன்ற
அன்பர்களுன் மனிதச் சோதரர்களன்றோ?

ஆதலினால் நிகழ்கால மனிதா அங்கு
யான்வரேன் நீபோவாய் என்றான் ஐயன்
காதலினால் கால்களென்னும் கமலம் தொட்டுக்
கண்ணொற்றி விடைபெற்றேன் திரை நீங்கிற்று.

பாதகர்கள் முழுமடைமைப் போர்கள் சூழும்
பாருக்கு நிகழ்காலம் வந்தேன் எங்கும்
தீதுகளே நடம்புரியும் நிலைமை கண்டு
திடுக்கிட்டேன் என்றிவர்கள் உண்மைகாண்டல்?

- தேன்மொழி -

3. வில்லூன்றி மயானம்!

நாட்டினர்நீர் அறிவீர் வில்லூன்றி தன்னில்
நாம் கண்ட ஈமத்தீ வெறுந்தீ அன்று
கேட்டினிலே உளபிணத்தை உண்பதற்குக்
கிளர்ந்தெழுந்த தீயன்று நெடுநா ளெங்கள்
நாட்டினிலே கிளைபரப்பும் சாதி என்னும்
நச்சுமர வீழ்ச்சியினைக் காண்பதற்காய்க்
வாட்டமுற்ற மக்களுளம் கனன்று பொங்கும்
வல்லதொரு புரட்சித்தீ வாழ்க வஃது.

மக்கள்குல மன்றோநாம் மரமோ கீழாம்
மாடுகளோ விலங்குகளோ கூறும் என்று
திக்கற்றான் நெஞ்சினிலே பிறந்த வைரத்
தீ அதுவாம் திசை எங்கும் பரவுதற்கு
மக்கள்நாம் மறுப்பதெவர் என்று கூறி
மாவுரிமைப் போர்தொடங்கி விட்டான் அந்தத்
திக்கதனை வில்லூன்றித் திருத்த லத்தைச்
சிர்ந்தாழ்த்தி வணங்குவோம் புனித பூமி.

கேளீர் ஓர் வீரமிகு காதை ஈது.
கிளரின்பம் நல்குமொரு சேதி யன்றோ?
பாழினிலே பயந்திருந்த பாம ரர்கள்
பலகாலந் துயில்நீங்கி எழுந்துவிட்டார்
வாழியரோ வரப்போகும் நவயு கத்தின்
வளக்காலை இளம்பருதி வரவு ணர்த்தும்
கோழியது சிலம்பலிது வெற்றி ஓங்கல்
கொள்கைக்காதரவு, நல்குவோம் நாம்.

பரம்பரையாய்ப் பேணிவந்த பழக்கமென்று

பழங்கதைகள் பேசுகின்றார் மனிதர் பார்ப்பின்
பரம்பரையாய்ப் பேணிடினும் தீயதான
பழக்கமெனப் பகுத்தறிவாற் கண்ட பின்னும்
சிரங்குவிப்பதோ அதற்கு? மூடச் செய்கைச்
சிறுமைஎன்று செகமெல்லாம் நகை நகைத்துச்
சிரிபபதற்குச் செவிதாரீர் தீண்டாய்ப் பேயின்
சிரங்கொய்தே புதைத்திடுவோம் வாரீர் வாரீர்.

- தினகரன் 9.11.1944 -

4. தேயிலைத் தோட்டத்திலே!

1.
காலையிலே சங்கெழுந்து பம்மும்! "நேரம்
கணக்காச்சு! எழுந்துவா! தூக்கம்போ தும்.
வேலைசெய வேண்டு"மெனச் சொல்லு மஃது!
வேல்விழியாள் உடன்வித்தாள்! துடித்தெழுந்தாள்!
பாலையுண வேண்டுமெனப் பாலகன் தான்
பதறுமன்றோ?என நினைத்தாள் பாய்மேற்பாலன்
காலைமெல வருடினாள் கமலப் பூபோல்
கண்விரித்துக் காலையுதைத் தெழுந்தான் பாலன்!

2.
முகத்தைமெல முத்தமிட்டாள்! ராசா வென்றாள்!
முத்தம்பின் முத்தமிட்டு முறுவலித்தாள்!
அகத்தினிலே அணைகடந்த அன்பின் வெள்ளம்
அமுதமாய் மார்பிடையே சுரக்கவஃதை
அகம் குளிரப் பசிதீர உடல்வளர
அருந்தட்டும் குழந்தையென அணைத்துக் கொள்வாள்!
முகம்மலர வாய்குவித்துச் சிரத்தையோடு
முழித்தவண்ணம் பாலகந்தான் பருகுகின்றான்!

3.
அன்னையுளம் அழகிய பூங்கனவுபல
அரும்பிவரும்! சின்னவந்தப் பாலகன்தான்
மன்னவன்போல் மல்லார்ந்த புயத்தனாகி

மண்ஞ்செய்து மக்கள்பல பெற்று வேண்டும்
பொன்னோடும் பூணோடும் சிறக்க வாழ்வான்!
பொறாமைப்பேய் உறவினரை விழுங்கும் உண்மை!
என்னென்ன நினைவெல்லாம் என்மனத்தே!
எனநினைந்து தன்னுள்தான் வெட்கிக்கொள்வாள்!

4.
பால்குடித்துமுடிய அந்தக் குழந்தை இன்பப்
பசுமுகத்தில் பால்வடியக் கலகலென்று
மால்தீர உளத்துன்ப மாசு ஓட
மனங்குளிரச் சிரித்துத்தன் கையை ஆட்டி
காலையுதைத் திருள் தீரும் காட்சி நல்கும்!
காரிகை மனத்தின்பம் சீறிப் பொங்கும்!
நாலைந்து முத்தமந்த வெறியிற் கொட்டி,
நங்கைதன் வேலைக்குக் கிளம்புகின்றாள்!

5.
பானையிலே தண்ணீரில இட்டிருநத
பழயதனை எடுத்தே உண்டுமிஞ்ச
மானைநிகர் கண்ணாள் தன் மணவாளர்க்கு
மற்றதனை வைத்துவிட்டு விரைந்து சென்று
கானகத்து மூங்கிலிலே வேய்ந்த கூடை
கழுத்தினிலே பின்புறமாய்த் தொங்கவிட்டு
தானெழுந்து விரைவாள் தன் வேலைக்காடு!
தன் கண்ணின் ஓரத்தைத் துடைத்துக்கொள்வாள்!

- அ.ந.கந்தசாமி கவீந்திரன் என்னும் புனை பெயரில் எழுதிய கவிதை. 'பாரதி' இதழில் வெளிவந்தது. -

5. நெடுங்கவிதை: கைதி!

1.
சட்ட மென்னும் கருங்கல்லால்
சமைத்த சிறைவீ டிதுவாகும்
சட்டம் சரியோ பிழையோ நான்
சாற்றவறியேன் அறிவதெலாம்
கஷ்ட்டமிந்தச் சிறை வாழ்வு

கருங்கற் சுவரும் பலமாகும்
மற்றதெல்லாம் எற்றுக்கு
மனதே வீணில் அலைவதுமேன்?

2.
சிறைவீ டென்று கூறிவிட்டால்
சிறியோர் தாமோ அங்கிருப்போர்?
நிறைந்த அறிவின் அலைவீசும்
நீலக் கடலே அனையாரும்
திறந்தே இருளைப் பிளந்தொளியை
திக்கிற் சிதற் விட்டோரும்
மறைந்தே உறைந்த ஆலயமாம்
வணங்கற்குரிய கோவிலிதாம்!

3.
கிரேக்க ஞானி சோக்ரரும்
கீழைத்தேச மகாத்மாவும்
உரைக்க வொண்ணா நற் பெருமை
உத்தமரின்னும் பல நூறாய்த்
தரைக்கே உண்மை வழிகாட்ட
தாரணி தோன்றிய நன் மலர்கள்
சிறைக்கே சுகந்தம் வீசி நின்ற
சிறுமை உலகம் இதுவன்றோ?

4.
பெரியோர் வாழ்ந்த இச்சிறையில்
பேதை நானும் இடம் பெற்றேன்!
அரிதே இந்த அதிர்ஷ்டத்தை
அறிந்த நண்பர் யாவர்க்கும்
விரிவாய் உரைத்து மகிழ்தற்கு
விலங்காய் அமைந்த கொடுஞ் சிறையே!
சரிந்தே உந்தன் சுவரெல்லாம்
சாய்ந்தே ஒழிந்து போகாவோ?

5.
வானின் சிறிய மலர்கள் போல்
வாவும் வண்ணப் பறவைகளை

கான வேடன் கைப்பற்றி
கட்டிக் கூட்டில் இட்டதுபோல்
மானிடப் புள்ளின் சிறகதனை
மழுங்க வெட்டிச் சிறைவைக்கும்
நானிலப் புல்லர் கூட்டம்போல்
நாசகாரர் இங்குண்டோ?

6.
பறவை நல்லூன் உணவாகும்
பயனைக் கருதி அடைக்கின்றார்!
கறவைப் பசுவைப் பாலுக்காய்க்
கட்டிவைத்துக் கறக்கின்றார்!
வறிதே மனிதர் கூட்டத்தைச்
சிறையில் வைத்து வளர்க்கின்றார்!
சிறையில் வாழ்ந்தேன் ஆயினுமிச்
சிறுமை சிரிப்பைத் தந்திடுமே!

7.
களவு செய்தால் சிறையென்று
கனன்றே என்னை இங்கிட்டார்!
களவு களவு என்ப தெல்லாம்
கருத்தைச் செலுத்திப் பார்க்கையிலே
முழுதும் பெரிய விளையாட்டே
மூடத்தனத்தின் முடிபேயாம்!
களவு களவு என்ற பதக்
கருத்தை நானும் கழறுவனே!

8.
உள்ளவனிடத்தில் இல்லாதான்
உணவின் உடையின் தேவைக்காய்
மெல்லச் சிறிதே எடுத்திட்டால்
மேதினி அதனைக் களவென்னும்!
உள்ளவனிடத்தில் அல்லாமல்
உடைமை யற்றவன் கையிருந்து
இல்லா மனிதன் எடுப்பதற்கு
எங்ஙன் முடியும் இயல்பு வீரே!

9.
இன்னும் கூறுவன் கேளுமினோ!
இல்லாமனிதன் உள்ளவனைப்
பன்னிப் பன்னிக் கேட்டாலும்
பயக்கும் பயனோ மிகச் சொற்பம்!
சென்னியில் அடித்துப் பறித்தாலோ
சிவந்த ரத்தம் வீணாகும்!
அண்ணல் காந்தி சொல்லிவைத்த
அகிம்சை வழியே களவாகும்!

10.
கள்வர் கள்வர் எனக்கூறி
கருணையற்றோர் ஏழைகளை
மெள்ள இங்கே தள்ளுகிறார்
மேலாம் செல்வர் பகலினிலே
கொள்ளை அடிப்போர் உலகெங்கும்
குவையாய்ப் பணத்தில் புரள்கின்றார்!
கள்வர் தமக்கே சிறையென்றால்
அவர்க்கே முதலிடம் தருவீரே!

11.
களவு பிடிக்கும் சட்டமெல்லாம்
காசினி வதியும் செல்வர்களே
அழகாய்த் தம்பொருள் காப்பதற்கு
ஆக்கி வைத்த தந்திரமாம்!
வளமார் கிளிகள், பறவையினம்
வனத்தில் வதியும் விலங்குகளில்
களவுச் சட்டம் ஒன்றுண்டோ?
கழறும் கவிதை ரசிகர்களே!

12.
சிறையில் உடலைப் பிணித்தாலும்
சிந்தனை சிறகு தீயவில்லை!
முறையாய் நினைவு முழுவதுமே
முழங்கித் தீர்க்கத் தருணமிலை!
சிறைவாய்க் கதவை நோக்குகிறேன்,
இரும்புக் கம்பிகள் எண்ணுகிறேன்

சிறையே! என்னுளம் கவிதையினால்
சிலிர்க்க வைத்தாய் நீ வாழ்க!

13.
இரும்புக் கம்பிகள் பின்னால் நான்
இருந்து குமையும் வேளைகளில்
இரும்புக் கம்பிகள் எத்தனை யென்
றெண்ணி எண்ணி அலுத்துவிட்டேன்!
திரும்பத் திரும்ப எண்ணிடிலும்
திடமாம் கம்பிகள் பதினெட்டே!
திரும்பத திரும்ப எண்ணுவதேன்
திடுமெனக் கூடிக் குறையுமென்றா?

14.
கருங்கற் சுவரைப் பார்க்கின்றேன்
கருமைந் நிழல் படர்ந்துள்ள
நெருங்கும் சந்துகள், மூலைகளில்
நெஞ்சம் செலுத்தி நோக்குகின்றேன்!
கருங்கற் சுவரின் இடையினிலே
காணும் சிறையே! இவ்வுலகின்
கருங்கல் லிதயத் துறைகின்ற
காரிருள் சின்னம் நீயேதான்!

நன்றி: சுதந்திரன், ஆகஸ்ட் 5, 1951.

6. எழுத்தாளர் கீதம்!

சங்கு முழங்குது! சங்கு முழங்குது!
சங்கு முழங்குது கேள் - புதுமைச்
சங்கு முழங்குது கேள்.
எழுத்தெனும் சங்கம்
ஒலித்திடுகின்றது.
உழுத்திடும் உலகம் ஒழிந்திடவே -
சங்கு முழங்குது. - சங்கு முழங்குது

சுரண்டல் மிகுந்தது, சூழ்ச்சி
நிறைந்தது

இருண்ட இச்சமுதாயம்!
வரண்டு கிடந்திடு மக்களின் துன்ப
வதைகள் ஒழித்திடுவோம்!
திரண்டிவண் எழுவீர் பேனா மன்னர்
தீரமுடன் நீரே - கலைச்
சிற்பிகளே! எம் எழுத்தாற் பற்பல
அற்புதம் செய்திடுவோம்! - புது
அமைப்பும் நிறுவிடுவோம். - சங்கு முழங்குது

கம்பன், வள்ளுவன், காளமேகம் வழி
வந்தவர் நாமன்றோ?
கீரன், ஔவை, இளங்கோ பெற்ற
கீர்த்தி நமதன்றோ?
நாவலன், பாரதி - சோமசுந்தரன்
நமது இனமன்றோ? - இவர்
யாவரும் காட்டும் வழியே நமது
இலக்கிய நல்வழியாம்! - அவ்
வழியே சென்று ஒளிசேர் தமிழை
விழிபோற் காத்திடுவோம். - சங்கு முழங்குது

வானவில் வர்ணம் ஏழு
வளைவதைக் கண்டிடுவீர்!
கானகத்தில் கனிகள் ஆயிரம்
காற்றில் அசைவதைப் போல்
பூங்கா வனத்தில் ஆயிரம் ஆயிரம்
பூக்கள் மலர்வதைப் போல்
புத்தம் புதிய கருத்துகள் - ஆயிரம்
நித்தம் பெருகவென - சங்கு முழங்குது

[இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1962 இல் நடத்திய அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் பொதுமாநாட்டை ஒட்டி அமரர் அ.ந.கந்தசாமி அவர்களால் இயற்றப்பெற்றது.]

(7. - 16) லதா ராமகிருஷ்ணன் (ரிஷி) கவிதைகள்.

7. நந்தவனத்திலோர் ஆண்டி

உலகின் அரும்பூக்கள் பல கோடி
பூத்துக் குலுங்கும் திருப் பூங்காவனம்
உனது.
துலங்கும் அவற்றின் தனிநிறங்களும், நறுமணங்களும்
உயிரைத் துளிர்க்கச் செய்ய
தோட்டமும், தென்றலும் தம்முள் கலந்து
கிளையசைத்துத் தந்தவை சிலவும்
நாட்டம் மிக நான் கொய்தவை சிலவும்
சுடர்க்கொடி யாகி நின்றேன் சூடி.
வாடியழுதாய் நீ வழிதொலைந்ததாய்
அடர்காட்டில்.
'அடிக்கு அடி ஊற்றுக்கேணி யிருக்கும்
அகன்று படர்ந்த சர்க்கரைத் தேனாற்றில்
அட, ஒரு கை யள்ளினாலென்ன
கொள்ளை போய் விடுமா சொல்?
வெள்ளையாய் கேட்டது உள்.
(வினாவும் விடையும் எல்லாம்
வெறும் பாவனையின்றி வேறில்லை கொள்.)
- கொள் இன்றில் தன் தேடலின்
நல்வரவாய்
இன்னொரு கரம் என் பூவனம் பரவப்
பெறும் பாழ்வெளியில் தன்
கால்மாற்றிக் கொண்டுணரும் உன்
வலியின் கனபரிமாணங்களை.

8. நடை

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தையாக
ஏகும் காலம் சிறிதே தயங்கித் தாண்டிச்
செல்லச் செல்லும் ஏறிறங்கு பாதையில்
மப்பு மந்தார மத்தாப்பு வெளிச்ச மந்த
மாருதமுமாய் அனிச்சப் பூ மனதில் அங்கிங்கே
தைக்கும் முள்ளும் மலரின் நீட்சியாய்

காட்சிரூப நினைவார்த்தமாய்
தலைச்சுமை மறந்து தாளகதியில் நடந்த தெல்லாம்
உள்ளது உள்ளபடி சொல்ல மாட்டாததை
மொழியின் பிழையென ஆற்றிக் கொள் மனம்
காத்திருக்கத் தொடங்கும் அடுத்த நடைத் திறப்புக்காய்.

9. போர்த்திறம்

எரிக்கத்தான் புறப்பட்டேன். பிறகு
எதற்கும் இருக்கட்டும் என்று புதைத்து வைத்தேன்
மனமூலையில் ஒரு குழி பறித்து.
நினைவு தெரிந்த நாளாய்த் தரித்ததைக் கழற்றியதில்
புனையாடை மீறி அம்மணம் பெருக
தழுவும் குளிர்காற்றில் கனிந்திருந்தேன் மிக.
துளிர்த்துப் பொழிந்தது கற்பகத்தரு அருநிழலை.
நிற்பதும் நடப்பதும் நின்னருளாகிய
பிறந்து வந்தேன் பல மறுபடிகள்.பின்
ஒரு காலை இரு கண்ணவிய
இருள் கவியலாக
நிறம் மாறிய நாளை வாள் சுழற்ற
ஊன் அரற்ற உயிரரற்ற
என்மீது நானே படைகொண் டேக
கனவு பறிபோக கையறுநிலை வரவாக
இன்னும் பின்வாங்காது முன்னேறப்
பெறும் செந்நீரில்
முன்கொண்ட கவசகுண்டலங்களைப் பதைபதைத்துத் தேடி
விண்ட மனதின் புதைமூலைக்குச் சிதைந்தோடிக்
கொண்டிருக்கும் நான்.
கால்பதியுமிடமெல்லாம் உனக்கான நன்றிகள்
கசிந்திருக்க...
கழிந்த காலமும் கழியாக் காதலும் வழிமறிக்க....

10. வெளியேற்றம்

இந்தத் தருணத்தை இயல்பாய் எதிர்கொள்ளும்
பிரயத்தனத்தில்
கந்தக உலைக்குள் குளிர்நிலவுவதா யொரு கபடநாடகம்

அரங்கேறியாகிறது.
விழிகளுக்குள்ளாகவே தேங்கிக் கனன்று
அழுகிக்கொண்டிருக்கின்றன கண்ணீர்த் துளிகள்.
இழப்பொன்றுமில்லை என்று உரத்துச் சொல்லிச் சொல்லி
கிழிந்து தொங்குகிறது குரல்வளை.
ஒருவருமறியாதபடி திறம்பட மறைத்து
வழிவிலகலின் பழுக்கக்காய்ச்சிய முட்கம்பிப்
புண்களையும் மறைத்து
புன்னகை நிறைத்து
பாடியாடி பிரமாதப்படுத்துகிறேன்.
எனக்கு நானே கை தட்டித் தட்டி
களைத்துப் போகிறது.
அலைகடலில் நாளும் முழுகிக் குளித்தெடுத்த
முத்துக்களை அளந்து பார்க்க
நிலையழிக்கும் நீராழமும், நீச்சலின்
வரம்பெல்லைகளும்.
அடித்தளம் நொறுங்கிக் கிடக்கும் மனதின்
இடிபாடுகளை
தத்துவம் பேசித் திடமாக்கவும்
பத்திரமாய் 'விரைந்தொட்டு'பசையால்
ஒருங்கிணைக்கவும் முடியுமானால்
இல்லாதொழியும் இக்கவிதை இப்படி.

11. ஒற்றைச் சொல் பற்றி..

முற்றும் பெறாதின்னு மின்னும் முற்றி பற்றி
யெரிந்த வாறிருக்கு மந்த
ஒற்றை வரியின் ஒற்றைச் சொல் மூட்டிய
விலங்கினங்களும் அலறியும் பிளிரியும் மாட்டிக்
கலங்கி மீள வகையறியாதோடி யபடி நாடும்
பொருளகராதிகள் நெருப்பணைக்க லாகாமல் இப்படி
கலிதீர்க்குமுன் அரவணைப்பில் வலி சற்று நலிந்தாலும்
கனன்றவாறிருக்கும் கங்குகள் அங்கிங் கெனாதபடி
வினாவறியாது விடையும் தெரியாதுடை யும்
அனாதரவானதொன்றன் துணுக்குகள் அடிமனக் குடையக்
கசியும் உதிரத்துளி யொவ்வொன்றும் இசிந்தொலிக்கும்
கூடாது ஈடாமோ மாட்டேனுக் கெனக் கேட்கு

மெனக் கெது தரும் பதிலாகும் பதில் அதில்
ஆட்படுமோ கதிமோட்சம் அன்றி விதிமுடிந்த
தாகிடுமோ உறவுத் தேட்டம் காட்டுமோ
உதய மறுமுனை யந்தியின் பின்னான
அந்தகாரமாய் முந்தியும் பிந்தியும்
பார்த்தும் பாராமலும் புரிந்தும் புரியாமல்
பற்றியும் பற்றாமல் பற்று வைத்துக்
கற்பவை கற்றுத் தேரக் கற்பதே
இற்றைக் குற்றதா யெனக்கு...

பதிவுகள் நவம்பர் 2000 இதழ் 11

12. வலிவாங்கியும் தாங்கியும்

புழுவா யுணரும் தருணம் புரைக்
கழிவெனக் கனலும் உள்
முள் கால் கிழிக்கச் செல் வழியில்
அடிக்கொரு தரம் திரும்பிப் பார்த்தபடி.
ஆரம்பமாகி விட்டது போல் வெளியேற்றம்
இடம்பெயரல் வழிவிலகல் வேரறுத்தல் ஆன
பல எத்தனையோ காதைகளினூ டாய்
கலங்கி யலைந்து பித்தாகித் தொலையும்
சொந்தம் அனந்தகோடி காலம் இருந்ததுவாய்
இறந்ததுவா யின்று ஓலமிட்டுப் பறக்கு
முயிர்ப் பேதைக் கிளி யிறகுகள்
படபடக்கப் படப் பின்னு மின்னு முயரப்
பறந்து டலை விண்மீன்களுக்குத் தின்னக் கொடுத்து
பதிலுக்குத் தன்
வலிதாங்கிக் கிடைக்கோட்டை மீட்டெடுத்துக்
கொள்ளும்.

13. செலவு

நிறமும் சுவையும் நீள அகலமும் நன்கறிய
நீர்வளம் நலங் குன்றியதாகும்.
மறுபடி கனலத் தொடங்கும் தாகவிடாய் தீராது
தேரோடக் கிளம்பி விடும் குதிரைக் குளம்பொலி

தொலைவாகி வருவதாய்
தளும்பி நலியும் துயர் நெஞ்சில் மண்டும்
பின்னோக்கிய பயணங்களும் பரிநலப் பிரார்த்தனைகளும்
இன்னுமாக இழப்பின் ஆறாக் காரிருட் புதைசேற்றில்
அதிவேகமா யிறங்கும் என்னை இறுகப் பற்றியிழுத்துக்
கரைசேர்க்க ஈராயிரங் கரம் போதா தெனில் உறும்
குறையிரண்டு போதுமாக வரமருள் மாகாளீ..

பதிவுகள் பெப்ருவரி 2002 இதழ் 26

'14. ரிஷி ' யின் நீள்கவிதை: அகழ்வு

1
மும்முரமாய் வெட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன குளங்கள்.
நவீனமானவை.
சாதாரணக் கண்களுக்கு எட்டாத அளவில்
செயற்கைச் செம்புலம், மஞ்சள்புலம், ஊதாபுலம்
இன்னும் எண்ணிறந்த நுண்நிறங்களில் கட்டமைக்கப்பட்டு,
முன்புலமும், பின்புலமும் கெட்டிப்படுத்தப்பட்டு,
வெட்டி வேர் பரப்பப்பட்டு, கொட்டி நீர் நிரப்பப்பட்டு,
குளங்களாக்கப்படும் இவற்றில்
யாரும் குளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டாலும்
எல்லோராலும் தம்மைக் கழுவிக் கொள்ள இயலாது.
குளத்துரிமையாளருக்கு அறிந்தவர், தெரிந்தவர்,
ஊர்க்காரர், உறவுக்காரர்,
கார்க்காரர், காப்பித்தோட்டக்காரர், அறிவுச்சொத்துள்ள
கல்வியாளர், மில் முதலாளி, வல்வினை முடித்துத் தரும்
தொண்டரடிப்பொடியார்கள், துதிபாடிகள், சாமியாடிகள்,
ஏமாளிகள், கோமாளிகள், என்பாருக்கே.... என்றாலுமென்ன?
குளக்கரைக்கண் அனைவருமே சமம்!
அதில் சிலர் அதிக சமம்.

2
சுற்றிலுமுள்ள படிக்கட்டுகளில் இறங்கியமர்வது
சுலபமாகச் செய்யக்கூடியதாகத் தோன்றினாலும்
உண்மைநிலவரம் அப்படியல்ல.
மேல்படிக்கட்டில் காலடியெடுத்து வைக்கும்போதே

வெளிவாயிற்காவலர்கள்
விவரமாய் அளவெடுப்பார் தோதானவர் தானோ வென..
மட்டைப்பந்து மைதானம்போல்
உயர்ந்த கட்டணமும், தாழ்ந்த கட்டணமும்,
அவற்றிற்கேற்ற தனித்தனி அமருமிடங்களும்,
இருக்கைகளும், நிழற்குடைகளும், குளிர்பானங்களும்
வெளிப்படையாய் காணக்கிடைத்தால்கூட
வியாபாரத் தந்திரங்களாகப் புரிந்து கொண்டுவிட
முடியும்... ஆனால்
இந்தக் குளங்களின் வரையறைகளும், விதிமுறைகளும்
மறைகுறிப்புகளாய் ஒவ்வொரு படிக்கட்டின் உட்புறமும்
செதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதமாய்
அவற்றின் நவீனத்துவமும், தனித்தன்மையும்
அடிக்கோடிடப்பட்டு...

3

அடிக்கு அடி சங்கேத வாசகங்கள்
படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருப்பவர்களின் செவிகளுக்குள்
காற்றுத்தடமாய் இடம்பிடிக்க
விரைந்தவாறிருக்கிறார்கள் தூய்மையாளர்களும்
தூய்மையல்லாதோரும்
தமது எதிர்துருவ நிலைப்பாடுகளை என்றைக்குமாய்
குளத்தில் கரைத்து விட.
ஒன்றே குளம் என ஆயத்த சகோதரத்துவம் பாடியவாறு
செல்லுமவர்கள் வழியெங்கும்
காலுக்குக் கிடைத்தவரை - குறிப்பாக எளியவரை-
மிதித்துப் புடைத்தபடி.
'வாய்மை யெனப்படுவது யாதெனில்' என்ற
கேள்வியின் குரல்வளை
நேற்றே நெரிக்கப்பட்டுவிட்டது.

4

சாலையோரங்களிலெல்லாம் பிச்சைக்காரர்கள்,
தொழுநோயாளிகள்,
நடைபாதைவாசிகள்,
நலிந்த முதியோர்கள்
கதியற்ற குழந்தைகள்,

குடிசைவாழ்மனிதர்கள்,
அதிகதிகமாய் சேர்ந்து
அப்பிய அழுக்கோடு துருவேறியவாறு...
அவர்களை மதித்து கைதூக்கிவிட்டு
குளத்துநீரில் குளிக்கச் செய்து தூய்மையாக்கி
அருகமர்த்திச் சமமாக்க முன்வந்தாரில்லை
யெவரும்...
ஒன்றுமில்லாதானை சொந்தமாக்கிக் கொண்டு
எந்தக் கோட்டையைப் பிடிக்க...?
இன்னின்னது கொண்டு வந்து தருபவரே
கேளிர் காண்.
பெண்ணை வன்புணர்ச்சி செய்தாரேயாயினும்
தன்குளத்துறைவாரெனில்
தண்டனை குறைவு தான்.

5
வேண்டும்போது வெய்யிலை குளிராகப் பொய்யுரைத்து,
'மீண்டும் இதோ ஒரு மெய்ப்பார்வை' என்பதாய்
நீக்குபோக்காகப் பொருள்பெயர்க்கத் தேவையான
எடைக்கற்கள்
குளத்தையடையும் கீழ்நோக்கிய பயணத்தில்
பகுத்தறியும் கைகளிலும் புகுத்தப்பட்டு விடுகின்றன.
தரநிர்ணயங்களுக்கு 'இரட்டை அளவுகோல்கள்'
ஏற்கனவே மரபாக்கப்பட்டாயிற்று.
இந்த நவீன குளங்களின் படிக்கட்டுகளில் சற்றே
இளைப்பாற வேண்டி அம்ர்ந்து கொள்ளக்கூட
ஒருவர் தனது சுயத்தை
தலையைச் சுற்றி வீசியெறிந்துவிட வேண்டும் என்று
வரியிடைவரிகளாய்த் தெரிய வந்த போது
அதிர்ச்சியாயிருந்தது.
அதை வேசியின் கூச்சமின்மையாகப் பகுத்து
மூர்க்கமாய் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்ட கரங்களின்
அணில்வரிகள்
காலத்தின் ஆழத்திலிருந்து மேலெழுந்து வரும்.

6
காரியார்த்தமாய் குளத்திற்கு இருமுறை தமது

தேரிலழைத்துச் சென்றவர்
தெய்வப்பிறவியாகிவிட
கல்லிலும் முள்ளிலும் கூடவந்தாள் தன் கருத்தாய்
சொன்ன ஒரு சொல்லில்
அவள் தலைகொய்யப்பட்டு நிலைநாட்டப்படும்
பேராண்மை இன்றளவும்.
பெய்யெனப் பெய்யா மழையில்
பத்தினித்தனம் பிழையாகிவிட _
பெண்மையைப் போற்றுதும், பெண்மையைப் போற்றுதும்;
புண்ணாக்கி, புண்மையாக்கி பெண்மையைப்
போற்றுதும்;
மண்ணாந்தை யாக்கியும்;
மண்ணோடுமண்ணாக்கியும்.....

7

'ஒரு முல்லைக்கு ஈடாமோ மூன்று பில்லியன் டாலர்கள்?'
என்ற கேள்வி
வெறுமையாய் அலைந்து கொண்டிருக்கிறது
பால்வெளியில்.
குருத்துமூங்கில் தான் அன்பளிப்பாய்த் தரப்படுகிறது-
ரத்தினக்கல் பொருத்தப்பட்டு வைரத்தில் செய்தது...
நித்தம்நித்தம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன
நவீனகுளங்களின் முப்பரிமாணக் காட்சிகள்.
ஆரங்கள் துவாரங்களாய்,
அரைவட்டங்கள் சேதாரச்சதுரங்களாய்,
கண்மயங்கிக் கெட
கீழேகீழே போய்க் கொண்டிருக்கும்
குளத்திலும் காத்திருக்கும்
பாழும்
புதைசேறும்
மூத்திரக் கழிவுகளும்
சுறாவும்
திமிங்கிலமும்
வேறு
பல நூறும்...

காலம் மாறும். *- பதிவுகள் மார்ச் 2008! இதழ் 99! -*

15. 'ரிஷி'யின் நீள்கவிதை பொம்மிக்குட்டியின் கதை!

1

தலையாட்டி பொம்மைகளை யாருக்குத் தான் பிடிக்காது?
அதுவும், சின்னக்கண்ணனின் பொம்மை அத்தனை கலைவண்ண
கைநேர்த்தியோடு
கிடைக்கோடாய் அசைவதைத் தவிர்த்து
மேலுங்கீழுமாய் மட்டும் முகம் ஆட்டிக் காட்டும்!
எதைச் சொன்னாலும் கண்சிமிட்டிப் புன்சிரிக்கும்.
கைகால் இயக்கங்களெல்லாம் குழந்தைக் கண்ணனின் மனம்
போன போக்கில்; அல்லாது தலையாட்டி பொம்மைக்கு
ஏது தனிப்பட்ட இயக்கம்...?
குறும்புச் சிறுவனின் கைகளிலும், மடியிலும்
தயக்கமில்லாமல் பொருந்தியமர்ந்திருக்கும்.
தனக்குப் பிடித்தமான பெயரை தலையாட்டி பொம்மைக்குத் தந்து
அதைத் திரும்பத் திரும்பக் கூவியழைத்துக்
குதூகலிக்கும் குழந்தை...
"பொம்மிக்குட்டீ வா.. வா.. பூ பூவாய் முத்தம் தா..."
பஞ்சுப்பொதியாய் பொம்மையின் உடல்.
பிஞ்சுக் கைகள் மென்மையாய் வருடித் தரும்.
துஞ்சும் நேரமெல்லாம் பொம்மிக்குட்டியைத்
தன்னருகே பத்திரப்படுத்திக் கொள்வான் சின்னக் கண்ணன்.
ஆனா- ஆவன்னா, A B C, 1 2 3...

அவனுக்குத் தெரிந்தமெல்லாமும்
சொல்லித் தரப்படும் பொம்மிக்குட்டிக்கும்.

2

பள்ளிக்குப் போய் வந்து கொண்டிருந்த சின்னக்கண்ணன்
கூடப் படிப்பவர்களைப் பற்றியெல்லாம் தினமும்
வீடு திரும்பிய பிறகு
வண்டிவண்டியாய் பொம்மிக்குட்டிக்குக் தவறாமல் கதை சொல்வான்.
கண்கொட்டாமல் கேட்டுக் கொண்டிருக்கும் பொம்மிக்குட்டி.
அடிக்கொரு தரம் தலையை ஆட்டும் - மேலுங்கீழுமாய்.
"அச்சுதன் அடித்தான், அவனைத் திருப்பியடித்தேன் - சரிதானே?"
"ஆம், ஆம்". ஆனால்...
"முகுந்தன் என்னுடைய பென்சிலை உடைத்துவிட்டான் என்பதால்

அவனை நையப் புடைத்து விட்டேன்" என்று சின்னக் கண்ணன்
சொன்னபோது
செய்த குற்றத்திற்கு தண்டனை அதிகம் என்றுதோன்றியது
பொம்மிக்குட்டிக்கு. சற்றே தயக்கமாய்
தலையை ஆம் - இல்லையாய் ஆட்டியது பொம்மை.
உயிருள்ளது பொம்மை என்று நம்பும் சிறுவன் கொஞ்சம்போல்
திகைத்துச் சினந்தான்.
தகப்பன்சாமி தான் என்றாலும்
"எனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காய் தருணுடைய கையைக்
கடித்துக் குதறி விட்டேன், கத்தியாலும் வெட்டி விட்டேன்"
என்று பெருமைபீற்றிக்கொண்டபோது
பொம்மிக்குட்டியின் தலை தவிர்க்கமுடியாமல் இடவலமாய்
ஆட ஆரம்பித்ததைக் கண்டு
மட்டுமீறிப் புகைந்த கோபத்தில் சிறுவனின் கரம்
பொம்மிக்குட்டியின் சிகையைக் கொத்தாய்ப் பிடித்து
கதவிற்கு அப்பால் வீசியெறிந்தது.
'பதிலுக்கு புதிய பொம்மைகள்
காசு கொடுத்தால் கிடைத்துவிட்டுப் போகிறது...
அதுவும், ஓசியில் கிடைத்ததுதான் பொம்மிக்குட்டி.
போதாக்குறைக்கு, நிறைய நைந்துபோய் விட்டது.

ஆய் பொம்மை; பீத்த பொம்மி..'

3

காரிருள் கவிய விழுந்தது விழுந்தவாறு
கிடந்தது பொம்மிக்குட்டி.
முதுகெலும்பு முறிந்ததுபோல் ஒரு சுளீர் வலி படர
உயிர்ப்பின் அடையாளம் பொம்மைதானோ வென
தனக்கெட்டிய பட்டறிவில் படித்துக் கொண்ட
விடையே கேள்வியாக அனத்திக் கொண்டிருந்தது நெடுநேரம்.
பின், கனவே போல் காற்றுத் தடத்தில் கிளம்பிச் சென்று
கதவிடுக்கில் மனம்நுழைத்துப் பார்த்தது.
பரிச்சயமான அறை.
பழகிய சின்னக்கண்ணன் வழக்கம்போல்
கைகொட்டிச் சிரித்தவாறு கட்டளையிட்டுக் கொண்டிருக்க,
எதிரே

சாவிகொடுத்தால் ஓடும் பொம்மை_
சல்யூட் அடிக்கும் பொம்மை_
சிரியென்றால் சிரிக்கும் பொம்மை_
சீறிபாயச் சொல்லி தள்ளிவிட்டால்
சரவென்று நெளிந்தோடும் நாகப்பாம்பு பொம்மை_
குத்தினாலும், எத்தினாலும் சத்தமெழுப்பாமல்
சிறுவனின் வீரசாகச் செயல் என்பதாய்
பெருமையில் பூரிக்கும் கைதட்டி பொம்மை_
'வெல்கம்' பொம்மை,ரிம்-ஜிம் நாட்டிய பொம்மை_
பெருந்தனக்காரர் பரிசளித்த பொம்மை_
பல வருடங்களுக்குப் பிறகு சாவகாசமாய் ஊரைப்
பார்க்கத் திரும்பி வந்திருக்கும் உறவொன்று
வாங்கிவந்த பொம்மை_
விரல்சொடுக்கிற்கேற்ப விரைந்தோடி
சுவற்றில் முட்டி நிற்கும் பொம்மை_
அலங்கார பொம்மைகள்,அவதார பொம்மைகள்_
வைக்கோல் பொம்மைகள், வெண்கல பொம்மைகள்_
பைக்குள் போட்டுக் கொள்ளுவதற்கேற்ற சிறிய பொம்மைகள்_
பூதாகார கரடி பொம்மைகள்...

4

அறையில் ஒரே நெரிசலாயிருந்தது.

பிடிக்கவில்லை யென்று கடித்துத் துப்பியிருந்த பொம்மை
பரணிலிருந்து கீழே இறங்கி வந்திருந்தது.
பல ஆண்டுகளுக்கு முன் இன்னொரு குழந்தையின்
கைக்குப் போய்ச் சேர்ந்துவிட்ட பொம்மையும்
அருகமர்ந்து கொண்டிருந்தது.
கிழிந்த பொம்மைகள் சிலவற்றிற்கு
ஆயத்தஆடைகள் அணிவித்து
அழகுபார்த்துக் கொண்டிருந்தான் சின்னக்கண்ணன்.
சிறுவனின் கண்களே உதடுகளாய், வெளிப்பட்ட கூற்றுக்கு
மாற்று குறையாமல்
ஆடிக் கொண்டிருந்த தலைகள்
பொம்மைகளின் மேலும், கீழுமாய்.
காரியார்த்தமாய் வால்களைச் சுருட்டிக் கொண்டு
கூர்வளைநகங்களை செல்லப்பிராணிகளாய்

உள்ளிழுத்துக் கொண்ட வாக்கில்
அமர்ந்துகொண்டிருப்பவைகளைக்
காட்டும் அடையாளம் காலம்
எனப் பின்னேகி
பஞ்சுப் பிரிகளாய்
வெளியில் கலந்து திரியும்
பொம்மிக்குட்டியின் குரல் எட்டுமோ
உன்னை என்னை நம்மை...?

"நீயும் பொம்மை, நானும் பொம்மை,
நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை"

16. ஒரு சல்லடையும் சில கவிதைகளும் செயல்முறை விளக்கம்! - ரிஷி -

தேவை சில கவிதைகள்
இரண்டு பூதக் கண்ணாடிகள் -
வரிகளில் துருவ ஒன்று. வரியிடை வரிகளில்
துழாவ ஒன்று
ஒரு சல்லடை
ஆளுக்கு இரண்டு அல்லது
மூன்று கைகள் வெண்டுமானாலும் -
குறிப்பெழுதவும். பட்டியல் தயாரிக்கவும்.
தாளும். எழுதுகோலும்
அருகே இருக்கும்படியாய் ஒரு குப்பைத் தொட்டி
தயாராய் சுவடரில் தொங்கிக் கொண்டிருக்கட்டும்
ஒளிவட்டங்கள்|
ஒரு சில பட்டங்கள்
முடிந்தால் கைவசமிருக்கட்டும் ஒரு
'மெட்டல் டிடெக்டரு'ம்!

சல்லடைக்குள் கவிதைகளையிட்டு கைபோன போக்கில்
சலிக்கவும்
சலிப்பதற்கு முன்பும் பின்பும் மறவாமல்
இரண்டு
பூதக் கண்ணாடிகளாலும்
கவிதைகளில் இடம் பெறும் குறிப்பிட்ட சில வார்த்தைகளைக்
கட்டாயம் துருவவும்.

முடிந்தால் ‘மெட்டல் டிடெக்டரைப்’ போல் ஏதாவது ஒன்றைக்
கையாளவும் செய்யலாம்.
சலிப்பதன் வழி சல்லடைக்குள் சேகரமாக வேண்டியது
சாரமா. சக்கையா என்பதைக் கவனமாகத்
தீர்மானித்துக் கொண்ட பின்
அதற்கேற்ப சல்லடைத்துளிகன் அளவைக்
கூட்டியோ குறைத்தோ வெட்டி விட்டுக் கொள்ள
வெண்ழயது முக்கியம்·
அல்லது. சல்லடைக்குள் எஞ்சும் நல்லதையஜம்
வெளியேறும் கசடையும்
கலந்து கட்டி கழிசடையாக்கி
கட்டுரை. கருத்தரங்க வாணலி வகையறாக்களில்
~பினாயிலிட்டு. பெட்ரோல் ஊற்றி வதக்கிக்
கரித்து முடித்து பின்
குப்பைத்தொட்டியில் மொத்தமாய்க்
கொட்டி விடவும்.
பின் வழக்கம் போல் புத்தம்புதிதாய் சில பெயர்களை
கைவசமிருக்கும் ‘நச்சுவித்துக்கள் ’ பட்டியலில்
இடம்பெறச் செய்து
முத்தாய்ப்பாய்
சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் பட்டங்களை
முன்னும் பின்னும் குத்திக் கொண்டு
கச்சிதமாயொரு முத்திரை பிடித்தவாறு
ஒளிவட்டங்களை உங்கள்
தலைகளுக்குப் பின்னால் சுழல விட்டுக் கொள்ளவும்.

பதிவுகள் ஆகஸ்ட் 2005 இதழ் 68

17. ரண களம். - தாஜ் -சீர்காழி-

எம் மக்களுக்கு
நவீனச் சித்திரங்கள்
புரிவதே இல்லை.
தீர அறிந்தவர்களோ
எப்பவும் மௌனம்.
இப்பவும் அத்திகளே
முழங்கும் சபையலங்காரம்.
மனிதர்களை பூதங்களாகவும்
பூதங்களை மனிதர்களாகவும்
உரக்கக் கணிக்கின்றார்கள்.
இறுகலான காட்சிகளின்
அமைப்பியல் அப்படி.
ஒடுக்கப் பட்ட குரல்களின்
கொந்தளிப்பான வடிவம் தான் அது.
துண்டாடப் பட்ட ஜீவன்களால்
நிறம் மாறிய பூமி-
ஊரின் பரப்பை விழுங்க-
காணும் கல்லறைகள்-
வானை முட்டும்
கந்தக மேகம்-
தீய்க்கப் பட்ட பசுமை-
வீழ்த்தப் பட்ட ஆலம்-
துவசமாகும் பூங்கொடிகள்-
அங்கே ஓடித் திரிந்து
வாழ்விடம் தேடும்
ஊனக் கிளிகளின் படபடப்புமாய்
கோரப் பிடியில் இறுகுமது
சகோதரக் குடாமண்.

ஆவணி 2000 இதழ்-8

18 - 24. சித்தார்த்த 'சே' குவேரா கவிதைகள்(*இயற்பெயர்: இரமணிதரன், கந்தையா. திண்ணைதூங்கி, சிசேகு* ***சித்தார்த்த 'சே' குவேரா*** *ஆகிய புனைபெயர்களிலும் எழுதுபவர்)*

18. அப்பா - சித்தார்த்த 'சே' குவேரா

நீண்ட காலத்தின்பின்
நேற்று அண்ணாந்து
வானம் பார்த்தேன்.

நடு விரலிடை வைத்து
வாய் அகல் V ஆக வளைத்த
நீள்கோடொன்றில்
அம்மூவுடுக்கள்.
ஆயினும், அப்பா,
நீங்கள் சொன்னதுபோல்,
அவை பின்னாய்,
வானில் இருந்து
ஏது விமானங்களும் இறங்கவில்லை;
விண்ணவர் பெயரில்
வெள்ளிக்கிரகவாசிகளும்
மினுங்கவில்லை.
ஆனால், அவற்றிடை
மங்கிக் கிடந்தது
ம(¨)றந்துபோன
ஒரு முகம்.

மறந்துபோன
பௌதீக இரசாயனச் சூத்திரங்கள்,
ஊக்கி, வெப்பவுள்ளுறை, மாற்றீடு
தேவையின்றி வீதிச்சந்துகளில்
ஊக்காமலே மாற்றீடற்ற
வெப்பம் உள்ளுறை சுடுநீர்க்கிணறென
ஞாபகத்திற்கு வந்திருந்தன.

கூடவே,
வீட்டோரக்குப்பைத்தொட்டி அருகே

குவிந்திருந்த பச்சைமேனிப்புல்லுக்கெல்லாம்
தாவரவியற் பெயர் தேடிக் களைத்திருந்தேன்.
அந்தமுகமும் அதற்குரிய மனிதர் பெயரும்
அதனோடான என் உறவும் மட்டுமே
நினைவுத் துண்டு துண்டாய்
ஞாபகத்திற்கு வந்து விழுந்தன.
துளியாய்க் கீழ் இமையிற்
சில கணம் தொங்கியன.

கடல் நண்டு,
கரை மண் மேல் நின்றுபிடிப்பதும்
நினைவில் எழுந்தது.
அதைக் கூட
மணற் குன்றில் எழுப்பிய
கோட்டையுடன் சேர்த்துக்
கால அலை
கொடூரமாய்க் கொன்று தின்றது.
அன்று
நீங்கள் சொன்னதுபோல்,
என்னை விஞ்சிய
இயற்கையை அஞ்சி
இன்றும் நின்றேன்
நான் மட்டும்,
தனியே இங்கு மிஞ்சி.

தொலைவு நகர்ந்தபோதும்,
என் மேய்ச்சலுக்கான நிலம்,
நூல்நிலையம்,
பழைய நூற்கடை என்றாகிப்
போயிருக்கக் கேட்டீர்கள்.
நூற்கடையில் நேற்று நிற்கையிலே
கூட நின்று கூர்மூக்குள்ள நிழலொன்று நெய்திருந்தது,
நெஞ்சில் நெகிழ் ஆடையொன்று,
முன்னை நினைவெல்லாம்
நெய் ஊசி முனை என் உள்ளம் தைத்திருக்க.
"தூய காரணங்கள்" என்னுட் தோற்கக்கண்டேன்;
துவண்டேன், மீளொரு பையெடுத்து

சனி காலை, சித்திரக்கதைகளும்
சின்ரல்லாச் செருப்புக்களும் உள்நுழைத்து
துவிச்சக்கரவண்டியிலே பின் இருக்க
அவதியிற் துள்ளிக் கிடந்த
ஒரு பையன் நொய்மனத்தே,
நேற்று ஒரு நாள்
பெற்றவன்
அருகே சுற்றி இராக்
குற்றம் தந்த வெப்பம் உட்பிறக்க.

காற்றில் கரியாய்க் கலந்து பாதி,
மீதி கடல் அலையில் கரைந்து ஒளியும்
என்றாகி இயற்கை,
கொடிதாய்ச் சாற்றும் மொழியாப் போனபோதும், போட்ட
நாற்று வளரும் என் நினைவில், செயலில்,
கொடி பந்தலாய்ப் பரவி, மேலும் விதை
போட்டு முளைக்கும் இன்னும் பல பந்தல்
பிறர்க்கு நிழல் பார்த்துக் காத்திருக்க.
அது எண்ணி,
ஊருக்கு உத்தமனாய் வாழ்தலுக்குப் பக்குவம் அற்றாலும்
ஒரு மனிதன் மனம் உணரும் சக மனிதனென
இதுவரை நாள் நிலை தடுமாறா
நேர்கோட்டுப் பாதையிலே நின்றகலா
நிழலாய் நின்று வழிகூட வந்ததற்கு
நன்றிகளுடன்
நான்.

- '98 ஆவணி 23, ஞாயிறு.
ஆனி 2000 இதழ்-6

19. கிளிப்போர்வீரன் -சி'சே'கு-

காலைத்தூக்கத்தின் கடைசியிலே
தனிக்கிளிப்போர்வீரன் கழிசுற்றி
வழிபோகக் கண்டேன் நான்;
அகல விழி கொண்டேன் பின் விரைந்து.

மெல்லாமலே மிரட்டுஞ்சொற்களை,
கூவித்தின்றும் கூட்டித்துப்பியும்
குறுக்கும் நெடுக்கும்
கொண்டுபோனான்;
கொட்டிக் கொட்டிக்
குதறிக்கொண்டும்கூட.

தனக்கு வெந்ததையே மீளமீள வெக்கைப்படுத்திப்போனான்;
சொல் மாளச் சொல் மாள, பையெடுத்துச்
சொன்னதையே வன்கதியிற் சுற்றிப்போனான்.

இல்லாத கேள்விகளுக்கும் இந்தா பதிலென்று
எடுத்தெறிந்தான் இங்குமங்கும்.
எதற்கு இதுவென்றால், அதற்குமோர்
அந்தரத்தே தான் தங்கும் அசிங்கப்பதில் தந்தான்.

வந்ததுவும் போனதும் தன்னடைக்கே தெளிவு என்றான்;
என்னதுவும் உன்னதுவும் எல்லாமே பொய்யென்றான்.
கண்ணைத் திறந்தால் கூர்க்காற்கைகொண்டு பொத்தினான்;
நான் நிலவைக் காணத்தானே தான்
கண்ணைக் கொண்டு பறத்தலென்றான்.

தத்தித்திரிந்தான் முன்னுக்கும் பின்னுக்கும்;
முடுக்கத்தில் முக்கிக் கழித்தான் சொட்டெச்சம்;
முரமுரவென்று மூக்குள் மூச்சோடு முனகினான்.

எந்த வினைக்கும் எதிர்ப்பட்டாரைக் குறை சொன்னான்;
தன் வினைக்கு முன்வினையைத் தானே முன்வைத்தான்.
கழுத்தைச் சுழித்தான்; சரித்தான்; வட்டக்கண்ணைப் படபடத்தான்;
அடர்ந்த அலகைமட்டும் அவதியிலே கொறிக்க வைத்தான்.

இறக்கை தறித்த கிளிப்போர்வீரன் தத்தலுக்கு,
ஏட்டுச்சுவடியினை இழுத்துக் கதை சொல்வதற்கு,
என்னத்தைப் பதிலாக இங்கே எழுதிவைக்க?

"அவதி அலகை மூடிக்கொள்; அறுந்த சிறகை முளைக்கச்சொல்;
விரைந்து பறக்கக்கல்; வெளியை மிதிக்கச்செல்.

கொறித்துக் கொறித்துக் குறை கொட்டித் திரிதலுக்கு,
கொவ்வை ஒன்றை ஒழுங்காய் எடுத்துருட்டி,
உண்டலகு மென்று தின்று மூடிக்கொள் நா"
என்றால் கேட்குமா இறகறுந்த அலகுக்கிளி?

தனிக்கிளிப்போர்வீரனின் போர்வையெல்லாம்
கேட்டலும் கிழித்தலும் பிதற்றலும் பீய்ச்சலுந்தான்.

"கழிசுழற்றும் கிளியெல்லாம்
கிண்ணிக்களி தண்ணீர்ச்சுனை
கண்டால்,கொண்டால்
என்ன செய்யும்?
என்னைப்போல்,
தின்னுமா, குளிக்குமா,
தினவெடுத்துத் திரியுமா?
என்ன சொல்வாய்?"
என்று கேட்டேன்.
பதிலொன்றும் சொல்லாமல்
காலைத்தூக்கத்தின் தனிக்கிளிப்போர்வீரன்
கழிசுற்றி கடந்துவழிபோகக் கண்டேன் நான்;
அசரும் விழி மூடிக்கொண்டேன்.
மோனத்தில் என்னைமட்டும்
மோகித்து மொத்தமாயொரு
வட்ட முடிச்சிட்டிருந்தேன்
மிச்சவிடிநேரத்துக்கு.

ஜூலை 2001 இதழ்-19

20 சித்தார்த்த 'சே' குவேராவின் (அ)கவிதைகள்

பழைய தெருவுக்கு மீண்டும் தயிருடன்
கூவிக்கொண்டு வருகின்றான் இடையன்.

கடையக் கடைய வழிந்த வெண்ணெயைத்
தொலைத்தபின்னால், முன்னர் மீந்த தயிரை
பின்னும்
இன்னும்

விற்றுப் பிழைக்கும் கலைஞன்.
தெரு தூங்கிக்கிடக்கின்றது கிடையாய்க் கைவிரித்து,
அடித்தோய்ந்து தூங்கிய அரவச்சாட்டையாய்
செட்டைச்செதில் உதிர்த்தும் உரிக்காமலும்.

மேலே விரலொட்ட வொட்ட விற்றுப் போவான்,
புளி சொட்டிக் கண் சுருக்கும் தயிர் - இடையன்.

வீதிக்கு, வீட்டுக்கு விலைப்படுகின்றபோதும்
இவனுக்கு எண்ணமோ, இன்னும்
கடையச் சடைத்துத் தொலைந்த
கட்டி வெண்ணெயில்.

காலமும்கூடக் கடவாய் கசியக்கசியப்
புசிக்கும்
வெண்ணெய்.

*** *** ***

விரல்கள் மட்டுமே இருக்கின்றவர்களுக்கு,
சொற்கள் மட்டுமே தேறும்.
கோர்த்த சொற்களைக் குலைத்து,
குலுக்கிப் போட்டு மீட்டுக் கோர்த்தாலும்
சேர்ப்பது விரல்கள் மட்டுமே என்றானால்,
சொற்கள் மட்டுமே குவியற்கற்களாய்த் தேறும்.

விற்காத சொற்களையும் வினையாத விரல்களையும்
வீணுகு வைத்துக்கொண்டு விளைமீனுக்காய்க்
காத்திருக்கும் கொக்கொன்றினது எனது கால்.

*** *** ***

இறந்தபின்,
எனது கடிகாரத்தை முறித்துவிடு
காலம் கடந்தபின் அ·துனக்குக் காட்டப்போவது,
நிழல்களுக்கு மட்டும் நினைவு படரும் நேரங்களை
என்றாகக்கூடும் என்று புரிந்து கொள்கின்றேன்.

நான் கடந்து போனபின்,
காற்தடயங்களை மணலுட் புதைத்துவிடு.
அந்த அடிகளிற் தொலைந்த மணலையெண்ணி
திசையை மறுக்கக்கூடும் என் தேசத்தை
எண்ணிப்பார்க்கமுடிகின்றது எனக்குள் இப்போது.

முடிந்துபோனபின்,
என் முகத்திரையைக் கிழித்துவிடு.
உள்ளுக்குள்ளொரு முகமில்லை,
உறைந்த குருதியும் நிணமும் சதையுமே
உருகி வழியக்கிடந்தது ஒவ்வொருவர்போலவும்
என்று உலகறியக்கூடட்டும் என்றென் விழைவு.

என் முடிவு மூச்சுக்காற்றை
வெளியிலே கலந்ததற்காகக்கூட
கவலைப்படுகின்ற நாட்டார் வாழக்கூடுமானால்மட்டும்,
என் பெயரால் அவர்க்கு உரத்துச் சொல் ஒரு கூற்று,
"கட்டின்றி களிப்பில் புடைத்து அலையும் பொருள்
புவிமேலே என் அடிக்காற்று."

தேசக்காற்றையும்கூட திசைபற்றித் திருப்பி
இழுத்திறுக்கிக் கட்டவிரும்புகின்றவர்களுக்காக,
நீயும் நானும் கவலைப்படமுடியாது காதலி.

*** *** ***

மரணச்சாலைக்கு முன்னால் நிற்கும்
மணிக்கூட்டினைப் பற்றி
நான் எண்ணிக்கொள்வதுண்டு.

ஓய்ந்துபோனவர்கள் நிமித்தம்
உள்வாய் கைபொத்தி உறைந்து
கிடக்கும் மரணக்கூட்டு இருட்டில்
ஓடிக்கொண்டிருக்கும்
ஒரு மணிக்கூண்டினைப் பற்றி
நான் எண்ணிக்கொள்வதுண்டு

இல்லாமையைத் தேக்கி நிற்கும் நிலத்திலே
இருப்பில் நிலைத்துப்போன நசிகாலநினைவு,
தனித்திழுத்து ஓசை உச்சந்தலையிடிக்க-
பகைவர்கூட்டத்தின் முன்னர்,
ஒற்றையாளாய் வாளை ஓங்கிக்கொண்ட
ஒரு வீரனின் உயிர்த்துடிப்பாய்
- எண்ணிக்கொண்டதுண்டு
அந்த மணிக்கூண்டை.

வாளெடுத்துப் பொருதும்
வீரர்களும் வயதேறிச்
சாவது வியப்பல்ல.

செத்தபின்னும் சில
சீவிப்பதும் அதுபோல.

*** *** ***

தொலைவில் நகர்கின்ற புகையிரத்தின் சாளரக்கரையிருக்கும்
பயணிக்குத் தோன்றும் எண்ணங்களைப் பற்றி
என்னிடம் எத்தனை முறை கேட்டிருப்பாய்?

கேட்கின்றபோதிலே, அவன் மனைவியைப் பற்றி,
அவள் குழந்தையைப் பற்றி, அவர் வேலையைப் பற்றி
எதையெதையோ பற்றி என்று சொல்லிக்கொண்டிருக்க
எனக்குத் தெரிந்திருந்து பற்றி என்றைக்கும்
இரதம் கடந்த அடுத்த கணங்களிலே
எண்ணிக்கொண்டதில்லை நான்.

நகரும் புகையிரதத்துக் கரையில் நான் இருக்கையிலே
"என்ன எண்ணுகின்றேன் என்கின்றாய்?" இன்றைக்கும் நீ.
நடைபாதையிலே அவளோடு நகரும் அந்த அவன்
என்ன எண்ணிக்கொண்டிருப்பான் என்றுமட்டும்தான்
எனக்கு எண்ணத்தோன்றுகின்றதென்றதைச் சொன்னால்,
என்ன எண்ணிக்கொள்வாய் நீ?

*** *** ***

ஒரு கறிவேப்பிலைச்செடியாகப்
நான் உனக்குப் பிறந்துவிட்டதற்காய்

நீ மட்டும்தான் அழுதுகொண்டிருக்கின்றாய்
என்று எண்ணிவிடாதே அம்மா!
நானும் கூடத்தான் தூரத்திலும்கூட
அறையை அவதானமாய்ச் சாத்திவிட்டபின்னர்.

ஊற்ற ஊற்ற துளிர் ஊறாது உற்றுப்போவேன்
என்று பார்த்து, காத்து, பொத்தி முளைக்கு
முலை புகுத்திச் சொட்டுச் சொட்டாய்
உயிர் பருக்கிய மொட்டுக்காலங்களை
நீ எனக்கு சொல்லிக்காட்டப்போவதில்லை
என்றபோதும் தட்டிக்கொண்டேன் இருக்கின்றது
என் நடையொற்றிலும் தடுமாற்றத்தடை.

சடைத்து மணத்துக்கொள்ளமுன்,
உடைத்துச் சிதைத்துப் போனவைக்கும்
தப்பிக் கிடந்து முளைத்து கிளைபெருக்கிச்
சுற்றிக்குட்டி தழைத்துப் போன நேரத்திலும்
அடித்துக்கொள்கின்றது இவர்கள் பறிக்கின்ற
ஒவ்வாரு குருத்திஇலைக்கும் அடிக்குறியென்றால்,
மரத்தை, முடிவாய்த் தொலைத்ததுபோல, காலத்
தொலைக்கு தத்துக்கொடுத்த அம்மா, நினைவில்
அடித்துமட்டுமோ கொள்ளும் உன் அகம்?

*** *** ***

காலைப்பொழுதில் உருமாறு மீள்வட்டச்செய்கை.

எழுதிய களிமண்பலகை இளக்கிப் பிசைந்து
பிதுக்கிச் சமைத்த எழுதுபலகை.

உருக்கிய இரும்பை கரியுடன் பிணைத்து
உருக்கி உருக்கித் தின்ற உடலின் தொழில்.

தினவட்டத்துள் சலித்துப் புழுக்கும் சிந்தனைகள்;
தின்று மடிந்து மடிந்ததைத் தின்று பிறந்து வளர்ந்து
தின்னவேதுமின்றி இறந்ததைத்தின்று பிறந்து
தினவட்டத்துள் புழுத்துச் சலித்து கலித்துகொட்டும்

சிந்தனைகளும் செயலும் ஒன்றையொன்று வெறுத்திருக்கும்.

பிசையமுடியாப் பிண்டப்பண்டமானபோது,
உருக்க ஒழுகா தடித்த முண்டமானபோது,
உருக்கும் களியும் உருகிக் கழியும்.

ஒரு மாலைப்பொழுதில்,
ஓய்ந்துபோய் முற்றுப் பெறும்
மீள்வட்டச் செதில்.

*** *** ***

உருவிக்கொள்ளும் தீ பரவித் திரியும்
எரியும் கொள்ளி தேடி.

இறந்த எலிகளுக்கு உயிர்மீள வரம் தருகின்றோம்
எனக்கூவும் பாசிகளின் மேலாகப் படரும்
பாசிசாயத்தாள் நீலமும் செம்மையும்
மாறி மாறிப் படர.

இருக்கின்ற புறாக்களுக்கு ஒரு கரண்டி நீர் வார்க்கமுடியாதவர்கள் ,
இறந்த உடல்களைக் கிண்டிக்கொண்டிருக்கின்றார்கள்,
உயிர்கொடுத்து நடத்தி நாடகம் ஆட்டப் பாவையாக்க.
மரங்களை அறுத்துக்கட்டிய மண்டபத்திலே
வனங்களை வளர்ப்பது பற்றிப் பாடம் நடத்துக்கின்றோம்.

என்னை மூட்டைப்பூச்சிக்குள் முளைக்கவைத்தவனையிட்டும்
இன்றைக்கு நான் கவலைப்படுக்கின்றேன்.
மூட்டைப்பூச்சிகளைப் பற்றி மெத்தைகளோ மனிதனோ
கலைப்படாதது பற்றி நான் கவலைப்படமுடியாது,
அவற்றைப் படைத்திருக்கக்கூடிய அவனே
கவலைப்படாதபோது.

மரங்களும் மூட்டைப்பூச்சிகளும் ஏதோ காராணத்துக்காக
தோல் எரிந்தோ அறுந்தோ உரிந்தோ போகலாம்.
காரணங்கள் தாமாக இருக்கின்றவையல்ல,
திரிந்தலைந்து தேடிக் கண்டு தரப்படுகின்றவை.

எலிகள் உயிர்க்க, இறந்துபோம் மூட்டைப்பூச்சிகள்.

பதிவுகள், தை 2001 இதழ்-13

21. வகிட்டுக்கோல் - - சிசேகு-

இதுவரை நாள் என்ன செய்தேனென்று
இனியாவது என்னைக் கேள்;
எங்கே என்பதையும் கூட,
இனி வரும் ஒரு கணம்
அறுத்துறுத்து
என்னிடம் வருத்திக் கேள்.

சுடுநீர் கொட்டுமொரு வேளை,
குளியற்றொட்டி நீர்த்துளை மூடும்
கற்றை உச்சந்தலைமயிர்
உதிர்வை ஒரு வசவிட்டுச் சபிக்கமுன்
என்ன செய்தேன் என்பதை

எதிர்த்துக் கேள்
என்முகம் முன்னே.
பெருங்கடலைக் கரமடங்கு பையுக்குட் பொத்தி வைத்தலைவிட்டு,
தேங்கிய ஆறுகளில் வெகுதீவிரமாய், நீளக்கை உராய்ந்து காந்திட
வீண் புண்கோடுகளை இழுத்துக்கொண்டலைந்தேன்
இருபுறமும் சங்கிலியாய்.

சரிவுருளும் வளையத்துள் எதிர்ப்புறமாய்
உடலினிலே ஒளிக்கவும் ஒன்றுமின்றி
உலுப்பியுலுக்கி ஓடித்திரிந்திருந்தேன்;
காற்றைச் சாடுதலைக் கை வீசோலைக்கீற்றொலியில்,
தனித்துக் களித்திருந்தேன் அகத்துள்ளே நான்.

இயலுமன்றால், இனி இங்கே என்னிடம் ஊர்ந்து வா.
இறந்த காலம் பற்றி எதையும் சொல்லக் காத்திருப்பேன்
திறந்த மனதுடன் நான் - தேவையென உனக்குப் பட்டால்.

ஆனால், நெரிந்த புருவத்தை நீட்டி நேராக்கி,

சென்றகாலத்தைக் கந்து பிரிக்கச்சொன்ன
வகிட்டுக்கோல் கை வசப்பட்டு வருதற்காய்
என்ன எண்ணினேன் என்று மட்டும் கேளாதே.

தடித்த இடி தொடுத்துப்படரமுன் வால் வெட்டித்துடித்து
வீச்சுமின்னல் பாய்ச்சல் ஒளிக்கமுன்னர்
அதன் தடிப்பம் வளப்பம் பிடித்துக் குறிக்கச்சொன்னால்,
என்ன செய்வாய் என்று மட்டும் கேட்டுக்கொள் உன்னை
- எனக்கொரு சொடுக்கு வகிட்டுக்கோல்
சொக்க வாலாயப்பட்டதை நினைக்கும்போதெல்லாம்.

மீதிப்பட,
துறந்த காலம் பற்றி எதையும் திறந்து சொல்லக் காத்திருப்பேன்
பரந்த உளக்களத்துடன் நான் - தேவையென உனக்குப் பட்டால்.

பதிவுகள், செப்டெம்பர் 2001 இதழ் 21

22. வழுப்படு தலைப்பிலி - சித்தார்த்த 'சே' குவேரா

என்ன சொல்லக்கூடும்?
ஏற்கனவே தெரிந்ததுதான்...
இதற்குத்தானா?
இவ்வளவுதானா?
என்ன செய்யக்கூடும்?
எதுவுமில்லை.
இம்மியளவும் அசையவில்லை,
காற்புல்லும் கைவிரலும்.
என்றாலும் வெளியே
சொல்லிக்கொள்ளமுடியாததென்னவோ,
இழந்த நாளும் இரைந்த எண்ணமும்தான்.
விக்கிரமாதித்தன் தோளிலே ....
..... வேறென்ன?
தோல் திரும்பிப்போட்ட ஆரம்ப வேதாளம்.
அதே!

வழுப்படு தலைப்பிலி -II

அவரவர் வாசலிலே சுடுமரணம் நிற்கிறது.
விரல்களைப் பற்றி விபரித்துக்கொண்டிருக்கிறேன்.
நகக்கண்ணிலே முளைக்கக்கூடிய பருப்புத்தாவரத்தைப் பற்றிய
நொண்டிப்பாட்டாக இருக்கிறது எனது மொழி.
கவரப்பட்டவை பற்றியும் பேசுகிறோம்;
கவர்ந்தவை பற்றியும் கலந்தாலோசிக்கிறோம்.
கொடுமரணம் மெல்ல நிழலுக்குள் முகம் புதைத்து நிற்கிறது.
எல்லாருடைய பெயருக்கும் எழுமூலம் குறித்துக்கொண்டிருக்கிறேன்;
என்னிடம் ஏனென்று கேட்கக்கூடாது -
ஆனால்,ஏற்கனவே இன்னார் இன்னாரென எல்லாம் எழுதியாகிவிட்டது.
மரணம், மதியத்துப்பள்ளிக்கூடப்பிள்ளைகள்போல,
தெருமதிலுக்குப் முன்னாலும் பின்னாலும் முகத்தையும் முதுகையும்
ஆட்டிக்கொண்டிருக்கிறது.
இன்னும் கரைந்து கொண்டிருக்கிறது நேரம்,
சீனி திகட்டத்திகட்ட தேநீர் புகட்டிக்கொண்டு
பேசிக்கொண்டிருக்கின்றோம்
பெருமிதம் பிடுங்கியடுத்த பெரும் பழங்கதை.
மடக்கமுடியாமல் மரணம் தன் மனத்தோடு ல்லுக்கட்டிக்கொண்டிருக்கிறது.
"எல்லா அத்தியாயங்களும் எப்போதோ எழுதிமுடித்தாகிவிட்டது"
என்று நகர்கின்ற தெருவிலே படரும் யாரோ சொல்லிக்கேட்கிறது.
நாமோ விடுவதாயில்லை விரல்களின் வீரப்பிரதாபங்களின் விபரிப்பை.
செவிக்குள் ஊதுகிறது வெண்சங்கு; சேமக்கலம் சாபம்போட்டதுபோல் சத்தம்.
தருணம் பார்த்து மரணம் தட்டும் முன்வாயில்.....
..... நீ திறக்கிறாயா,
இல்லை,
நான்தான் போகவேண்டுமா?

வழுப்படு தலைப்பிலி -III

எல்லாம் முடிந்தபின்னால்,
கால்களில் நீர் உரசிக்கொண்டோம்;
கைகளைக் கழுவிக்கொண்டோம்.
நகரும் போது நரம்பிலே நன்னியது கொக்கி
சேற்றிலே நனைத்துக்கொள்ளவா பிறந்தன கைகள்?
காற்றைக் கிழித்துக் கரிக்கோட்டைக் கீறிக்கொண்டாலும்,
கலங்கத்தான் செய்கிறது....
மூளியுருவைக் கீறிக் கெட்டது புல்வெளி;

மழுங்குரு உடல் கெளித்தது விழி, கோணியது வாய்.
படைத்த பாவம் புடைத்துப் பருத்து விடை கேட்டு
நகர்ந்தது அலைபாதம்தொட்டுப் பின்னால் நாயாய்
ஒயிலை மழுக்கவா பிறந்தன கரிகிறுக்கும் விரல்கள்?
ஒதுக்கப்பட்ட ஓலைக்கப்பாலான அகல்வெளியில்
தவிர்க்கப்பட்ட மனைகளையும் வரியப்பட்ட வேலிகளையும்
நினைத்தும் உடைத்தும் போன தடங்கள் தளராது; தாளப்பட்டுக் கேட்கும்
விலக்கப்பட்ட நிலங்களை மிதிக்கவா பிறந்தன பாதங்கள்?
எல்லாம் முடிந்தபின்னால்,
இரைத்திறைத்து எல்லாவற்றையும்தான் கழுவிக்கொண்டோம் என்றுதான் பட்டது
இவ்வளவும் எதற்கென்ற எண்ணத்தைத்தவிரவோ??

வழுப்படு தலைப்பிலி - IV

கடக்கும் ஒவ்வொரு நகரத்திலும்
அதே கதையை முகங்கள் பேசிக்கொண்டு நகர்கிறன.
என்ன,
வேகம்தான் நத்தையா நண்டா நரியா என்று திக்குத்திக்காய் தத்தும்..
முகங்களின் கதையேனோ முற்றுமே ஒன்றுதான.
நாடகப்படியொன்றை நாலு குழுக்கள் நடித்ததுபோல,
படிமங்கள் தடித்து கலைந்தலையும் தனித்தனியே
தமக்கான முகங்களின் கட்குழி தேடி....
கதையேதோ அதுவேதான்.
உதிர்க்கும் சிரிப்பு சொல்லும் கதையை
ரௌத்திரம் உதிர்க்கச்சொல்லும்போதும்
தனிப்படத் தன்னைக் காட்டிக்கொள்கிறது கதை....
அதுவேதான்.
வரக்கிடக்கும் நகர்களைக் கடக்கும்போது,
கண்களை மூடிக்கொள்வேன்;
நினைவில் நடித்துப்பார்க்கக்கூடாதோ நான்,
கதைக்கு என்னிற்படுமேதும் இரஸத்தை?

வழுப்படு தலைப்பிலி - V

கிடைக்கும் மூங்கிலெல்லாம் ஊதிக்கொண்டு நகர்கிறேன்...
இன்னும் பிடித்த ஓசை பிறக்கவில்லை.
எறிந்த மூங்கிலையெல்லாம் எவரெவரோ இசைக்கிறார்...

பிறந்து நகர்கிறது பிடித்த பேச்சு.
இருந்தும் மரத்துக்குருத்துமூங்கிலைத்தான் உடைத்துக்கொண்டும் திக்கொண்டும் நரம்பு விடைத்துப்புடைக்கத்திரியமுடிகிறது.
பிறர் பிடித்தெறிந்த பேச்சுக்களையும் பிடித்துப் போட்டுக்கொள்கிறேன்
வாய்விரித்த சுருக்குப்பைகளெல்லாம்.
கைப்படத்தொட்டவுடன் சுருதிசெத்துச் சரிகிறன.
சொற்களை மட்டும் சுருக்கிக்கொள்கிறேன் பைவயிற்றுள்.
படகுட் பறியோடு, ஆற்றில் தூண்டிலைப் போடாமல்
காட்டுமூங்கிலும் கைப்பையுமாயா நடந்து திரிவான்,
ஒரு கசட்டுமீன்பிடிப்பான்?

வழுப்படு தலைப்பிலி - VI

காவற்காரர்கள் தெருக்குதிரைகளிலே போவதைக் கண்டேன்;
குளத்திலே படகிலே முதலை தேடிக்கொண்டிருந்தார்கள்;
வானத்திலே பறவைக்கு வலைகளைப் பரப்பிக்கொண்டிருந்தார்கள்.
ஆமாம், நான் கண்டேன்தான்.
திருட்டுப்போனதைத் திரும்பத்திரும்பக் அலுங்காமற் கண்டேன்
திருடர்களைக் காணவில்லை.
திருட்டுப்போனதைத் திரும்பத்திரும்ப கேட்டுக்கொண்டேன்
திருடர்களைக் கேட்கவில்லை.
திருட்டுப்போனதைத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டேன்
திருடர்களிடம் பேசவில்லை.
காவற்காரர்கள் கடந்துபோனார்கள்.
திருட்டின் விபரத்தை நான் கேட்கக்கூடுமோ?
திருடர்களுக்குத் திருவோடு பிடிப்போரைத் தேட
திருட்டின் விபரத்தை நான் கேட்கக்கூடுமோ?
காவலின் கூறு கவனமும் காதும்
கூறெனக்கேட்பதும் கூற்றுவனாகுமோ?
அலைகின்ற நாய்களில் வெறியெது அறியாது.
"திருடர்கள் திரியலாம் திகம்பரர் உருவிலே
திருடர்கள் புரியலாம் தெரிந்தவர் வடிவிலே
திருடர்கள் உறையலாம் தீங்கிலார் மனையிலே"
திரும்பத் திரும்பச் சொன்னார்கள் காவலர்.
திருட்டுப்போனதைத் திரும்பத்திரும்பக் அலுங்காமற் கண்டேன்
திருடர்களைக் காணவில்லை.
திருட்டுப்போனதைத் திரும்பத்திரும்ப கேட்டுக்கொண்டேன்

திருடர்களைக் கேட்கவில்லை.
திருட்டுப்போனதைத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டேன்
திருடர்களிடம் பேசவில்லை.
திருடரும் காவலரும் ஒருமித்த ஜாதி.
வருவார் புரிவார் அகல்வார்
ஆனால், அறியார் எனைப்போல் அரைவெளவால் ஜாதி
திருடர்கள் உருவாய் காவலர் கண்ணில்
காவலர் நாயாய் திருடிகள் முன்னில்
எனக்கென இருப்பது ஏதுமில்லை வடிவு
எனக்கென இருக்கலாது கருத்து.....
"நீ திருடர்கள் தெருவா? காவலர் பிரிவா? எது??"
எனக் கேட்டால், மனை எதுவெனச் சொல்வேன்??
இடையினமேதும் இருக்கலாகாதென்றால்,
இரு வல்லினம் நடுவே மிதிபடு மெல்லினப்புல் நான்.

டிஸம்பர் 2001 இதழ் 24

23. எதிரிகள்! - சித்தார்த்த சே குவேரா-

எனது எதிரிகளுக்கு,
தமக்கென்று தனித்தனி வடிவில்லை;
பலருக்கு முகமேயில்லை;
சிலருக்கு வெளிக்காட்டும் உருவம் கூட
உயிர் அற்றுச் செத்திருக்கும்.

ஆனாலும்,
தூக்கத்தின் மத்தியிலும்
என்னைத் துரத்திக் கொண்டிருப்பார்,
கடிவாளமற்ற கனவுகளில்,
நன்கு விளை மேய்ச்சல்நிலம் கண்ட
வேகம் கொள் வீரிய பாய்ச்சற் குதிரைகளாய்.

என்னை உதறிக் கெடுப்பாரும் உண்டு- அவர்களில்,
எனக்கு உதவிக் கெடுப்பாரும் உண்டு.
அவர்களுடன் என் போராட்டம்,
ஒரு காற்று வெளி சுழற்று

கூர்மைக் கத்திவீச்சு.
அந்தப்புறம், காயங்கள் பட்டாலும்
என் கண்ணுக்குத் தெரியாது;
வாள், உறைக்குள் ஓய்வதற்குள்,
சளைக்காமல், பின்னிருந்து
இன்னொரு தூண்டிற் கனைப்பு
பின்னொரு வேண்டாப் போருக்கு
விழைந்து அழைப்பு விடும்.

எனது யுத்தங்கள்,
நிறுத்து முற்றுப்புள்ளிகள் கண்டவிடத்தெல்லாம்
அவை தின்று,
மாரிகாலத்தே,
மலையிறங்கு மழைவெள்ளமாய்
நெடுத்து சலசலப்பில் ஓடிக்கொண்டிருக்கும்.
அவை காலடிக்குளம்புகள்
தேய்த்து அழுத்தும் பாதையெல்லாம்,
பரவிக் கிடக்கும் சதுப்புநிலமாய்,
கொடி சுற்றி
நினைவுகள் மேல் எழ, மேலும் புதைந்து,
எரிவாயு பீறிட்டு தீச்சுவாலை பற்றிக் கிடக்கும்
என் மனது.

ஆனால்,
அவர்களுக்குத் தெரியும்,
அவர்களின் ஆவேசம் போலவென்று,
என் முனை மழுங்காப் போராட்டகுணம்;
முதுகுச்சுமை ஏறி முறிந்துபோனாலும்,
அடங்கிப்போகாது,
முறையற்ற,
அவர்கள் மூர்க்க அடக்குமுறைக்கென்று.
எந்தப்பாய்ச்சலுக்கும் உளச்சோர்வில்
ஓய்ந்துபோய்த் தூங்காது,
ஒரு மூலையிலே
படர் கருஞ்சிலந்தி வலைக்குக்
களம் அமைத்துத் தான் கொடுத்து.

அவர் கொடி விரிக்கும் தேசப்பரப்பெல்லாம்
ஊடறுத்துத் துளைத்துப்போய்,
ஓர் உதைப்பில் ஓங்கி மேலெழுந்து,
எட்டி நின்று என் கையுயர்த்தி
வெற்றிச் சமிக்ஞை விடையாய்க் கொடுக்கும்வரை
உடல் வற்றிச் செத்து, ஜீரணித்துப் போகமாட்டேன்.

என் மனித விட்டுக் கொடுப்புக்களை,
மன இயலாமை வழிப்பிறந்த
தம் வெற்றிக்கோல் குறிகளென்று
கண்டு நின்று கூத்தாடும்
எதிரி முட்டாள்கள்,
முடிவில்,
முகம் கறுத்து,
முட்டி முழந்தாளிட்டு,
பின்,
கூன் முதுகு தெறித்து,
எட்டிச் சிறு காலடி வைக்க இயலாது,
ஆடிக் காற்றகப்படு காய்த்த முருங்கைகளாய்
ஒற்றை ஒற்றையாய்த் தடி முறிந்து
உள்ள முகமும் உளுத்துப்போய்
மண்ணாய்ப் பரவிப்போவார்கள்,
தம் நிலத்தே, என் அகத்தளத்தே.

சத்தியம்,
பின்னொரு,
காலத்தே மூச்சடக்கியிரு
காரியம் விடுத்து,
தான் தூங்கு விதையிருந்து
மேலுறை நகம்
கிழித்தெழுந்து,
ஓங்கிக் கை பரப்பி,
ஓர் இரட்டைச் சிறு பச்சைத் துளிர் விடும்;
"வெற்றி நமதே."

24. கவிமனம் - சித்தார்த்த 'சே' குவேரா

விடிகாலையிருந்தே சொற்கள் விபரம்தப்பித்
தாம் சுழன்று ஆங்காங்கே கரணமிட்டு..
வெந்நீர்த்தேவையினை அடுப்புப்புகைவறுந்த அவளிடம்,
"வெதுப்புமுகிழ் வான்வர்ஷிப்பு" என்று (வாலற்ற) கவித்துவமாய் வேண்டி
வண்டியாய் வாய்அர்ச்சிப்பு வாங்கிக் கட்டிக்கொண்டேன்.
வெளிமுற்ற
இளஞ்செடி தொட்டு வெண்பனி கொட்டு
புதுமலர்மொட்டு சிறுமுத்தமிட்டு,
"தேன்சொட்டும்பால்நிறத்துஇளங்கன்னிமெதுகன்னம்" சொல்லக்கண்ட
மகள் சொல்லாமலே பாலர்பள்ளி தனியே இன்று தான்
சென்றாள்.
பின்,
"'சிண்டி குரோவாட்' நீள்விரல் அழகுப்பிஞ்சு வெண்டிக்காய்" கேட்டதற்கு,
நாகசாகிக்குண்டுக்கே நான் சவால் என்பது போற்
சொத்தைவிதைப்பரல் ஒட்டற்பூசணிச்சிலம்பது கையெடுத்து,
கனன்று கண்ணகியாய் கத்தினாள் க(ந)`ய்கடை(டி)க்காரி,
"சிந்திப்பாய், இச்சந்தை இனியென்னைச்
சந்தித்தாய், சிறுமனிதா, செத்தாய்."
தொடர்ந்தும் என்னைப் பணயம் வைத்து,
"எச்சிலொட்டாப் பயணச்சீட்டு எனக்கொன்று,
முன்மாலைமதுமணம்மாறாச்செங்கண் நடத்துனரே" எனறு செப்பி,
செருப்பால் அடியுண்டு பேரூந்தால் உதையுண்டு, தள்ளூண்டு,
பின், ஊர்ந்து,அலுவலகம் ஈரைந்து மணிவந்து,
"நல்நாளாய் நகரட்டும் நண்பரே இன்றும் உம் நாள்",
என வந்தனங்கள் பலகூற,
முன் வியந்து, பின் பயந்து,
முழுவேலைத் தரமும் தளமும்
இப்பின்நாள் அரைநாள் எனத்
தன்னால் விடுப்பில் விரைந்து வெளித்தது.
இனி எது சொல்ல, என் செய்ய?
காசு கொடுத்துக் கல்லடி பட்டது போல்
எல்லாமே நேற்று,
விமானத்தபால் வந்த விக்ரமாதித்யன் கவி
தொகுதியாய்ச் செய்த கலி.
இடி தாங்கும் -என் கவிதாங்கா-நண்பன்

நல்லுரை மெத்தச்சரி.
"ஊர்படும் பாட்டில் ஊமையன் அடித்தானாம்
விசில் என்றாற்போல்,
நாடெரியும்போது,
நாற்பது வயது நாயுனக்கேன் கவிதை நயம்?"

பதிவுகள், பெப்ருவரி 2002 இதழ் 26

25. . ஒரு பாடலும், சொல்லாத சில சேதிகளும் இளங்கோ, ஒட்டாவா, கனடா

தேர்வுகள் முடிந்து
கோடையின் தெறிப்பில்
ரொரண்டோ நகர் மீளல்
கனவொன்றை இடைமறித்தாற்போல்.

துப்பாக்கிச் சூடுகள்
பாலியல் வல்லுறவுகள்
விளையும் நகருக்கு
பயணாமாதல்
திகிலுடன் நிகழ்வதுண்டு
தவிர்க்கமுடியாமல்

காரில் விரைகையில்
எதிரே வருபவன்
தெரிந்தவனாவென
அவதானித்தலும்
கவனம் கலைந்துவிடின்
காதினை உரசிவிடக்கூடும்
துப்பாக்கிக்குண்டு

காரில் செல்லல்
தடைசெய்யப்பட்டு
பேரூந்தில் பயணிக்கவென
கட்டளையிடப்படும்
வீட்டில்.

இப்படியான பொழுதில்தான்
தற்செயலாய்
சந்திக்க நேர்ந்தது
உன்னை

கல்லூரியில்
கனவுகள் கோர்த்து
காதல் சுகித்து
பின்னொருபொழுதில்

வேண்டாமென வெறுத்தொதுக்கியது
அவ்வளவு இலகுவில்
மறப்பதற்கில்லை

காரணம் கேட்டு
நீ கண்ணீர் மல்கியபோது
இன்னொரு சகியைச் சுகித்தபடி
பனியில் நனைந்ததாயும் ஞாபகம்

வாழ்வுப் பெருவெளியில்
துயரங்களின் மீது
நின்றொரு
களிநடனம் புரியும்
வித்தை கைவந்திருக்கூடும்
இன்றுனக்கு

வளாகம் செல்லும்
அவசரம்
வியர்வையின் ஊற்றெடுப்பில்
கண்மை கசிவு
நெற்றியின் முன்வீழும்
முடிகளின் மீதுன்
வீரல்களின் நடனம்

ஏளனமா மகிழ்வாயென
இனம் பிரித்தறிய முடியா
சிரிப்பொன்றொன்று
உதிர்கிறதுன்னில்
எனைப்பார்த்து

நேற்றைய வாழ்வின்
வேதனைச்சுவடுகள் மறந்து
தெருக்களில்
தோழர்களின் உதிரமுறிஞ்ச
வெறிகொண்டலையும்
மிலேச்சர்களும் நானும்
சற்றேறக்குறைய ஒன்றாயிருந்திருப்போம்

உன் பார்வையில்

என்ன செய்வது
ஞானம் சிலவேளைகளில்
பேரூந்தில் ஏற்படுவதும் விந்தை.

பதிவுகள், ஜூன் 2001 இதழ்-18

26. எத்தனை முகங்கள் எத்தனை முகங்கள்.. -நாகரத்தினம் கிருஷ்ணா-

நேற்றைய கனவில் நீங்கா முகமும்
நெடு நாளாக தேடும் முகமும்
சோற்று வாழ்வில் சுகப்படும் முகமும்
சொந்தம் வேண்டாம் சொல்லிடும் முகமும்

ஏக்கக் கேணியில் இறங்கிய முகமும்
ஏப்பம் கண்களில் நிறுத்திய முகமும்
எல்லாம் எனக்கே என்றிடும் முகமும்
எல்லாம் தனக்குள் பேசிடும் முகமும்

கூடும் முகமும் குலவும் முகமும்
குறைகளை நிறைவாய் காட்டும் முகமும்
வாடும் முகமும் வணங்கும் முகமும்
வாழ்வுக்காக ஏங்கும் முகமும்

எத்தனை முகங்கள் எத்தனை முகங்கள்

இன்றைக்கொன்று நாளைக்கொன்று
எந்த முகத்தைச் சொந்தம் இழக்கும்
முகத்தினைத் தேடி மொய்க்கும் கண்களை

உதறும் போது உள்ளம் சிலிர்க்கும்
மனத்தின் நிறத்தை முகத்தில் தெளிக்கும்
மந்திரத் தூரிகை மகிமையில் சிரிக்கும்.

எத்தனை முகங்கள் எத்தனை முகங்கள்...

- பதிவுகள், சித்திரை 2001 இதழ் 16

27. இப்போது உனக்காக.. - டானியல் ஜீவா-

கனவுருகு காலைப் பொழுதில்..
அவள் வந்து போவாள்.

நானிருக்கும் தேசம்
நீண்ட இருளில்
மூழ்கும் போது
காதல் எப்படி
என்னுள்
எழுச்சி கொள்ளும்.

எழுதுவதற்கும்
எழும்புவதற்கும்
சோம்பேறித்தனத்தில்
கண்களை மூடிக் கொண்டு
கட்டிலில்
உடலைத் தளரவிட்டேன்.

ஓசையற்று
உறங்கிக் கிடந்த
எனது ஊரில்
அந்நிய முகங்களைக் கண்டு
அவசரமாய்
நாய்கள் ஊளையிட
ஊரேவிழித்தது.

இன்று மட்டுமல்ல
இதுவே எங்கள்
வாழ்வானது.

எலிகாது போல்
என்காதுகளும்
மனக் கண்களும்
விழித்தன.

எங்கோ

எழுந்த அழுகுரலோடு
துப்பாக்கி வேட்டு
தப்பிக்காமல்
தலையை குறிபார்த்திருக்கும்.
அதன்பின்
வாகனம்
பேரிரைச்சலோடு
புறப்பட்ட வேக ஒலியைத் தவிர
அந்தப் பின்னிரவு
அடங்கிப் போனது.

விடிந்ததும்
முகம் கழுவ
முகத்தோடு பலர்
நானும் அவர்களில்
ஒருவன்.

காலை விழிப்போடு
காற்றும் வாங்கும்
காலம்
காலவரையற்று
காணாமல் போய் விட்டது.

யாரு பெற்ற பிள்ளையோ
நானறியேன்.
வெட்டிப் பிளந்து
வேடிக்கை பார்ப்பதற்காகவா
போசாக்குணவுண்டு
பத்துமாதம் சுமந்தாய்
உன் மகனை..?
இந்த மண்ணை நேசித்த
இன்முகத்த உன்மகன்
சுக்குநூறாய்
சுருங்கிப் போவதற்காகவா
சுடுமணலில்
நூர்க்கடகம் சுமந்து
நாளாந்தம்

மீன்விற்றாய்.

புனிதப் படுக்கையில்
போர்த்துக் கிடந்த
வெள்ளை மனங்கள்
வெளுத்துப் போனது
எப்படி?

என்னைப் பெற்றெடுக்காத
தாயே!
கண்ணிருந்தும்
கட்புலனிழந்து
காதிருந்தும்
கேட்புலனிழந்து
வாயிருந்தும்
வார்த்தைகளிழந்து
எனது வீதியில்
நடைப்பிணமாய்
நான் அலைந்ததை
உனக்குத் தெரியுமா?
இப்போது
உனக்காக எதைச் செய்வேன்
அழுவதைத் தவிர.

- பதிவுகள், ஆகஸ்ட் 2001 இதழ்-20 -

28. . கீதாஞ்சலி:என் தேசம் விழித்தெழுக ! - ரவீந்திரநாத் தாகூர் தமிழாக்கம்: -சி.ஜெயபாரதன்

எங்கே இதயம் அச்சமின்றி இருக்கிறதோ,
எங்கே தலை நேராக நிமிர்ந்து நிற்கிறதோ,
எங்கே அறிவுக்குத் தடைஅரண் இல்லையோ,
எங்கே உலகை, வீட்டின் குட்டிச்சுவர்கள்
தூள்தூளாக உடைக்க வில்லையோ,
எங்கே மொழிகள் வாய்மையின் ஆழத்தினின்றும்
எழுகின்றனவோ,
எங்கே விடாமுயற்சி முழுமையை நோக்கித்
தன் கரங்களை நீட்டுகிறதோ,
எங்கே ஆராய்ச்சி என்னும் தெளிந்த ஆற்றுநீர்
பாழடைந்த பழக்கம் என்னும் பாலை வனத்தில்
வழிதவறி மாய்ந்து விடவில்லையோ,
எங்கே இதயம் பரந்த நோக்கத்திலும்
இயக்கத்திலும் முன்னேற நீ வழி நடத்துகிறாயோ,
அந்த சுதந்திர சொர்க்க பூமியில், என் பிதாவே !
என் தேசம் விழித்தெழுக !

என் பிரார்த்தனை

இதுவே என் துதி உனக்கு, என் இறைவா !
அடி ! நெஞ்சில் எழும் என் கீழ்மையின் வேரை
நோக்கி ஓங்கி அடி !
என் இன்ப துன்பங்களை எளிதில் தாங்கிக்
கொள்ள எனக்குப் பொறுமையைத் தா !
பணி புரிகையில் என் பாசம் பயனடைய
எனக்குப் பலத்தைக் கொடு !
ஏழைகளை என்றும் ஒதுக்காமலும், மடமையில்
பலத்தோர் முன் அடி பணியாமலும்
இருக்க எனக்குத் திடனைக் கொடு !
தினச் சச்சரவிலிருந்து விடுபட்டு
எனது நெஞ்சம் உயர்ந்து எழ
எனக்குத் திறனைக் கொடு !
எனது சக்தியைப் பாசமோடு
உனது ஆணைக்கு அர்ப்பணிக்க
எனக்கு உறுதியை அளித்திடு !

என் பயணத்தின் முடிவு !

முதுமையில் சக்தி குன்றி, என் பயணம்
முடிந்து போனதோ இறுதியாக ?
இதுவரை நடந்துவந்த என் பாதை
எதிரே மூடப்பட்டு விட்டதோ ?
தேவைக் கிருந்த என்பொருள் யாவும்
தீர்ந்துதான் போயினவோ ?
கண்காணா நிசப்த மூலையில்
காலம் தள்ளும் நேரம் வந்ததுவோ ?
எனக் கலங்கி நின்றேன் !
ஆயின் எனக்கு முடிவில்லை என்பது
உன் நியதி எனக் கண்டேன் !
பழைய பாக்கள் நாவில் அழிந்தபின், நெஞ்சில்
புதிய கீதம் பொங்கின எனக்கு !
பண்டைய தடங்கள் மறைந்த இடத்தில்,
புத்துலகம் பூத்தது, வ¢ந்தை மிகுந்து !

29. புதிய தலைமுறைகள்! - சி. ஜெயபாரதன்

மண்ணில் நான்
எண்ணிப் போட்ட விதைகள்
எதுவும்
முளைக்க வில்லை!
நிலம் இருந்தால்
நீரில்லை!
நீரிருந்தால் உரமில்லை!
பாரத தேசத்தில்
மேருமலை சரிந்தது!
பண்டிட்
நேருவின் சாம்பலை
ஊர்தியில் பறந்து
பாரத மெங்கும்
சீராய்த் தூவினர்!
அது உரமா? அன்றி விதையா?
வீரிய தேள்களும்
பூரான்களும் தோன்றின!
ஜாதிப்
புற்றுக்குள்ளிருந்து
நல்ல பாம்புகள்
துள்ளி எழுந்து
நஞ்சை விதைத்து
கோர தாண்டவம் ஆடின!
உயிரோ டுள்ள போதே
ஆன்மாவைத்
துண்டு துண்டாக்கி
அங்கிங் கெனாதபடி
எங்கும்
வீசி எறிந்தேன்!
ஈசல்களாவது
முளைக்காதா?

- பதிவுகள், டிஸம்பர் 2001 இதழ் 24

30. கானடா நாடென்னும் போதினிலே - சி. ஜெயபாரதன், கானடா

கானடா நாடென்னும் போதினிலே, இன்பக்
கானம்வந் தேகும்நம் காதினிலே
தேனினும் இனிய தேசமடா, இதைத்
தேடிப் புகுந்ததெம் யோகமடா

எங்கெங்கு காணினும் ஏரிகளே, திசை
எப்புறம் நோக்கினும் ஆறுகளே
பொங்குநீர் வீழ்ச்சிகள் மேவுமடா, பனிப்
பூக்களை வானமும் தூவுமடா

ஊசி இலைமரக் காடுகளாம், பனி
ஓங்கும் உயர்மலை மேடுகளாம்
வீசிடும் வெப்ப வீடுகளாம், குளிர்
வெப்பம் மாறிடும் நாடுகளாம்.

ஈரேழு மாநிலப் பனிநாடு, சீராய்
இரட்டை மொழிளும் தனிநாடு
நீர்வளம், நிலவளம் மிக்கதடா, பயிர்
நீண்டு விளைந்திடத் தக்கதடா

முப்புறம் சூழ்கடல் முடக்குமடா, பனி
மூடும் துருவம் வடக்கிலடா
கப்பல்நீந் திடும்நீர் மார்க்கமடா, தென்
காவலாய் அமெரிக்க தேசமடா

மேப்பிள் சிவப்பிலைக் கொடிபறக்கும், அருள்
மேவிப் பிறர்க்குக் கொடையளிக்கும்
ஆப்பிளும் பீச்சுப் பழம் பழுக்கும், பல்
ஆயிரம் தக்களிக் காய் தழைக்கும்

தாமிர வைரத் தளங்களடா, ஒளிர்த்
தங்கமும் வெள்ளிச் சுரங்கமடா
பூமியில் புதிய காண்டமடா, இதைப்
போற்றிக் காத்திட வேண்டுமடா.
- பதிவுகள், பெப்ருவரி 2002 இதழ் 26

31. யார் நீ ? - சி. ஜெயபாரதன்-

சிற்பி
செதுக்காத
பொற்சிலையே!
கற்காலம் முதல்
தற்காலம் வரை
உன்னைத்
தங்கக் குடமாய்
வைரத் தோடாய்
பணயம் வைத்து
ந்¢னது
தாய், தந்தையர்
தரகன்,
தங்கக் கணவன்,
மாமன்,
மாமியார்,
திருமணச் சந்தையில்
ஏலம் போட்டு
மாலையிட
விலைப் பொருளாய்
விற்று வருகிறார்!

வெள்ளித்
திரையில்
முத்தமிழ்
மூவேந்தர்கள்,
பாரதி ராஜா
பாக்கிய ராஜா
மற்றும்
இளைய ராஜா
யாவரும்
ஒன்று கூடி
உனக்கு
ஊர்வசி
வேஷம் போட்டு

பூங்காவில் டவிட்டு
பொன்னருவியில்
நனைய விட்டு
பின்னிசைக்
குயிலைப்
பாட விட்டு
உன்னைக்
கலைப் பொருளாய்
விற்று வருகிறார்!

பெண்ணே!
நீ ஒரு பொன்னா?
பொருளா?
அன்றி
தலையாட்டிப்
பொம்மையா?
உன்னை
என்று
ஆண் ஜாதி
அறிந்துகொள்ளும்?
மாதர் குலம்
புரிந்துகொள்ளும்?
மனித இனம்
என்று
மதிக்கும்?
நீ
குடத்தினுள்
கிடக்கும்
ஒரு

- பதிவுகள், ஆவணி 2000 இதழ்-8

32. சிட்டுக் குருவியே -கரு. திருவரசு (மலேசியா)-

பல்லவி
தொட்டுத் தொட்டுப் பார்க்கட்டுமா
சிட்டுக் குருவியே
சுகமான இராகமே சிட்டுக் குருவியே -தொட்டத்

பல்லவி எடுப்பு
எட்டி எட்டிப் போனாலும்
என்ன நிலை ஆனாலும்
கட்டுப்பட்டுப் போனேனே
சிட்டுக் குருவியே -தொட்டுத்

கண்ணிகள்
பட்டுப் பட்டு மேனியிலே
பட்டுவிட்ட நேசத்திலே
தட்டுக் கெட்டுப் போனேனே
சிட்டுக் குருவியே -தொட்டுத்

சின்னச் சின்னப் பூவாக
சிந்தும் சந்தப் பாட்டாக
வந்து வந்து போனாயே
சிட்டுக் குருவியே -தொட்டுத்

கொஞ்சிக் கொஞ்சிப் பார்த்தாலும்
கெஞ்சக் கெஞ்சிப் பார்த்தாலும்
அஞ்சி அஞ்சிப் போனாயே
சிட்டுக் குருவியே -தொட்டுத்

- பதிவுகள், புரட்டாதி 2000 இதழ்-9

33. பேசலாம் வாரும் -மதுரபாரதி

ஒரு பிடி அரிசி போட்டு
சுளகு நிறையக் கீரை வாங்கியபின்
கொசுறு கேட்டதுண்டா?

வெண்ணெய் கொண்டுவந்த எசக்கிக்கு
மண்ணெண்ணெய் அடுப்பு கொடுத்து
காய்ச்சிய நெய்யைப் புறங்கையில் தடவச்சொல்லி
மணம் முகர்ந்ததுண்டா?

கறுத்து மழமழத்த சிரட்டையில்
அளந்து வாங்கிய தயிர்க்கணக்கு
செம்மண்ணில் குழைத்த மோரால்
புள்ளியிடப் பார்த்ததுண்டா?

சப்பாணி வந்து பக்கத்துப் பாழில்
உட்காரவைத்துச் சிரைக்கையில்
வரும் உறக்கத்தின் நடுவே
பாட்டன் பெருமைகள் கேட்டதுண்டா?

சிவன்கோவில் வெளிச்சுற்றில்
தோழிகள் காவலிருக்க
பேசு இன்னுமென்று அவள் வற்புறுத்த
மெல்ல நடுங்கியது
மார்கழிக் குளிரால் மட்டுமல்லவென்று
புரிந்ததுண்டா?

ஆமாம் என்று தலையாட்டுவீரென்றால்
கைத்தடியை எடுத்து வாருங்கள்
நமக்குள் பேசிக்கொள்ள ஏராளமுண்டு.
தொலைக்காட்சிப் பெட்டி ஒலிக்காத
ஊர்க்கோடிப் பாலம் தேடி நடப்போம்.

- பதிவுகள், மார்ச் 2002 , இதழ் 27 -

34. நச்சு விதை - மதுரபாரதி -

தான் சிறுவனாக இருந்தபோது
சீமைக்கருவையைப் பார்த்ததில்லை
என்று அப்பா சொன்ன ஞாபகம்.

தான் சிறுவனாக இருந்தபோது
அரசு
விதை கொடுத்துப்
பரப்பியதாய்
அப்பா சொன்ன ஞாபகம்.

ஆடுகளுக்குக் காய் உணவு
அடுப்புக்கு முள் விறகு
வேலிக்கு வேலி
அத்தனையும் பொன்னென்று
அரசு சொன்னதாம்.

நான் சிறுவனாக இருந்தபோது
தாமிரவருணியில்
வெள்ளம் கரைபுரளும்.
குதித்தடித்த நீச்சலில்
கண்சிவக்கும்,
வயிறு ஓநாயாய்ப் பசிக்கும்.

எங்கோ ஒரு ஓரத்திலிருந்து
வேடிக்கை பார்க்கும் சீமைக்கருவை.

காலம் மாறிவிட்டது.

சீமைக்கருவை முள்ளேறி
புரையோடிய காலைக் கவனிக்காத
சுடலைமாடன் சுடலையேறினான்.

கரையெல்லாம் அடர்ந்துவிட்ட
சீமைக்கருவையைப் பார்த்துவிட்டு
தாமிரவருணியில் குளிக்காமல்

திரும்பினேன் இந்த முறை.

ஊருள்ளும் அதே காடுதான்.

நான் சிறுவனாக
இருந்தபோது பார்த்த
நிழலும், கனியும், வளியும்
தரும் மரங்களெல்லாம்
எங்கே போயின?

- பதிவுகள், பெப்ருவரி 2002, இதழ் 26

35. கவிதை: பிறை நிலவு திலகபாமா (சிவகாசி)

நிறைக்கும் இரைச்சலிலும்
தனிமையில் தவிக்கும் மனது
கடல் நீர்த்துளிகளாய்
காணக் கிடந்த முகங்களிருந்தும்
மனம் பார்த்து புன்னகைக்கும்
இதழ் மட்டும் தேடியே
கனக்கும் தனிமையில்
மூழ்கும் மனது
பசியும் தூக்கமும்
பற்றிக் கொள்ள அந்தப் பசியில்
நெஞ்சு நிறைக்க தின்று
நினைவுகளோடு
மூச்சுமுட்டுமென்றுணர்கையில்
உண்பது நிறுத்தி
நினைவு தந்த போதையில்
தூங்குவதாய் பாவித்து
இறுதியில் விழித்திருக்கும் கண்கள்
பசியை கண்டலர
மறைய யத்தனித்து
நிஜத்தில் நிறைந்து நிற்கும்
கரையுமென்றண்ணிய பிறை நிலவாய்
காதலின் அவஸ்தை

- பதிவுகள், மார்ச் 2002, இதழ் 27

36. கவிதை: அவர்கள் - புஸ்பா கிறிஸ்ரி

நாங்கள் வாழ்க்கையைக் காதலிக்கிறோம்.
ஆகவே வசந்தங்களும் வருகின்றன.
அவையும் எங்களைக் காதலிக்கின்றன.

இம்முறையும் வசந்தம் வருவதில்
எமக்கு ஏகோபித்த மகிழ்ச்சி.

இன்னும் எத்தனை வசந்தங்களைச்
சந்திக்கப் போகிறோமோ யாரறிவார்?

நிழலாகிப் போன வாழ்வுகளின்
நிஜங்களைத் தேடிப் பார்த்து
நிதர்சங்களானது எமது காலம்.

நாங்கள் காற்றை மழையை
கடலை அலையை காதலிப்பதில்லை.

வேதனைகளைத் தான் காதலிக்கிறோம்.
அவைதான் எமக்கு இன்றும் மிஞ்சும்.

கொஞ்சம் மாறித்தான் பாருங்களேன்.
கொஞ்சம் கொஞ்சமாக
வாழ்கையைக் காதலித்துப் பாருங்கள்
வாழ்க்கை இன்பமாகும்.

- பதிவுகள், ஏப்ரில் 2002 இதழ் 28 -

37. காதலினால்..... எஸ்.ரமேஷ்

வார்த்தைகள் தேடி தவிக்கின்றாய்
வாழ்த்து அட்டைக்கென
நகரெங்கும் அலைகின்றாய்
கவனத்தைக் கவர முயல்கின்றாய்
உடமை கொள்ள நினைக்கும்
பதற்றத்தில் உயிர்க்காது காதல்
எதிர்பார்ப்பில்லா நேச புன்னகை
ஒன்று மட்டும் போதும்
எனக்குள் உன்னை
என்றென்றும் உயிர்த்துக் கொள்ள.

நிராகரிப்பின் பதற்றத்துடன்
நித்யத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டு
வார்த்தைகளை இறுகிக் கொண்டு
அடுக்கிக் கொண்டு,
நிராகரித்துக் கொண்டு...
என்ன வேண்டும் நீ எனக்கு?
வார்த்தைகளற்ற ஒரு புன்னகை
எண்ணங்களற்ற ஒரு ஆலிங்கனம்
முதலும் முடிவும் அற்ற ஒரு ஆனந்தம்.

- பதிவுகள், ஆகஸ்ட் 2002 இதழ் 32 -

38. எதனால் இப்படி? - சுப்ரமணியன் ரமேஷ்

இனிதாய் புன்னகைத்தார்
என்றென்றைக்கும் அபயம் தரும் கண்களின் கனிவு
நீட்டிய விரல்களில் துளியும் நடுக்கமில்லை
எதிரே இருந்த பொத்தானை அழுத்தியதும் கூட
அன்னத்தூவி இறகென மென்மையாகத் தான்
என் கரங்கள் வணங்கக் கூம்பி
உயர்ந்த வேளையில்...
வெடித்து விசும்பிற்கு
புகை கழற சுழன்றெழுந்தது
பேரரக்க விஷக்காளான்
குழந்தைகள் மலர்களென
உயிர் மூச்சு அனைத்தையும் உண்டு எழ...
புன்னகை மாறா பணிவுடன் பார்த்திருந்து
இடம் விட்டகன்றார்
எதனால் இப்படி?
எதனால் இப்படி?

- பதிவுகள், ஜூலை 2002, இதழ் 31

39. பறவைகள் விட்டுச்சென்ற சுவடுகள் - -இளங்கோ-

1.

அர்த்தம் புரியாத்தோத்திரங்களை
அமைதி தழுவவேண்டிய ஆலயச்சுவர்களில்
கொடூரமாய் அறைந்து செப்பி
திசையெட்டிலிருமிருந்து அசுவமேதகுதிரைகளாகி
உயர்குடியின் உறவுகள் கூடிவந்து
யாகம்வளர்த்த நெருப்பின் துளிபட்டு
அமுதப்பால் அருந்தாத
ஞானசம்பந்தரானேன்
நானும் ஓர்பொழுதில்

பின்னர்
அநாதைச் சிறுவர்களுக்காய்
வாசல்களில் நிதிசேகா¢த்தவர்க்கு
அதட்டிக் குரைக்கும் நாயானேன்

படிதாண்டி
கடவுளை நெருங்கப்பிரியப்பட்ட
ஊனமற்ற பெண்ணிற்கு
தாதாவாயும் விசுவரூபமெடுத்தேன்

மேலாடையின்றி
அக்குளில் பெருகிய
வியர்வையைப் போல..
நிர்வாகத்துள் பரவிய
தாழ்த்தப்பட்ட சாதியினனை
காசைக் கொண்டே துரத்தியபடி
நிதானமாய் விளம்பினேன்
கடவுளின் சந்நிதானத்தில்
அனைவரும் சமமென்று

இவனைப் போல்
இன்னொருத்தனைக் கண்டிலேனென
வார்த்தைகள் இனிக்க
வழமைபோல் நெருக்கமாயின

புலம்பெயர்ந்த பொ¢சுகள்
உண்மைமுகம் அறியும் ஆவலற்று

பிறகென்ன
கூத்தும் கும்மாளமடிப்பும்.
பிரியப்பட்டபோது
பட்டமளிப்பும் முதுகுசொ¡¢தலும்

2.

எங்கே போயிற்று
என் ஓர்மம்?

நெஞ்சு திமிறத்திமிற
நியாயம் கேட்டும்
எதிரிகளும் துரோகிகளும்
பெருகப் பெருக
கரையாமல் எ·குவாகிய சுயம்
சிதறியதெப்போது?

ஏரிக்கரைகளில் புல்வெளிகளில்
காற்றில்கேசம் எதையெதையோ கிறுக்க
து¡ரப்பறந்த பறவைகள்பார்த்து
நாளைகள் பேசிய தோழியர்
காணாமற்போனது எந்தநாழிகையில்

எல்லோரும் இரசித்துச்சுவைக்க
இன்றென் வாழ்க்கை.

கூடுவிட்டுப் கூடுபாயவிரும்பும்
திருமூலரின் காத்திருத்தலைப்போல
உண்மை முகத்தினைதேடி
காலங்கள் மீறியவோர்
சாபம்
எனக்கு இனி.
2001.08.03

40. தேடலில்லா கவிதை போல்.. -இளங்கோ-

காலந்தவறி அசைந்தாடி வரும்
ஓசி பஸ்சும்
சளைக்காது
மூசிவீசும் குளிர்க்காற்றும்
நெஞ்சினிலுள் இறங்கும்
கோபக் கவளங்களாய்

வெறுப்பும் சலிப்பும்
குழைத்தெறியும்பொழுதில்
என்றேனும் ஒருகால்
உருகாதோ உறைபனி

மதுவருந்தி
மயங்கும் வெள்ளியிரவுகளில்
பலவீனங்களுடன்
மனிதர்களை நேசிக்க
நெஞ்சு கிஞ்சிக்கும்

பாடப் புத்தகங்களின்
பக்கங்களைப் புரட்டவே அலுப்புறும்
நான்
மாந்தர்களைப் படித்தல்
நடவாதென
நினைவு ததும்பிச் சி¡¢க்கும்

சுரங்கப் பாதையில்
வகுப்புகளுக்காய்
நடக்கையில்
தென்படும் பெண்களெல்லாம்
தேவதைகளாக மிதக்கின்றனர்

அறிவும் தெளிவும்
தெறித்துச் சிதற
அவர்கள் பேசுகையிலும்
ஆண்களுண்டாக்கும்

காயங்களே
பேச்சிடைப் பொருளாகின்றன

முற்போக்குகளின்
பிரதிநிதியாய்
சமரசங்களற்று
அலையும் இளைஞன்,
பட்டத்துடன்
முகவா¢யற்றுப் போவது
நாளைய விந்தை

அவ்வவ்போது கற்றல்
வன்முறையாய்
சிந்தனையடுக்குகளை
சிதைத்துப்போக
நெருங்குகிறது பா£ட்சை

தேடலில்லா
கவிதை போல்
காலத்தை
அசட்டை செய்து
நகர்கிறது வாழ்வு.

*OC Transpo - Ottawa-Carleton Transportation

41. ஆற்றாமைகளும், ஆற்றுப்படுத்தலும் -இளங்கோ-

பனியில் மொழியெழுதி
இரவில் விழிநனைத்து
காற்றின் வேகத்தில்
நகரும் பிரிவு நதி

நேசித்து
பிறிதொருபொழுதில்
புறக்காரணிகள் புறந்தள்ள
பொசுங்கிப் போன
ஒரு கோடிக் காதலில்
ஒரு துளி எங்களுடையது

என்னை
நேசிக்காத சனியன்
நீயெனத் து¡ற்றி
நாயகனாக்கும்
முயற்சியல்ல இது

நட்பும் காதலும்
சமாந்தரமாய் நீண்டு
முடிவிலியில் இணைகையில்,
நாங்கள்
காதல் மொழிந்தது
பனிக்குளிஎஇன் கதகதப்பில்

கிறுக்குப் பிடித்தவனாய்
காலவெளி கடக்கவைத்த
காதலின் அற்புதத்தை
இருள்வெளிக்குள் மறைத்தல் தவறு

உணர்வும், வயதும்
கிளர்ந்த பால்யத்தில்
கற்பனைகள் மீதமர்ந்து
காதல்தேரோட்டியது
கனன்றெறிகிறது இன்றும்

கனவுகள் மிகுந்து
நெருடல் விளஇசலான
வளஇளம் பருவத்தில்
மனம்விட்டுப் பேசி
பிளஇயும் சந்தர்ப்பம்..

எத்தனை காதலர்க்கு
இவ்வுலகில் வாய்த்திருக்கும்
எங்களைப் போல்

இணைதலில் மட்டுமல்ல
புரிந்துகொண்டு
பிளஇந்துபோதலிலும்
காதலின் உயிர்ப்புளது
என்று சொன்னால்
எவர் நம்புவர்?

- பதிவுகள், ஜூன் 2002, இதழ் 30

42. பிரபஞ்சம் - ரமேஷ்

செதுக்க செதுக்க
கலைஞனின் செருக்கென
எழுற்சி கொண்டது சிலை
வடிக்க முடியா பேரெழிலுடன்
பிரபஞ்சம்
எஞ்சிய சிதறல்களில்!

43. பாம்பு போன பாதை - ரமேஷ்

நேற்று பாம்பு போன பாதையை
இன்றும் பயத்துடன்தான் கடந்தேன்!
எதிர் கொண்ட சூட்சம கணத்தில்
மரணத்தை ஒத்திப் போட
எதிர் எதிர் வழிகளைக் கைக்கொண்டோம்
கிலியூட்டும் ஊழித்தீயென
உக்கிரமாய் விரிந்த படத்துடன்
இறந்து பட்டது நாகம்
முதுகெலும்பு சொடுக்கிக் கொள்ள
இன்றும் பயத்துடன் தான் கடந்தேன்
பாம்பு போன பாதையை..

subramesh@hotmail.com

- பதிவுகள், ஜூன் 2002, இதழ் 30

44 . நாலும் தெரிந்த நாய் - ஜீவன்-

சிருஷ்டி ரகசியத்தின்
சுவரை உடைத்ததனால்
செருப்புத் திருடியதை
சற்றே மறந்துவிட்டு
சரிதங் கேளுங்கள்.

முன்னேயும் பின்னேயும்
சொற்ப மகாத்மியங்கள்
இதற்கு உண்டு.

பட்டின த்துப்பிள்ளையின் நக்கல் சுட்டு
பத்திரகிரியின் கைத்திருவோடு
மண்டை கிழிக்க,
இதற்கு சாபல்யம் கூடிற்று.

உடலங்கள் பல சரித்து
உரிமை பெற்று
பின் அதுவே பாரமாகி
கைலாயமலை ஏறியவனின்
வழித்துணையாய் போன துண்டு.
இன்னொரு நாள்
உபநிஷத்தின் நான்கு ஷ்மிருதிகளைத்
தின்றதனால்
பிரித்தல் - கழித்தலென்ற
பேதங்கள் உணர்ந்து,
நரகல் நுகர்வதை மறைத்ததுண்டு.

பாபாவின் சித்துக்களை பக்தர்களில் கண்டு
சில நாள்
சடை வளர்த்தும் திரிந்ததுண்டு.

"நாளை விடிவதற்குள் நியாயத் தீர்ப்பின் நாள்
நாயே.. உனக்கும் நாற்காலி காத்திருக்கு"

ஏற்கனவே சொல்லப்பட்டதை

இப்போத்தான் தெரிந்து கொண்டோம்.
இந்தா பிடி - என்று
'ரை' கட்டிய சகோதரர்கள்
பைபிள் தந்ததனால்
அதிலும் நாலுவரி தின்று விட்டு
இடப்பக்கம் விழுந்த கல்லெறிக்கு
வலப்பக்கம் திரும்பி மறுகல்லுக் கேட்க,
கடிக்கத் திரும்பியதாய்
கல்மாரி சொரிந்து....
ஒற்றைக்கால் தூக்கி
மிச்சக்கால் நிலம் பதித்து
ஓடாத ஓட்டம் ஓடி
இப்பத்தான் வந்த
களைப்புத் தீருமுன்னே,

'உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடு'
உபதேசம் செய்யப் போய்
"லொள்" என்ற சப்தம்.!

வேட்டைப் பல் பதிந்து - என்
பிருஷ்டத் தசை கிழிந்தது.

- பதிவுகள், மே 2002, இதழ் 29

45. புதிய பாதையில் - புஸ்பா கிறிஸ்ரி -

நேற்றைய தினங்கள் மறைந்து
இன்றைய தினங்கள் நேற்றுக்களாய்
நாளைய தினங்கள் இன்றுகளாகி
மீண்டும் அவை நேற்றுக்களாகி

துன்பங்கள், துயரங்கள், வேதனைகள்
வெறுப்புக்கள், இன்னும் எல்லாமே
நம்பிக்கைகள், உறுதிகள், சந்தர்ப்பங்களாகி
நல்ல தருணங்களாய் பரிணாமம் பெற்றுவிடும்.

இன்று எங்கள் வாழ்வுகள் இங்கே
கஸ்டங்கள், கவலைகளுடன்
நன்மை வந்து சேரும்
என்னும் நல்ல நம்பிக்கைகளுடன்

இனி என்ன செய்வது?
வந்ததை வரவேற்கப் பழகிடுவோம்.
புதிய தென்றலைத் தேடிப் பறந்து
புதிய வாழ்வைத் தொடங்கிடுவோம்.

நாளைகள் மறைந்து இன்றுகளாகி
இன்றுகள் அழிந்து நேற்றுக்களாகி
இனியும் தொடரும் நல்ல நாட்களில்
எங்களின் எதிர்பார்ப்புக்களுடன் நாங்கள்

நேற்று மறைந்தது.
நாளை வராமலும் போகலாம்.
இன்றைய நிகழ்வுகளை
மனமகிழ்ச்சியுடன் தொடர்வோம்.

46. தேடுகிறோம் தடயங்களை - புஸ்பா கிறிஸ்ரி -

எமக்கு முன் சென்ற நீங்கள்
எங்கு சென்று முடித்தீர்கள்?

நாங்கள் உங்கள் பாதச் சுவடுகளின்
தேடல்களில் உங்களைத் தேடி...

நீங்கள் கால் பதித்துவிட்டுச் சென்ற
உங்கள் தடயங்களில் நாங்களும்
எங்கள் பாதங்களைச் சற்று வைத்துப்
பார்க்கிறோம்.

அனுபவங்களை நீங்கள் அனுசரித்துச் சென்றீர்கள்.
ஆனால் நாங்கள் அனுபவித்தும் அதன்
அனர்த்தங்களை அறியாதவர்களாய்

எம் கால் போன போக்கில் நடந்து
எம் கலை கலாச்சாரம்
பண்பாடு என்பன மறந்து எம்
நாட்டை மறந்து இன்று அனாதைகளாய்..
எங்கள் பயணங்களைத் தொடர்கிறோம்.

நாளை எங்கள் சந்ததிகளும் எம்மைத்
தொடரும் போது
அவர்களில் எங்களில் எதைத் தேடுவார்களோ?

உங்கள் பாதச் சுவடுகளில்
மீண்டும் மீண்டும் தேடுகிறோம்
நீங்கள் விட்டுச் சென்ற தடயங்களை.

நாளை நாங்கள் எமது சமுதாயத்திற்கு
விட்டுச் செல்லக் கூடியதாய்
எம்மை நாம் உம்மில் தேடுகிறோம்.

- பதிவுகள், மே 2002, இதழ் 29

47. திண்ணை தூங்கியின் (இரமணி) கவிதைகள்

விரல், தறி & வாதம்
உளுத்த பலகையுள்
நாட்பட
நகர்கிறது நோய்க்கோழி;
நினைத்தும் நினைக்காமலும்
நடக்க முயல்கிறது,
கனத்துத் தூங்கும் கால்; துவண்டு
தள்ளிப்போம் மெல்லிய தூக்கலும்;
களரணமுனகல் ஊறி நனையும்
கணித்தறி. அறிவேன்; தோழன் அழுகிறான்.
'குளிர்' எழுதும் மொழியும்
முள்ளெரித்து என்பு தின்னும்.
எண்ணம் எழுத்திடை எரிசுவர்த்தடுப்பு;
மூட்டில் மோகித்து சூள்மூட்டும் மின்சாரம்.

சொல் உளறு முளையில் வலி கிளறு மிளிரூசி;
வீட்டுமன் முதுகென் வேகுவிரலாகிப்போகாதோ?

தூரப் போ புழுவே, தூர்ந்து போ!
வேண்டுமட்டும் வில்வாதப்படு;
இனியும் காட்டேன் ஏதும் முதுகு.
சொல் புரிதல் என் யாகம்;
காண் முன் மார்பு; கணை எய் சரம்;
கை தையத் தைய,
பையவேனும் தமிழ்
தட்டுவேன், தறிப்பேன்.

உள்ள மொழி, உருகி முறிதல் வரை
நொய்ய நொய்யக் கைக்கணிநெசவு.
பின்னு விரல் வேணுமென்றால்
பிணி விறைத்துச் சாகட்டும்;
ஆகா அப்பின்னும், ஆழ்விழி
அதிர்ந்தியங்கும் என் மூளை.

- பதிவுகள், 15, டிசம்பர் 2002 ஞாயிறு

48. தலைப்பிலி 1 - திண்ணை தூங்கி-

நுனிநகம் பரபரத்துக் கிள்ளிப்போட்ட சொல்லோடு
துள்ளிக் குவிகிறது கூடை.
தேங்கிய தாகம் தீர்ந்தபின்
அள்ளக்கேட்பாரின்றி
புல்லுக்கோடுது அமுதம்
-அவதி.
ஊற்று வழிய வழிய உளறி நடக்கிறது உட்பாதம்.
மழை சமயங்களில் விடேனென்று பெய்கிறது;
வேட்டைத்தினவு வேறெப்போதோதான்
வீட்டுக்கு வருவேனெனத் திமிர்கிறது.

நடுவில்
மழை கரைத்த மொழியை
அழுகாமற் பூப்பது யார்?

~பதிவுகள், 13, டிசம்பர் 2002 வெள்ளி

49. தலைப்பிலி 2 - திண்ணை தூங்கி-

முன்னமர்ந்து பேச, முழுதாய் வருவதில்லை;
திக்கிக்குழறும் கொத்து மழைக்குட்டைப்பேத்தை
எகிறித்தத்தும்; திரியும் எங்கெங்கும்.
அழிந்த முடிச்சுகளை அள்ளிமுடியமுன்
தெறித்த குண்டுக்குக் கண்டதெல்லாம்
தெரு; பட்டதெல்லாம் குறி.
பாடல் முகிழ்குது.
குறியும் தெருவும் அழிந்த மலைப்பனியில்
ஒழுக்கென்றோடுது உள்மந்தை.

போம் வழிக்குப் புரிகிறது பொன் பிறை.
நடக்கிறேன் நான்.

~பதிவுகள், 13, டிசம்பர் 2002 வெள்ளி

50. தலைப்பிலி 3 - திண்ணை தூங்கி

எல்லாத்தெருவும் எனதென்றும் தெரிகிறது;
இல்லையென்றும் போல.
காண்கின்ற இல் பலதில்
கரைந்துபோயிருக்கும் முகப்பு

போகிறவீடெல்லாம் முன்னைப்புக்கோரில்
ஒருவரேனும் என் நண்பர்.
இருந்தும், தரிக்கமுடியவில்லை.

போக்கிற் கல்லெடுத்து
போம் வழி காணக் கட்டியதும்
எனதென்று ஏனோ இன்னும் தோன்றவில்லை.

"அழையாவீட்டின் பூட்டை
 முறிப்பதுமட்டும் அநாகரீகம்.
 தாழ்ப்பாள் தூங்காத தாழ்வாரம்,
 வீட்டுக்கணக்கா? வீதிப்பரப்பா?"
-அலைஞனோடு தொடர்கின்ற

ஆட்டுக்குட்டிகள்.

தட்டாமற்போன கதவும்
தட்ட, திறக்கப் புகாத வாயிலும்
படி பட்டுத் திரும்பிய புலமும்
இத்தனையாய் விரிகின்ற வீடெல்லாம்
போனதென் வாதக்கால்கள்.
தட்டியும் திறக்காதென்ற தேசத்தின் வாசனை
தெரிந்ததென் நாசி.
முள்ளுக்காணிக்குள்ளும் சக்கரம் சுற்றிய பாதம்.

அப்படியாய் அலைகின்ற கூத்தாடிக்கும்
பிடித்த தெருவென்றும் உண்டு;
அடிக்கடி தட்டும் வீடென்றும்
அவ்வப்போது அடையாளம் தெரிவதுண்டு.

வரித்த புலி அலைச்சல் மட்டும்
இரைக்காய்ப் பை குறாண்டும்.

~பதிவுகள், 13, டிசம்பர் 2002 வெள்ளி

51. அறுத்த அகவிதைக்கும் நட்ட விதைக்கும் நடுவில் முளைத்தவை - திண்ணை தூங்கி

நாட்படத் தோண்டிய கால்நக அழுக்கு;
அலறித்தூங்கும் அடுத்தவன் தொலைபேசி;
வேளை மாறிய வானொலி நடத்துனர்;
பசித்துப்படுத்த இரைப்பைப்புகைச்சல்;

ஆளைச் சுற்றிய ஈயக்குமிழில்
ஆழ நூல்போக பேனைக்கோல் ஓட்டை;
கையை எறிதல், கழுத்தை மடக்கல்-
எல்லைவிரித்தல் என்று நினைத்தல்;
காலைப் பரப்பி ஆழத்தூங்கல்;
நனவைக் குழப்பிக் கனவென்று துரத்தல்
(என்று நனைய முதிர்கனவில் இருத்தல்);
கதவு தட்டலைக் காணாதிருத்தல்;
புதிய கவிஞனை வலையிற் தேடல்;
பழைய கடிதங்கள் மடித்தலும் கிழித்தலும்;
துழாவிய நகங்களைத் துளைக்கத் தவிப்பு.

தவிர்த்து நிமிர்ந்திருந்து
சாமான்பட்டியலில் சங்கீதக்கோர்ப்பு;
சாம்பார்ச்சட்டிக்கு அகவிச்சிட்டிகை.
பட்டினி தீர்க்கமுன், பட்டியல் பதிவு.

ஆறமுன் பரிமாறு.
புசிப்பதும் கழிப்பதும் பசித்தவன் பொறுப்பு.

~பதிவுகள், டிசம்பர் 2002 இதழ் 36 -

52. திரிசங்கு உலகு - திலகபாமா (சிவகாசி)

விரியும் இதழ்களை
காணத் தராத மலர் இதழ் விரிப்பாய்
விரிந்து கிடந்தது எனக்குள் ஓர்
திரிசங்கு சொர்க்க உலகு
தங்கச் சருகு தின்று
வண்ண பேதம் தொலைத்து
காத்துக் கிடந்தன
மரங்கள் பச்சையாய்
பனியின் உறைதலும்
கதிரின் உஷ்ணமும்
வேறு பட்டு போகாத உணர்வு தரும்
சாபங்களும் , வரங்களும்

இற்றுப் போன இன்மைகளில்
தானாய் உயிர் பெறும்
அகலிகை கற்களும்
கௌதம கற்களும்
பேசிச் சிரிக்க
காதலில் காமத்தின் வாசம் மறக்கும்
இந்திரன்கள்

கணவனின் குரலுக்கு
கை நழுவ விட்டு வந்த
அதிரும் அரவை இயந்திரம்
தூக்கி யடித்து சிந்திப் போக
என் தன்மானங்களும் கனவுகளும்
வள்ளுவன் குரலுக்கு வாசுகி விட்டு
வந்த வடக் கயிற்றுடன்
தூக்கிலிட்டு கிடக்கும்

இன்றும் விட்டு வர முடியாத
அலுவல்களுடன்
சுருண்டு கொள்கின்றன
நான் விரித்து வைத்த திரி சங்கு உலகு
மக்கிய ஈர நெடியுடனும்

மல்லிகை வாசமுடனும்

நாளை என் மகள்
திணிக்கக் கூடும் தன் கனவு
விரிப்புகளை மெத்தைகளின் அடியில்

எந்த தலைமுறை காணும்
தன் கனவுகள்
பச்சை புல்வெளியாய் விரியும் நாளை

பதிவுகள், டிசம்பர் 2002, இதழ் 36

53. நீ அகதி அல்ல! - புதியமாதவி (மும்பை, இந்தியா)

நம்மைப் பிரித்து நிற்பது
இந்து-
சமுத்திரம் மட்டுமல்ல
சட்டமும் தான்..
உன்னைப்
பார்க்காமல்
இருக்கவேண்டுமென
சட்டம் போட்டு
ஜெயித்தவர்கள்

உன்னை - நான்
நினைக்காமல்
இருக்கவேண்டுமென
சட்டம் போட்டு
நித்தமும்
தோற்றுக்கொண்டுருக்கிறார்கள்

நீ-
குண்டு மழைகளில்
நனைந்தபோது
என் பூமி
இங்கே
வறண்டு போனது.

நீ-
இருட்டில்
விழித்துக் கொண்டிருக்கின்றாய்..
இங்கே-
பகலில் கூட
என் கண்கள்
கருப்பு துணியால்
கட்டப் பட்டிருக்கின்றது..

நம் -
இருவர் உலகமும்

இருண்டு போனதால்
நம் -
கனவுகள் கூட
பதுங்கு குழியில்..

நீ-
விடியலுக்காக
காத்திருக்கின்றாய்..
நான்
வெளிச்சமெல்லாம்
விடியலல்ல
என்பதால்
உனக்காக
விழித்திருக்கின்றேன்..

நீ-அகதி
என்று எழுதியது
என் சட்டம்..!

நீ- அண்ணன்
என்று துடிக்கிறது
என் ரத்தம்...!!

பதிவுகள், டிசம்பர் 2002, இதழ் 36.

54. நகர் வலம் - வ.ந.கிரிதரன் -

பெரு
நகரின் இருண்டதொரு
அந்தியில் தொடங்கினேன்
என்
நகர் வலத்தை ஒரு
மன்னனைப் போல.
சகதிக்குள் குளித்துக் கொண்டிருக்கும்
ஓர் எருமையைப் போல்
புரண்டு புரண்டு குளித்துக்
கொண்டிருந்தது
நகரம்.

வீதிக் கால்வாய்கள் வழியாக
மெதுமெதுவாய்
நகர்ந்து கொண்டிருந்த
வாகனப் பாம்புகளை
அவை வயிற்றில் சுமப்பவர்களை
வியப்புடன் ஒருவித அருவருப்புடனும்
பார்த்துக் கொண்டிருந்தனர்
நகரத்து மாந்தர்.

உயரமான, பழையதொரு
கோதிக் பாணியில் அமைந்திருந்த
கிறித்தவ ஆலயமொன்றின்
உச்சியில் வாசம் செய்யும் புறாக்கள்
சில பறப்பதும் சிறகுகளை
உதறுவதுமாக பறவைகளின்
இருப்பின் சாட்சியாகச்
சோர்ந்து கிடந்தன.
இரவின் கருமையை கார்
மேகங்கள் மேலும் அதிகரித்துப்
பார்வைப் புலத்தினைப்
பழுதாக்கின.

அழகான பெண்கள் அலங்கரித்தபடி

கரைகளில் நின்றபடி
கால்வாய்களில் நகரும் பாம்புகளையும்
அவற்றில் பயணித்தவர்களையும்
ஆர்வத்துடன் பார்த்துக்
கொண்டிருந்தார்கள்.
இந்த இரவு முழுக்க
இவர்களது பொழுது
இவ்விதமே கழியும்?

ஆகாயமே கூரையாக
வாழும் ஊர் உலாத்தி மனிதர்கள்
உற்சாகம் குன்றி
நகரின் நடுநடுவே தெரியும்
நந்தவனங்களில்
போர்வைகளிற்குள்
நடுங்கி, முடங்கிக்
கிடந்தனர் எந்தவிதக்
கணப்புமின்றி.

கிளப்புகளில்
களியாட்டம் தொடங்கி விட்டது. மேடைகளில்
ஆண்கள், பெண்கள்
ஆடைகளின்றி ஆடினர்
முலைகளைக் குறிகளைக்
குலுக்கியபடி. பாயும் மதுவெள்ளத்தில்
நீந்தி நீந்தி
மூழ்கினர் நகரத்தின் பெருங்குடி
மக்கள்.

போதை வஸ்த்து, பியர், விஸ்கி
பொங்கி நகரை வெள்ளக்கத்தில்
மூழ்க வைத்தன. திருடர்கள்
கன்னக்கோல் வைத்தழகு
பார்க்கத் தொடங்கினர்.
துப்பாக்கிக் கரங்கள் நீண்டு
நகரைச் சுற்றி வளைக்கத் தொடங்கி
விட்டன.

பகல் முழுக்கச் சட்டங்கள் இயற்றிவர்கள்,
உரிமை பற்றி வாய் கிழிய முழங்கியவர்கள்,
பார்களில், ஓட்டல்களில் சல்லாபித்துக்
கிடந்தனர்.

நகரை நோக்கி
இன்னும் பலர் படையெடுப்புகள்
நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள்.
ஆலைகளில், உணவகங்களில்
இன்னும் மனிதர்கள்
உழைத்துக் கொண்டுதானிருந்தார்கள்
எந்தவித களிப்புமின்றி
இருப்பிற்காக ஆனால் பெருங்
கனவுகளுடன்.

களியாட்டமிடும் நகரை
ஓரமாக ஒதுங்கி நின்று
பார்த்து
ஏக்கத்துடன் சோகித்துக் கிடந்தன
கிராமங்கள்.

நகரத்தின் விளையாட்டைச்
சகிக்க முடியாத விண்மீன்கள்
தங்களை மூடித் தொலைந்து
போயின எங்கோ.
விரிந்து கிடந்த
பெருவானோ
எந்தவிதச் சலனமுமின்றி
மௌனித்துக் கிடந்தது
இது வழக்கமானதொரு நிகழ்வு
போல.

சுடர்களற்ற
இந்த இரவில்,
இந்த மழையில்
எதற்காக நான்
என் நகர்வலத்தை

ஆரம்பித்தேன்?

பதிவுகள், நவம்பர் 2002, இதழ் 35

55. அனகொண்டா வ.ந.கிரிதரன்

அடாது மழை
விடாது பெய்து கொண்டிருந்த
நேற்றிரவு நானொரு கனவு
கண்டேன்.
வழக்கம் போல்
இம்முறையும் தனது அகன்ற
வாயினை விரித்தபடி
அதே அனகொண்டா.
விண்ணளாவ வியாபித்து
விரிந்திருக்கும் அதன் வாய்
எனக்கு அச்சத்தினை
மூட்டியது. அதன்
துரத்தலிலிருந்து
தப்புதலென்பது வழக்கம் போல்
இம்முறையும்
இயலாத செயல்களில் ஒன்றாகவே
ஆனது.
எனது கால்களும் கூட
நிலை பெயர்தலை
நினைக்க மறந்தன.
எதற்காக இந்த அனகொண்டா
என்னை எப்பொழுதுமே
துரத்துகிறது?
இதனிடமிருந்து எனக்கு
மீட்சி
எப்பொழுது?
அவ
தரிப்பிலிருந்து
தரிப்புவரை
அகன்ற தன் வாயினை
அகலத் திறந்தபடியிந்த
அனகொண்டா
இது போலெப்பொழுதுமே
வரத்தான் போகின்றது
போல் தெரிகிறது.

அகன்று பெரு வெளியெங்கும்
வியாபித்துக் கிடக்கும்
இதன் பார்வையிலிருந்து
ஒரு போதுமே தப்புதலென்பது
முடியாது போல் தான்
படுகிறது.
அனகொண்டாவுடன்
வாழப் பழகிக் கொள்வதைத் தவிர
வேறெதுவுமொரு வழி
இருப்பதாகத் தெரியவில்லை
கனவில் மட்டுமல்ல
நனவிலும்தான்.

பதிவுகள், டிசம்பர் 2002, இதழ் 36

56.. எனதும் அவளதுமான மழைபற்றிய சேகரிப்புகள் - கோ.முனியாண்டி, மலேசியா -

எனை வாசித்தபடியே
எம் மழைதனில் நீங்களும்
உமை யாசித்தபடியே
நின் மழையதனில் யானும்
அழுகையிழைகளாய்
பிரிந்தபடியும் கலைந்தபடியும்
புவியீர்ப்பு விசையளுத்த
இணைந்தபடியும்
மிதந்து கொண்டிருக்கிறோம்.

வர்ணசொரூப ஜோதிபொழியும்
ஒளிக்கற்றைகளினின்று
வெடிக்கும் கிரகணத்தின்
அரவணைப்பதனில் இறுகியிருவரும்.

மழையதுபற்றியும்
அதனுள்ளிரிந்து வழிகிற
மதுரகீத லயங்கள் பற்றியும்
அதன் நிகரற்ற ரம்மியம் பற்றியும்
ஸ்னேகித்துப் பேச ஆரம்பித்த தருணங்கள்
உருகியுருகிக் கரைந்தழுதபடி
எவ்விதமான மாறுதல்களுமற்று
மணல்வெளி சமுத்திர அணைப்பு மாதிரி
அலையாடிக்கொண்டு.

தேங்கிய நிலையதனில் தூங்கி
இன்னமும் சோம்பல்முறித்தெழாத
இலைநடுநீர் துளியில் அப்பியிருக்கும்
நீலவண்ண கலவையிலான பதிவுகளுடன்
முன் எப்போதோ
பெய்து சென்ற மழையின்
எச்சம்பற்றிகூட பேசியிருப்போம்.

மயிற்பீலிகொண்டு நீவும் விதமாய்

எனக்குப்பிடித்த உங்கள் மழையின்
சோகங்களைச் செதுக்கி
வைத்திருக்கிறீர்கள்.

மழையென்றால்
மீன்கொடித்தேரில் மன்மத
ராஜன் ஊர்வலம் மாதிரி
பவனிக்கவேண்டும் என்பீர்கள்
மழையென்றால்
இனிப்பையும் துகர்ப்பையும்
நாவினில் படியவிட வேண்டும்
என்பீர்கள்

மழையென்றால்
கனவுகண்ட காதலாகி
கதை கண்ணீராகி
நிலாவீசும் வான முழுவதும்
மழை சூழவேண்டுமென்பீர்கள்.
நாமிருவருக்கும் பிடித்த மழையென்றால்
எதிர்நின்ற நேரத்தின் சொப்பனங்களைக்
கூண்டினுள் பட்சியாகித்
தூங்கியபடித் தொலைந்துவிடவேணும்
ஏகாந்தமொன்றுக்காகவே காத்திருக்கும்
சோகப்பாடல்கள் மாதிரி என்பீர்கள்

எண்திசையெங்கும் திரண்டேகி
வந்தெனை நினைத்ததொரு
மழைநாளின் ஈரத்தில்
நீங்களும் யானும் அறிமுகமாகிறோம்.
மண்ணை ஏமாற்றும்
பொய்வான் மானாய் மருள்கிறோம்.
கடலதனில் உதிர்கிறோம்
காமுழுதும் படர்கிறோம்
இருட் பகலெங்கும்
சுக்கிலப்பட்சமாய் வளர்கிறோம்.
இருந்தும்
உன்வீட்டு மேல்மாடியில்

செம்புலப்பெயல் மையாடியிருந்த
கனகாம்பரங்களை நனைத்தபடி
காற்றுடன் கலந்து சிதறுமந்தச்
சூரியனின் விழுந்தநேரத்துச்
சுடர்மழைத் தாரைகளில்
உடல் நனைத்தே நித்தம்
எனை நினைத்தழுவதாக
வெழுதித்தெரிவித்திருப்பது
படித்து
இங்கேயும்கூட தேக அதிர்வு
உணரப்பட்டது.

நாமிருவரினுடைய மழையும்
அதன் ஸ்வரூபத்தை மனமேவ
வைத்தெங்கோ சென்றுவிட்டது.

kabirani@tm.net
பதிவுகள், அக்டோபர் 2002, இதழ் 34

57. பேசாதிரு மனமே! - நாகரத்தினம் கிருஷ்ணா -

இரத்தத்தின் இரத்தங்களும்
இரசவாத நடனமிட
கச்சைகள் கட்டிடுவர்
கலங்காதிரு மனமே!

காவிக்குப் பல்லிலளித்து
கருத்துக்கு முகம் சுளிக்கும்
பாவிகள் சாதகத்தைப்
படியாதிரு மனமே!

உள்ளத்தில் சிறுமைகளை
உரமிட்டு வளர்த்த்வர்கள்
கள்ளத்தால் கதையளப்பர்
கலங்காதிரு மனமே!

நட்பென்று வந்திடுவர்
நலங்கெட பொய்யுரைப்பர்
விலங்கினும் கீழினங்கள்
விலைபோகாதிருமனமே!

பிட்டுக்கு மண்சுமந்து
பிரம்படி பட்ட ஈசன்
கட்டைக்கும் நாட் குறிப்பர்
கலங்காதிரு மனமே!

எதிர்வீட்டுத் தமிழனை
எட்டியுதைத்துவிட்டு
பிறவி தமிழுக்கென்பர்
பேசாதிரு மனமே!

56. மனம்

நித்தமொரு பித்தமுடன் சித்தமதில் சீழ்பிடித்து
கத்தும் கடல்போல் வீணில் வாழும் - வாழ்வில்
சத்தமின்றி ஓய்ந்துமெள்ளச் சோரும் - மனம் சோரும்!

நத்தமென்றும் கொத்தமென்றும் நாள் முழுக்க ஏர் பிடித்து
சுத்த சன்மார்க்க நெறிபேசும் - பொய்மை
வித்தகங்கள் மறைந்த பின்னர் நோகும் - மனம் நோகும்!

நீதி நெறி வேதமென பாதிவிழிப் பார்வைகளில்
சோதியொளி முகம் முழுக்கக் காட்டும் - உள்ளே
சாதி மதச் சச்சரவில் ஊறும் - மனம் ஊறும்!

ஆதியென்றும் அந்தமென்றும் வீதிகளில் சேதமின்றி
பாதியுடல் தந்தவனைத் பாடும் - வீட்டில்
நாதியின்றி வாழ்பவளைச் சாடும் - மனம் சாடும்!

செறிகின்ற ஞானத்தில் சிறக்கின்ற கூர்மதியை
அறிகின்ற ஆற்றலின்றி வாழும்- பிறர்
எறிகின்ற சொற்களிலே வாடும் - மனம் வாடும்!

அறிவின்றி ஓலமிட்டு குறியின்றி கோலமிட்டு
சொறிகின்ற இச்சைகளில் வீழும்- விதித்த
நெறியென்று வெறும் கதைகள் பேசும் - மனம் பேசும்!

மார்ச் 2003, இதழ் 39

58. மகளே.. வந்து விடு..! - புதியமாதவி (மும்பை- இந்தியா) -

என் மகளே!
எனக்கு -
ஏன் இந்த தண்டனை?

பால் மணம் மாறாத - உன்
பச்சைக் கனவுகளை
பக்கத்து வீட்டில்
புட்டிப்பாலில் சிறைவைத்து
உன் தொட்டில் கதறியழ
விட்டுப் போனதற்கா
எனக்கு
இந்த தண்டனை?

தாயின் விரல் பிடித்து -என்
தமிழே நீ நடக்க
பாடப் புத்தகத்தை
பாதி நான் சுமக்க
பள்ளிக்கூடம் வரைக்கும்
கூட்டி வரச்சொல்லி
ஊரைக் கூட்டி
ஓயாது அழுதவளே!

பத்தில் ஒன்றாய் - உனை
பஸ்ஸில் ஏற்றி விட்டு
ஓடும் வண்டிக்கு
ஓடிப் போனதால் - நான்
தேடும் காலத்தில்-என்னைத்
தேடிவர மறந்தாயோ ?

"தாய்" என்ற பட்டம் தந்த
தங்க ரத்தினமே- உன்னைக்
கையில் ஏந்தியது
கனவாக வில்லையடி!
நீ-
கனவுகளைச் சுமந்தபோது

அதை நினைவுகளாக்க
என்
கனவுகளே விலையானது!

நான் -
அண்ணாந்து பார்த்து
அதிசயித்த விந்தைகளை
உன் -
உள்ளங்கையில்
ஒளித்து வைப்பதற்காய்
ஓடிய ஓட்டத்தில் - நான்
தேடியது எதுவுமில்ல்லை...

எனக்காக நீ
அழுதபோது
நான் -
உனக்காக ஓடினேன்
இன்று -
உனக்காக
என் உயிர் காத்திருக்கிறது.
நீயோ -
பிள்ளைக்கு தேர்வு என்றாய்
நாட்களை எண்ணினேன்
விடுப்பு இல்லை என்றாய்
எமனோ விடுப்பு எடுப்பதில்லை

உனக்காக வாழ்ந்தவளுக்கு - மகளே
உன் ஒருநாளைத் தந்துவிடு
இது எனக்காக அல்ல
மகளே உனக்காக....
உன் தாய்மைக்காக
நீ சேர்த்து வைக்கப்போகும்
சொத்து..
என் மகளே வந்துவிடு..!!!

- பதிவுகள், பெப்ருவரி 2003, இதழ் 38

59. ஞாபகங்கள் - நாகரத்தினம் கிருஷ்ணா (பிரான்ஸ்)

வாழ்வியல் கவித்துவத்தில்
குயிற்பாட்டாய் ஞாபகங்கள்

இளவேனிற்காலத்து
இலைநீர்முத்தென
காற்றில் கலந்து மனத்தை விசிறிடும்!

பசித்த வாழ்க்கையில்
பழையமுது!

நினைவுப் பதிப்பில்
பிழை திருத்தப்படாமல்
பிரசுரமாவதில்
வருத்தமென்றில்லை.

சுட்டதும் சுடாததும்
ஞாபகத்திற்குமுண்டு
சுட்டது
அந்தரங்கமானது;
சுடாதது
அவைக்களிப்பது!

ஒருமழைநாளில்
எனக்காக அம்மா
இரவெலாம் அலைந்து
நாய்க்குட்டி நண்பனைத்
தேடித் துவட்டித்
திண்ணையில் விட்டதாய்
ஞாபகம்....

இப்போதும் எனக்குள்
நாய்க்குட்டிகளுண்டு.
அம்மா..?

- பதிவுகள், பெப்ருவரி 2003, இதழ் 38

60. ஒரு கிறிஸ்தவனின் விண்ணப்பம் -சுகன் -

எங்கள் பரமபிதாவே!
சீதனத்தில் பாதித்தொகை
ஏஜென்சிக்குப் போய்விட்டது.
அரைவருடச் சம்பளத்தின் மிச்சம்
சீட்டுக் கழிவுக்குப் போய்விட்டது.

ஒரு மாதச் சம்பளம்
இயக்கத்திற்குப் போன பின்
எனக்கென்று
ஆணிச் செருப்புக்கூட வாங்க முடியாதிருப்பதேன்?
உயிர்த்தெழுந்த யேசுவே!

வேலைக்குப் போகும் போது
தூக்கத்தில்
அருகில் இருக்கும் பெண்ணின் மேல்சாய
அவள் சிரிக்க
பதிலுக்குக் கூடச் சிரிக்க முடியாது
வேலை என்னைத் துரத்துகிறது.

எனது ஆண்டவரே!
விடியலிற்குச் சற்றுமுன் தூங்குகிறேன்
காலை எழுந்து ஓடுகிறேன்.
மிகச் சிறந்த மேய்ப்பரே!

உம்மிடம் இறைஞ்சிக் கேட்கிறேன்
எனது தேசத்தில்
என்ன நடக்கிறது?

இந்த நற்செய்தியை மட்டும்
சொல்லியருளும்
ஆமென்!!!

பதிவுகள், மார்ச் 2003, இதழ் 39

61. கனவுலகம் - சக்தி சக்திதாசன்

சிந்தனைக் குதிரையை
தட்டி நானெழுப்பியது- ஓர்
சிங்கார உலகம் தான்
பசித்தவனில்லை அவ்வுலகில் அதனாலே அங்கு
பணத்திற்கென்று அலைபவர் ஒருவருமில்லை
கிடைத்ததை சரியாய் பகிர்ந்தெடுக்கும்
மனமுடையோர்-ஆதலால்
சட்டம் அங்கே சம்பிரதாயத்திற்காக
கூட தேவையற்றுபோயிற்று
மங்கையர் யாவரின் வதனத்திலும்
எப்போதும் வசந்தமான புன்னகை
ஆபரணங்கள் எதுவுமற்ற
ஆடம்பரமில்லாத அழகு
துரோகத்திற்கு அகராதியில்
வரைவிலக்கணம் தேடும் மக்கள்
துளிகூட வஞ்சமற்ற
பஞ்சு போன்ற மனமுடையோர்
ஏழ்மை என்று ஓர் நிலை
முன்னொருகாலத்தில் இருந்ததாக
வரலாற்றில் படிக்கின்ற சமுதாயமது
அந்த உலகில் தனக்கு வேலையில்லை
என்று ஓய்வெடுத்து விட்டானாம்
ஆண்டவன் , கோவில் இருந்த
இடமெல்லாம் பாடசாலைகளாம்
அரசியல்வாதி என்றொரு பதவி
அங்கில்லையாம் - ஏனென்றால்
அரிசி இல்லை என்பது
கனவில்கூட நடப்பதில்லையாம்
ஆனந்தமான அந்த உலகினிலெ
எனைமறந்து நடந்தேன்
அதிசயமான ஒரு தெருவினிலே ,
அம்மா பிச்சை என்றொரு குரல்
திடுக்கிட்டு கண்விழித்தேன்
புரிந்தது அப்போது நானிருப்பது
சுயநலம் நிறைந்த பொருளாசை

மிகுந்த நிஜ உலகில் என்று

பதிவுகள், பெப்ருவரி 2003, இதழ் 38

62. ஏகலைவனின் புத்திரி -புதியமாதவி (மும்பை) -

கட்டை விரலை
உனக்கு
காணிக்கையாக்கிய
ஏகலைவனின் புத்திரி நான்..

அதனால் தான்,
என் குருவே
இன்று நீ-
ஆட்காட்டி விரலையும்
உன் ஆராதனைத் தட்டில்
தட்சணையாக கேட்டாயோ?

உன் குருகுலத்தில்
எங்கள் ரத்த வாசனை
எதுவரைத் தொடரும்..?

நீ குருவாகவும்
நாங்கள் சீடர்களாகவும்
இருந்தது போதும்..
இனி-
இழுத்து மூடுவோம்
உன் குருகுலங்களை..!

பதிவுகள் , மார்ச் 2003, இதழ் 39

63. காக்கை பொன் - திலகபாமா

பார்த்துப் பார்த்துச் சேர்த்திருந்த
காக்கை பொன்கள் மடி நிறைக்க
கிடந்த கல் கால் இடற
சிதறித் தெறிக்கும் என் சேமிப்புகள்
எனதானதாய் இல்லாது மின்னும்
என் கனவுகளின் சேகரிப்பை
சிதறவிட்ட உன் கல் தனம்
எதிர்பார்ப்புகள் எப்போதும்
நீ நிறைந்து சிந்தும் துளிகளை
எதிர்பார்த்து ஏன் இருந்தது

சிந்திப் போன மடிதனில்
மின்னுகின்ற பொன்கள்
வலிக்கின்றன புண்களாய்
அடி வயிற்றுக் கொதிப்பில்
அவை பெருத்துக் கனக்கலாம்

மடிதனில் இருந்த துளிகளையும் உதறுகிறேன்
கனவுகளை இப்போதெல்லாம்
நானே தொலைத்துக் கல்லாகின்றேன்
நிறைந்திருந்த கனவுகளைக் காலி செய்து விட்டு
வெறும் மடியானாலும்
நனவுகளோடு பயணிக்கிறேன்
கனமில்லாது மடி இலேசாயிருக்கிறது

பதிவுகள், ஜூன் 2003, இதழ் 44

64. என் காதல் - ஊட்ஜரூ நுநுக்கல் (Oodjeroo Noonuccal)| தமிழாக்கம்: டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்

என்னை அடைவதா? இல்லையில்லை
மற்றவருக்குப் புரிந்த காதலை என்னால் தரமுடியாது.
ஏனெனில் நான் ஒரு இலட்சியத்தை மணந்துள்ளேன்.
மற்றதையெல்லாம் நான் துறக்க வேண்டும்.
நீ என்னை - என் உடல், ஆன்மா, மனம்
அனைத்தும் உனதாகக் கொள்கிறாய்.
என் முதல் அன்பு என் மக்களுக்கே.
அதன் பின். மனித குலத்திற்கு.

ஒரு பிரஜையாக என் தனித்துவத்தை
நான் இழந்து விட்டேன்.
அர்ப்பணிக்கப்பட்டது என் வாழ்க்கை.
ஒருவனால் கொள்ளவும் தனதாக்கவுமுடியாது.

பழைய இன வேற்றுமை என்னைச் சூழந்து கொள்கிறது.
வெறுப்பும் இகழ்ச்சியும் தாக்குகின்றன.
தோல்வியில்லாமல் சண்டையிட நான்
சுதந்திரமாக வேண்டும். நான் பலமடைய வேண்டும்.

சரி செய்ய பழைய தப்புகளுண்டு.
மனிதனின் குரோதத்தை சகிக்க வேண்டும்.
நீண்ட பாதை. தனிமையான பாதை.
ஆனால் இலக்கோ நிச்சயமானது.

65. வேடன் - ஆர்ச்சி வெல்லர் [Archie Weller]| தமிழாக்கம்: டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்

தனது இரத்தத்தால் பச்சைப் புல்லை சிவப்பாக்கிய
கங்காருவிற்காக ஒரு பாடல் பாடுகிறேன்.
அஸ்தமிக்கும் சூரியனுக்கெதிரில் கருப்பாக
கடைசி சோக நாட்டியம் டியவனுக்காக
பாடுகிறேன். ஏனெனில் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.
இன்றிரவு வேடனின் வயிறு நிறையும்.
வானத்தை நோக்கி எம்பும் தீப்பொறிப்போல
என் குழந்தைகளின் சிரிப்பொலி கேட்கும்.

சிறகசைக்கும் பற்வைகள் போல
குன்றுகள் மீது ஓடும் மழை
நீரோடை போல மகிழ்ச்சியாக
என் தமையனின் கண்ணீரில் நானிருக்கிறேன்.
ஐயோ! தமையனே!
விரிந்த பரந்த நிலத்தில் நடை பயில
தனிமையான வலிமையான மலைகள்
இந்நாட்டை ளுகின்றன.

66. தலைப்பிள்ளைகள் - ஜாக் டேவிச் [Jack Davis]| தமிழாக்கம் டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்

என் தலைப்பிள்ளைகள் எங்கே! பெருமூச்சுடன் கேட்டது அந்தப் பழுப்பு பூமி. வெகு நாட்களுக்கு முன் என் கருப்பையிலிருந்து அவர்கள் வந்தனர். என் தூசிலிருந்து உருவாக்கப்பட்டனர்- ஏன்? ஏன் அவர்கள் அழுகிறார்கள்? அந்த ஆன்மாக்களின் ஒலிகள் ஏன்
மயங்கிக் கிடக்கின்றன?

அவர்கள் சிரிப்பொலியைக் கேட்க என் காதுகளைத் தீட்டிக்கொள்கிறேன். நான் கொடுத்த நீதிகளும் கதைகளும் எங்கே?
என் இளைய பிறப்புக்களே! என்னவாயிற்று சொல்லுங்கள்?
குகைகளில் அவர்களது ஆவிகளே வாழ்கின்றன.

மௌனம். - நீங்கள் பதில் சொல்லக் கூசுகின்றீர்கள்.
முகத்திலறைந்த அறை போல ஒரு கேள்வி உள்ளது.
என் கறுத்த பெருமைமிக்க இனம் - மடிந்து புறக்கணிக்கப்பட்டு இறந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது அங்கே பதிலும் இருக்கிறது.

[ஆஸ்திரேலிய பூர்வீகக் கவிஞர்கள் மூவரின் கவிதைகளைப் 'பதிவுகள்' இதழிற்காகத் தமிழாக்கம் செய்து தந்திருக்கின்றார் டாக்டர் வை.பாரதி ஹரிசங்கர்.]

பதிவுகள், ஜூலை 2003, இதழ் 43

67. உனக்குமா ? - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)

பனி படர்ந்த மலைகள்
இலைகளை இழந்த மரங்கள்
பகலை மறந்த பனிக்காலம்

நடை பாதையில்
பனிக்குமியலின் இடையில்
என் கணவரின் பாதச்சுவடுகள்
அதன் அருகாமையில்
பெண்ணின் காலடி

குளிர்கண்டு பறந்து
எனை வெறுமையாக்கும்
பறவைக் கூட்டம்
மழை முகம் காணத
சகார பாலைவனம்போல்
சிரிப்பை மறந்த சில முகங்கள்.

அவசரமாய் இயங்கும்
அன்னிய நாடு
வெறிச்சோடிய வீதி
இருளின் பிடியில்
தனை மறைக்கும்
அழகு நிலா

இவை எதுவும்
எனக்கு பிடிப்பதே இல்லை
உனக்கு ?

இன்னும் உயிர்ப்புடன்

இந்த பூமியில் உள்ள
அத்தனை ஆயுதங்களாலும்
பரிசோதிக்கப்பட்டவர்கள் நாங்கள்
ஆனாலும்
துளிர்க்கும் துளிர்களாய்

பதிவுகள் © 2020

வேர்தேடும் மரங்களாய்
காற்றிலும் கடலிலும்
வெற்று வெளியிலும்
உணர்வுகளை கொட்டியபடி
இன்னும் உயிர்ப்புடன்

தொப்புள் கொடி என்றும்
இரத்தத்தின் இரத்தமென்றும்
வார்த்தைகளுக்கு
வர்ணம் பூசினார்கள்
விருந்துண்ட வீட்டுக்கு
விஷம் வைத்தார்கள்
கூவிக்களித்த குயில்களின்
குரல்வளை நசித்தார்கள்
முட்களை விதைத்து
நீர் வார்த்தார்கள்
அரும்புகளை மொட்டுக்களை
மலர்களை பழுத்த இலைகளை
கசக்கி முகர்ந்ததை
எப்படி மறப்போம் ?
நாம் எப்படி மறப்போம் ?

அவர்கள் அப்படித்தான்
இரும்புடன் உறவாடி
துருப்பிடித்து போனவர்கள்
ஆனால் நீங்கள்
கடல் அன்னையின் தாலாட்டில்
அலை மகளின் அணைப்பில்
உயிர் வாழ்பவர்கள்
உங்களுக்குமா ?

எங்கள் பட்டினி சாவின்
ஓலம் கேட்கவில்லை.

rajashanthy@t-online.de
பதிவுகள், டிசம்பர் 2003, இதழ் 48

68. **இத்தனை நாளாய் எங்கிருந்தாய் ? - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)**

விழியினை விழித்து ஆதவன் எழுந்து
இருட்டு அரக்கனை கரங்களால் விரட்ட
புள்ளினம் எழுந்து இசையினை மீட்ட
உயிரினம் அனைத்தும் விடியலை நோக்க.
விடியல் காட்சியை கண்டு களித்த
விழிகள் இரண்டும் நீரினை சொரிய
விழுந்த கண்ணீர் மண்ணை நனைக்க
எழுந்த புழுதியில் என் மனம் மகிழ
வெள்ளை மல்லிகை படர்ந்த பந்தல்
வெண்பனி பூக்களை தடவும் தென்றல்
சின்ன மழலையாய் சிரிக்கும் மலர்கள் -என
எத்தனை அழகாய் அமைந்த வீடு
அத்தனையும் இழந்தும் அமைதி காக்க
வயது முற்றிய மாமரம் மட்டும்
குனிந்த என் நலம் கேட்டு சிலிர்க்க.

நீண்டு வளர்ந்த தென்னை மரமும்
நிமிர்ந்து நின்ற ஆலமரமும்
வானை முட்டிய பலா மரமும்
வரும் விருந்தினரை வரவேற்ற வாழை மரமும்
வாழ்ந்த இடத்தில் வேர்கள் மட்டும்
அழுது வடித்து அகதியாய் நிற்க

சிட்டுக் குருவிபோல் பறந்து திரிந்து
சிந்திய சிரிப்பொலி நினைவில் மோத
காயாத கனவுடன் வாழ்ந்த என்வீடு
காதல் நினைவுடன் நான் வாழ்ந்த கூடு
அத்தனை மகிழ்வினையும் இழந்த காடாய்
இத்தனை நாளாய் எங்கிருந்தாயென ?
ஏக்கத்துடனே என்னை நோக்க

இலையினை உண்டு இனங்களை பெருக்க
உதவிய மரத்தின் இடா¢னைக் கண்டும்
உயிரினை பெரிதாய் என்னியே பிரியும்
புழுக்களின் இனமே நானும் என்றேன்

69. நாளைய அஸ்தமனத்துக்காய் - - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி)

கார் முகில்களின் விலகல்
மகிழ்வின் பிரகாசம்
ஏவாளின் குழந்தையின்
முகத்தில்
அப்பிக் கிடக்கின்றது

சாத்தனின் புத்திரனோ
விழித்தபடி
சாம்பல் மேடுகளை காணாமல்
தவிக்கின்றான்.

எங்கேயாவது
ஒரு மின்னல்
ஒரு இடி
அல்லது சிறுமழை

சூறாவளிக்காய்
விழித்தபடி
காத்துக்கிடக்கின்றான்
சூரியனின் ஊ¡வலத்தை
தடுப்பதற்காய்.
முகப்பு|கவிதைகள்|கனடியத் தமிழ் இலக்கிய பக்கம்
காப்புரி¨

பதிவுகள், செப்டம்பர் 2003 இதழ் 45

70. நீ மட்டும் - பாரதி (ஜேர்மனி) -

இதயத்துள் து¡ளிகட்டி
இமையாலே கவசமிட்டு
கணமெல்லாம் காத்ததனால்
ரணமாக்க நினைத்தாயோ?

கனவு சுமந்தவளும்
மனதாய் இருந்தவளும்
கலங்கி துடித்திருக்க
காற்றாய் கரைந்தாயோ?

இடையில் நீ இருந்த
வடுக்கள் இன்னும் கறுப்பாக
உந்தன் நி¨வாய் இனனும்
நீ மட்டும் ?

71. கனவுக்குள் வாழ்க்கையிது பாரதி (ஜேர்மனி) -.

சின்ன இதழ் வி¡¢யென்று சிறு கவளம் ஊட்டிய கை
சிந்தை நிறைந்து வந்து சிலபொழுது கனக்கவைக்கும்.
பிஞ்சு விரல்களைப் பிரியமாய்ப் பற்றிய உன்
பஞ்சுக் கைகளுக்குள் விழி புதைத்து அழ மனம்துடிக்கும்.

எண்ணக் கனவுகளை எளிதாய்க் கையளித்தாய்.
என்னைச் சுமந்த தோளில் ஒரு கணமேனும் தலைசாய்த்து
கண்ணீர் மழையாலே உன் காயங்களைக் கழுவுதற்கு
ஏங்கித் தவித்திருக்க ஏன் மௌனம் கொண்டாயோ?

நினைக்கும் நேரமெல்லாம் நெஞ்சம் தீக்குளிக்கும்.
நிழலாய் உன் குரலும் மகளே என விளிக்கும்.
கனவினிலே உன் கல்லறையில் கண்ணீர்ப்பூ து¡வுகின்ற
காட்சிதனை கண்டபின்னும் கண்திறக்க மாட்டாயோ?

SRasadurai@aol.com
பதிவுகள், டிசம்பர் 2003, இதழ் 48

72. அன்பு மயம்... - மதுமிதா

உலகம் முழுதும்
அன்பு மயம்
மாயையால்
மறைக்கப்பட்டுள்ளது
திரையை விலக்கி
சற்றே
உற்றுப்பார்
தெளிவாய்
தெரியும் காட்சியில்
இன்பம் கடக்கலாம்
துன்பம் கடக்கலாம்
தன்னை உணரலாம்
உலகை உணரலாம்
உலகம் முழுதும்
அன்பு மயம்
எவரையும் நெருங்கலாம்
எப்பொழுதும் நேசிக்கலாம்

madhumitha_1964@yahoo.co.in
பதிவுகள், ஜனவரி 2004, இதழ் 49

73. புது யுகம் பிறக்கட்டும்! - சாந்தினி வரதராஜன்

புலரும் புலரும் புதிய யுகமென
புதிய புத்தாண்டில் பூரிப்புடன் காத்திருந்தோம்
எத்தனை ஆண்டுகள் பூவாக பூத்தன
ஆத்தனை ஆண்டிலுமா அவலங்கள் எங்களுக்கு ?

பற்றற்று வனம் சென்ற புத்த பிரானும்
மற்றவர் மனம் திருந்த தத்துவங்கள் பல சொன்னார்
அவர் சொன்ன பாடத்தை அங்குள்ளோர் பலர் கற்றார்
அவர் வகுத்தபாதையினை தொடரவோ மறுத்துவிட்டார்
அதனால்
இரத்தம் சிந்தும் பூமியை கண்டோம்
சித்தம் கலங்கி சிலையாய் நின்றோம்
நித்தம் இதுவோ எம் நிலை என்றோம்
குற்றம் யாது புரிந்தோம் என்றோம் ?

கற்றவர் அன்று சொன்னது கண்டு
நற்றவர் நாமும் நலமென்று நினைத்து
பற்றுடன் பகிர்ந்தோம் நாட்டையும் அன்று
வெற்றுடன் நின்று வெதும்புகிறோம் இன்று.

மற்றுவோர் வருடம் மலர்வது கண்டு
பற்றுவோம் இன்று பலரது கையை
பெற்றிடுவோம் அன்று புதுயுகமொன்று- அதற்கு
வாழ்த்துவோம் இன்று புதுயுகம் பிறக்கட்டுமென்று.

74. நிழல் தேடும் மரங்கள் - சாந்தினி வரதராஜன்

விதைத்த விதை வெடித்து
விருட்சமாக வளர்ந்து
விழுதுகளை பரப்பி
நிழலை அளித்த மரங்கள்
துளிர்த்த இலைகள் பழுத்து
நிலத்தில் விழும் பொழுது
நிஜத்தை மறந்த மனித
மனத்தை தேடும் மரங்கள்.

மண்ணில் அன்று குழந்தை
வளர்ந்த பின்பு மனிதன்
தன்னை வளர்த்த மண்ணை
சுவடு பதித்த நினைவை
எண்ணிப்பார்க்க இன்று
இதயமில்லா மனிதன்.

உலாவரும் நிலவைப்போல
உருகிவாடும் மரங்கள் எல்லாம்
நிலவை துரிதாய் அனுப்பும்- தம்
நிலையை உரைக்க சொல்லும்
தேய்ந்திடும் மதிகளெல்லாம்
தேயும் காலம் கடந்த பின்னும்
வளர்ந்திடுவோம் என்ற எண்ணம்
மனதில் எண்ணிக்களிக்கும்
மதி கெட்ட மனிதம் மட்டும்
வயது எல்லை கடந்த பின்பு
புதிதாய் பிறப்பதில்லை
புரிந்து கொள்வாய் மனிதா!
கடந்ததை எண்ணி எண்ணி
கலங்கும் நிலையை நீயும் கடந்து
நிஜங்களை தேடித் தேடி
நீட்சமாய் செல்வாய் மனிதா.

ஏற்றமுடன் நல் கருத்து
என்னுள் எழும் பொழுது
தேற்றமுடன் நானும்
எடுத்துரைக்கும் மரம் நான்
வாட்டமின்றி தமை வருத்தி
உம்மை வளர்த்த மரங்கள்
தம் நிழலை தேடித் தேடி
அலையும் நிலையை அறிந்தும்
அறியா மனிதம் இன்று
அகதியாக இங்கு.

பதிவுகள், ஜனவரி 2004, இதழ் 49

75. அர்த்தமிழக்கும் காத்திருப்புகள் - திலகபாமா(சிவகாசி)

Woman வானம் பார்த்து பழகிய மனது
விதானம் பார்த்து கிடக்கின்றது இன்று
அர்த்தமிழக்கும் காத்திருப்புகள்
விடிந்து விடாத பொழுதுகளால்
தொலைந்து போகும் இரவு பகல்கள்

கரை தொட்டு மீண்ட அலைகள்
இறுகிப் போகின்றன
சலனங்களைத் தொலைத்து

வெளிச்சம் விடாது
மூடிய இமைகளுக்குள் தான்
வண்ண ஒளி கனாக்கள்
வந்து போகின்றன

ஈரேழு கடல்கள் கடந்து விட
முடிகிற எனக்கு
உனக்கான காத்திருப்புகள்
கடந்து விட முடியாதவையாய்
நீளப் போகின்றன

எதை உதறுவது
உனக்கான காத்திருப்பையா இல்லை
உன்னையேவா?

mathibama@yahoo.com
பதிவுகள், ஜனவரி 2004, இதழ் 49

76. பனிப்போர் - புதியமாதவி

எழுத்துப்போரில்
உன்னை வெல்வதும்
என்னை இழப்பதும்
இனியும்
சாத்தியமில்லை.

நீ
எழுதியப்போது
என் கைகள்
காயப்பட்டிருந்தன.

நான்
தேடியப்போது
உன் கண்கள்
கட்டப்பட்டிருந்தன.

சர்க் மாநாட்டில்
எல்லைக்கோடுகள்
கல்லறைகளைத்
தாண்டி
கைகுலுக்கல்
நம்
எழுத்து மாநாட்டில்
உன் உடையாதப்
பனிப்போர்..

என் தோட்டாக்கள்
உன் அடியில்
உன் கவிதைகள்
என் மடியில்..

பனிப்போரில்
தோட்டாக்கள்
வெடிக்காமல்
உன்

தோட்டத்தில்
புதைக்கப்படலாம்..
ஆனால்
போராளியின் மடிகள்
மன்னிப்புக் கேட்காது..
வெடிக்கும்..
எரிவது
என் மடி என்றாலும்
அதில்
உடைவது
உன் கவிதைமுகம்...

அன்புடன்,
புதியமாதவி

puthiyamaadhavi@hotmail.com
பதிவுகள், ஜனவரி 2004, இதழ் 49

77. புயலடித்துச் சாய்ந்த மரம் - சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி)

காற்றே!
உனக்கும் இரண்டு முகமா........?
தென்றல் என்றுதானே
என்னைத் தந்தேன்
இளமையின மதாளிப்புடன் நான்
பசுமையாய் செழித்திருக்கையில்
அல்லும் பகலும்
தழுவலும் வருடலுமாய்
அருகிருந்து
என் இளமையைச் சுகித்து விட்டு
எனதிந்த தள்ளாத வயதில்
உன் சுயத்தைக் காட்டி விட்டாயே!
கனிதரும் காலம் போய்விட்டாலும்
நீ களைப்பாக வரும்போதெல்லாம்
இளைப்பாற இடம் தந்திருப்பேனே!
வேரோடு சாய்த்து விட்டாயே!
வீழ்ந்ததில் வேதனை இல்லை
உன் நியமான
புயல்முகம் கண்டதில்தான்
பலமான அதிர்ச்சி.
வேரறுந்ததில் சோகமில்லை
நீயறுத்தாயே
அதைத்தான் ஏற்காமல்
மனதுக்குள் வெகுட்சி.

chandra1200@yahoo.de
பதிவுகள் , செப்டம்பர் இதழ் 46.

78. ரசம் - நெப்போலியன் (சிங்கப்பூர்) -

என்
மேய்ச்சல் நிலத்தில்
நீ இளைப்பாறிக் கொள்...

உன்
ரோமக் கூடுகளில்
நான் வந்தடைவேன்...

வெட்டுக்கிளியும்
காட்டுத் தேனும்
தின்று வளந்தவன் நான்
விரியன் பாம்பின்
குட்டிகளைக் கண்டு
பயப்படமாட்டேன்...

குழி முயல்கறி
இன்று சமைத்து
எடுத்து வா...

உனக்குப் பிடித்த
கிச்சலிப் பழங்களை
பறித்து வைத்துக்
காத்திருப்பேன் நான்...

காட்டத்தி மரமாய்
விரிந்து கிடக்கும்
உன் மார்பில்
ஒலிவமரக் கன்றாய்
ஒட்டிக் கொள்கிறேன்...

கருஞ் சிறுத்தை
வேகம் உனக்கு
யுத்த ரதங்களின்
சக்கரம்போல் சுழல்கிறாய்...

யாழின் நரம்புகள்
அறுபடும் விளிம்புகளில்
இசைத்துச் சுவைப்பதே
உன் ரசனை...

என் கிண்ணம்
நிரம்பி வழிகின்றது
காட்டு யானை மதம்
உன் பரபரப்பு...

தொங்கும் தோட்டங்களில்
கனிகளை உலுப்பு
இரைந்து கொட்டும்
அருவியாய்ப் பாய்...

வியர்வைக் குமிழ்கள்
நசுங்கி வெப்பமாய் உடைய...
கசகசப்பின் இறுக்கம்
இணைந்து செரிக்க...

பட்டயத்தை உருவி
காமம் சீவு
யுகம்
அடங்கும் வரை...

kavingarnepolian@yahoo.com.sg
பதிவுகள், டிசம்பர் 2003, இதழ் 48

79. கவனிக்கப்படா உண்மைகள்... - மதுமிதா -

மேடும் பள்ளமுமான
வாழ்க்கையில்
மேண்மைமிகு உண்மைகள்

மண்ணில் உதிரும்
இலையை
மரம் கவனிப்பதில்லை

விண்ணில் சேரும்
உயிரை
உலகம் கவனிப்பதில்லை

புயலில் அலையும்
மலரை
புவியும் கவனிப்பதில்லை

கண்ணில் காணா
அழகை
எண்ணம் கவனிப்பதில்லை

கருத்தில் சேரா
கவிதையை
இலக்கியம் கவனிப்பதில்லை

கடலினுள் அமிழ்ந்த
கல்லை
கடலும் கவனிப்பதில்லை

madhumitha_1964@yahoo.co.in
பதிவுகள், ஜனவரி 2004, இதழ் 49

80. தெருவிழா! - ரவி (சுவிஸ்) -

எங்கள் வீதியில் இடையிடையே
தெருவிழா களைகட்டும்
அதில்
குரங்குகள் சில வீதியில்
வலம் வருவது வழமையாகிற்று
மலர்களை கசக்கி உதிர்த்து
விசிறி நடந்தன ஒய்யாரமாய்.
மலர்களை, மலர்மாலைகளை எறிந்து
களித்தின்புற்றனர்
மனிதர்கள் சிலர்.
குதூகலம் என்றுமாய்
சி¡¢ப்பு கோபம் கத்தல் நளினம்... என
தெருவெல்லாம் தனதினதாய்
பெருமைகொண்டாடின.

காற்று வீசிய திசையில்
இலகுவாய் மனிதர்கள்
மூளைமடிப்புகளை பறக்கவிட்டனர்.
இந்தத் திசையில் நகர்வது இலகு.
வீதிக் குரங்குகளும்
அள்ளுண்டு போகிறது இத் திசையில்.

ஆசிரியனின் பிரம்பு நுனியில்
தொங்குகிறான் மாணவன்.
ஆத்திரப்பட்ட கணவனின் பிடியில்
அழுகிறாள் மனைவி
கோவில் கதவு சாத்தப்பட்டே இருக்கிறது
இன்னொருவனுக்கு.
எல்லாம் மீறி
பெருங்காற்றை போரும் போரோசையும்
வியாபித்தது
அனுபவங்கள் எல்லாம் சேகரமாகி
புதுப்புது முளைப்புக்கான விளைநிலமாயிற்று
எம் முளைமடிப்புகள்.

ஆனாலும் என்ன
அரைத்தரைத்தே நான்கு வார்த்தைகளுடன்
எடுக்கும் வாந்தியில்
நாறுகிறது
சந்தியில் குடித்த கள்.

கத்தல் கூச்சல் சொறிவு...
இப்படியே
தெருவிழாவில் குரங்குகள் செல்ல
மாலைகள் எறிந்திடுவோரும்
சேர்ந்து நடந்தனர்.
வசதிப்பட்ட இடங்களில்
கோவணத்தை இறுக்கி
வீரம் புரிந்தனர்

மனிதர்கள் இன்னும்
கண்டுகொள்ளா து¡ரமதில்
அவை நடந்து மறைக,
பகுத்தாயும் அறிவு
வெளிச்சம் கொள்ள!

ranr@bluewin.ch
பதிவுகள், ஜனவரி 2004, இதழ் 49

81. வெள்ளி இரவுகள் - இளங்கோ -

கொஞ்சம் அறிந்துகொள்ளும்
ஆவலுடனும்
மீதி
கௌரவம் காத்துக்கொள்ளும்
கட்டாயத்துடனும்
வளாகம் சென்று
பட்டமும் பெற்றாயிற்று.

பட்ட காலிலே
படும் போல
விரல் மடித்து
எண்ணமுடியா
டொலர் கடனுடன்
வேலையில்லாது
வீட்டின் முகப்பைப் பார்க்கும்
நிலை
இப்போது.

ஏறி இறங்கும்
ஒவ்வொரு நிறுவனத்திலும்
இன்று போய் நாளை
வாவென
சளைக்காது சொல்கின்றபோது
இன்னொருமுறை
இந்த பனிக்குள் நனைந்தபடி
பேய்க்காற்றின் கோரமொழி
கேட்கும் பயங்கரம்
நெஞ்சில் உறைக்கிறது.

ஒடுங்கி
குனிந்து நிற்கும்போதும்
நாடி பிடித்து நிமிர்த்தி
விடை தெரிந்தும்
என்ன வேலை செய்கிறாய்
என்று வினாவியபடி

உறவுகள்
ஏளனச் சிரிப்பை
அள்ளித்தந்தபடி இருக்கின்றனர்.

பட்டத்தை எரித்து
என்னையும் கொளுத்தி
வஞ்சினம் தீர்த்துக்கொள்ளும்
கனவுகளை தவிர்க்கமுடிவதில்லை
வெறுமையாய் நீளும்
இப்பொழுதுகளில்.

எனினும்...

ஒவ்வொரு வெள்ளி
முன்னிராவேளைகளில்
சந்திக்கும் துணை
மெல்ல முதுகு தடவி
என் விழியீரம் உலர்த்தி
இதமாய் முத்தம் தருகையில்
நம்பிக்கை வருகிறது
வாழ்வு இன்னமும்
மீதம் இருப்பதாய்.

elango_mathy@yahoo.ca
பதிவுகள், நவம்பர் 2003, இதழ் 47

82. எங்கே நீயோ.. .. தேவேந்திர பூபதி

மனதுக்குள் சூழ்தரித்து
கற்பனையின் பிம்பம் தாங்கி
என்னில் பிரசவிக்கும்
ஒவ்வொரு வார்த்தைகளும்
உன்னை எனக்கு முகங் காட்டும்

இரு வேறு துருவங்களின்
உச்சியில் நீயும் நானும்
ஆயினும்
எண்ணக் குதிரையின்
கடிவாளங்களை ஒருவர் மாற்றி ஒருவர்
பறப்பதென்னவோ உயர
ஆயின்
காலங்கள் மாத்திரம்
ஞாபக நிலத்தை உதற மறுத்தபடி

விடியலின் ஒவ்வொரு
கிரணமும்
உன்னை மூடி மறைப்பதற்கு பதிலாய்
நாட்களைத் தோண்டி எடுக்கின்றன

நிகழ்காலங்களை
இறந்த காலங்கள் சாகடித்த படியே
எதிர்காலத்தினை
கேலி செய்கின்றன

அஸ்திவாரங்களின்றியே
கற்பனைகளும்
உயர்ந்து கொண்டே செல்கின்றன
ஒவ்வொன்றாய்
ஒவ்வொன்றாய்

என்னை மட்டும் மூடி மறைத்தபடி

“பெயற்சொல்” தொகுப்பிலிருந்து. பதிவுகள், பெப்ருவரி 2004, இதழ் 50

83. அச்சமும் அவலமும் அவரவர்க்கு வந்தால்... - ப.வி.ஸ்ரீரங்கன் -

அன்புக் குழந்தைகளே!
நம்பிக்கை தரும் எந்த அழகிய வார்த்தைகளும்
என்னிடமில்லை,

கவித்துவமற்ற மொழியூடு
வாழ்வின் கரடுமுரடான பகுதிகளை
வழக்கொழிந்த வார்த்தைகளாய் கொட்டுவதைத் தவிர

நீண்ட சோகம் கப்பிய எதிர்காலத்தைப் போக்கி
ஒளிமிக்க நம்பிக்கையை கொணர்வதற்கு
எம்மிடம் எந்த மந்திரமுமில்லை

இரண்டும் கெட்டான் பொழுதுகளை
மெல்ல விரட்டி பொழுது புலர்வதற்குள்
ஒரு அழகிய தீவை உங்கள் முன் சமர்ப்பிக்க முடியவில்லை

நீங்கள் கிரகணத்தின் மெல்லலுக்குள் நீண்ட நாட்களாகச் சிக்கியுள்ளீர்கள்
முகட்டு உச்சியில் குண்டொலிகளையும்
தரைகளில் மோதும் அபாயகரமான மரணத்தையும் செவிகளால் கேட்கிறீர்கள்

நெருப்பில் வேகும் தும்பிகளின் மரிப்பையும்
குளிரல் கூனிக் குறுகும் காக்கையின் அச்சத்தையும்
என் செவிகளினு}டாகவும் கேட்கிறேன்

கண்கள் விரிகிறது
அவற்றைப் பார்த்துவிட,
எதிர்த்து தாக்குவதற்கு, வெறுமை!

ஓலமும் எங்கோ நெடும் தொலைவில்

பரிகாசிக்கின்ற இதழ்களிலிருந்து மெல்லிய "ச்சீ" ஒலி
இந்த உலகத்தின் அனைத்து மூலையிலும் சாவினது நிழல் விழுந்து கிடக்கிறது
அதனது நீண்ட விரல்கள் எனதருகில் புதையும்படி

எப்படி இந்தக் குழந்தைப் பருவம்...

கண்களை இறுக மூடிப் பெருமூச்சு விடுவதைத்தவிர
வேறெதையும் என்னால் செய்ய முடியாது,

அன்னையை இழந்த சேயும்,
சேயை இழந்த அன்னையும் சில காலத்து சோகச் சுவட்டில்,
அதுவரையும் இந்த பயங்கர உலகத்தை துடைத்தெறிந்து
புதிய ஆறுதலைப் பிரகாசிக்க வைப்பதற்கான
எல்லாக் காரியத்தையும் நீங்களே கைகளிலெடுங்கள்

எனது மெழுகு திரியோ
மிகவும் தன்னையுருக்கி கீழ்விழுந்தெரிகிறது!
ஆழிப் பேரலை கூத்தாடிக் குடித்த உங்கள் பள்ளித் தோழர்களுக்காகவும்
எனக்காகவும்,

போரினது நீண்ட தடம் எம் பின்னே கொள்ளிக் குடத்துடன்
ஒரு விடியலிலாவது இந்த வடுவைத் தொலைத்த நாளாக
புதிய பொழுது மலராது போய்விடுமோவென்ற
நெஞ்சத்து ஏங்கலில் ,

உங்கள் தோளோடு கைகோர்த்து தும்பி பிடித்திடவும்,
பள்ளியிலிருந்து தேவாரம் பாடவும்...
பார்க்கின்ற இடமெல்லாம் பால்ய காலத்து சிவாவும்,
கௌரியுமாக நீங்களும் நானும்,இன்னும் பலருமாய்...

மேகங்களுக்குப் பின்புறம்
எங்கோ நெடும் தொலைவில் நாம் புதிய மனிதர்களாக
மண்டியிட்டுக் கிடக்க
இந்த உலகத்து மானுடர்களெல்லாம் நமக்காக பிராத்தனையிலீடுபட
அனைத்து நித்யங்களும் மௌனித்துக் கொள்கின்றன

இனி எவரும் வரமாட்டார்கள்
இந்த அற்ப உலகத்து நியமங்களை உங்கள் முதுகினிலேற்றி
நாளைய தமது சுகத்திற்கான கனவுகளாக விதைத்து
அறுவடை செய்வதற்கான முனைப்புடன்

மேசைகளில்"மற்றவர்களினது தவறுகளாக"கொட்டி
கடைவிரிதவர்கள் இப்போ

அவற்றைக் குருதியால் எண்ணிக்கொள்ள அவர்களும்,நீங்களும்,
மற்றவர்களுமாக புதைகுழி நிரம்பிக் கொள்கிறது

என்றபோதும் ,
குழந்தைகளே இன்னுமொரு முறை சொல்வேன்:
நம்பிக்கை தரும் அழகிய வார்த்தைள் எவையும் என்னிடமில்லை.

பதிவுகள் மார்ச் 2005 இதழ் 63

84. கவிதை: தொப்புள் கொடி! ப.வி.ஸ்ரீரங்கன் -

கனவுகளின் எச்சமாக
சோகம் கப்பிய மங்கலான
நினைவுகளினது நிழல்கள்
தேகமெங்கும் தன் இருள் படர்ந்த விரல்களைப் பரப்பியபடி
அன்னை!
அடுப்பினில் புகையும் தென்னம் பாளையும் ,
அதனருகினில் வேகும் அந்த அற்புத உயிரும்
மப்புக் கரைந்த மந்தாரமாய்

வெறுமையின் நீண்ட கரங்கள் பிடரியைத் தடவ
உணர்வினது சூனிய வெளியில் அந்தரத்தில் தொங்கும் அன்னை,
நொண்டிக்காகமும் சொண்டுக்கிளியும்
நொந்து போக வைக்கும் நெருங்கிய தோழமையின் இழப்பாய்
நெஞ்சத்து மூலையில் மோதியபடி

கனவுகளைக் கருக்கிய பனிக்காலக் காற்றின் ஓலம்
கற்சுவரின் மோறையில் அறைந்து காலத்தில் அமிழ்ந்தது
எழுந்து சென்று பார்த்திட கால்களை அசைக்க
முதுகினது பின்புறமிருந்து மோதிய அதிகாரத் திமிர் இரும்புச் சுவராய்

நேரம் நெருங்குகிறது!
ஒர கால அவகாசம் கோவணம் கழன்ற கதையாக
மோப்பம் கொண்ட வெறி நாயோ வெல்வதற்குத் தயாராகும்
கோபுரத்து உச்சியில் தவமிருந்த கொக்கு பறப்பதற்கு இறக்கை விரிக்கும்

இங்கு காத்துக்கிடக்குமிந்த நடை பிணம்

கஞ்சல் பொறுக்கியபடி
அன்னையின் மடியும் அவித்துண்ணும் பனங்கிழங்கும்
அற்புதமான நிகழ்வாகிப் போச்சு!

தெருவோர வேப்பமரமும் வைரவ சூலமும்
முற்றத்து முல்லையும் பனையும்
முந்திய காலத்துச் சுவடாய்
கருச்சுமந்த அந்தக் காதலி கால் நீட்டிட

துணியினால் பிணை படும் அவள் விரல்கள்
என் முனகலில் கிழிபடக் காத்துக்கிடக்கும்
எனக்கு நரையேற்றும் காலமோ தன் கொடுங் கரம் கொண்டு
ஓங்கி உச்சியில் குத்த ஒப்பாரியாய் விரியும்
குடும்ப அகழியும் ஆழப் புதைக்கும் அன்னை மீதான பரிதவிப்பை

என்றோ அறுபட்ட தொப்புள் கொடி
இதுவரை ஆறுதலளித்த ஆத்தை
இருண்டுவிடப் போகுமிந்த யுகம்
விழி நீரின் வெடிப்பில் அமுங்கும்.

பதிவுகள் மே 2005 இதழ் 65

85. ஆவீன மழைபொழிய இல்லம் வீழ... (சின்னக் கதை) - ப.வி.ஸ்ரீரங்கன் -

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ....
இங்கு எதுவும் ஈனவில்லை. கடும் மழையும் பொழியவில்லை. எனினும் என் வீடு வீழ்ந்தது. சிதறுதேங்காய் போன்று சிதறியபடியே கற்கள் உருண்டன.

கூடவே கோதாரி புடிச்ச உடம்பும் சிதறிப் பிய்ந்தது.
ஆவீன மழை பொழிய இல்லம் வீழ...
நாசியேவ குண்டு பொழிய இல்லம் வீழ மெய் சிதற
அகத்தடியாள் விம்மியழ வாரிசு வதங்கித் துவள....

இருப்பைக் காக்கத்தான் யாவும்.

ஈழத்தை விட்டு ஜேர்மனியில் வாழ்வதும் சாவதும் இருப்பைப் பற்றிய

கனவின் உந்துதலால்தான்.

நீண்டு வளையும் உணர்வுகளுக்கு குறியீடு எதுவுமில்லை.
சிதறிய கற்களுக்குள் சின்னதாய் முனகல்.
மனைவி.
ஒலி.
எதிரொலி!

என் செவிப்பறை இரைச்சலில் வலுவிழந்தது.
பிரபஞ்ச இரைச்சல்.
ஒலியைத் தவிர வேறெதுவுமில்லை. அத்வைதம் மனதில் விரிந்தது.
ஒலியே அநாதி!
சற்றுமுன் வெடித்த குண்டின் ஒலி எனக்கு அநாதியாகவே பட்டது.
ஈழத்துப் பிரஜை என்ற உந்துதலோ என்னவோ!
அகத்தடியாள் மெய் நோக அடிமை சாக....

என் அகத்தடியாள் அழுதாள்.
மெய் நோக நோக விம்மி விம்மியழுதாள்.
அடிமை?
இவ் லோகத்தின் அடிமை??
தான் அடிமையென்று உணர்வதற்குள்ளேயே அடிமை செத்தது.

என் வீரியத்தின் மகுடம் துவண்டு கிடந்தது. மூச்சில்லை.
முகங்கற்குவியலுக்குள்.
நாடி நரம்புகள் வலுவிழக்க என்னால் அவனைப் பார்க்க
முடியவில்லை.
உச்சியிலிருந்து குருதி கசிந்தது.
அவன்மீது கட்டப்பட்ட கனவுகள் கோடி. தவிடுபொடி யாவும்.
என் மீது நான் கொள்ளும் பச்சாதாபம் அவனுருவில் வலிமை சேரும்.
எனக்காக எதிர்காலம் முற்றுப்புள்ளியாய் போனபோது, அவன் எனக்கு
ஆரம்பத் தொடரானான். இதற்குக் குண்டு முற்றுப்புள்ளி வடிவில்
வந்து சேர்ந்தது.

இயலாமை மீண்டும் உச்சியில் ஏறியமர்ந்து ஊனப்படுத்தியது
என்னை.
அவன் மனிதத்தை(சஞ்சிகை) இறுகப்பற்றியிருந்தான்.
குருதியினால் அதைத் தூய்மைப்படுத்தவா...?

போன கிழமைதான் அது தபாலில் வந்தது. சுவிசிலிருக்கும் சில தமிழ் நண்பர்களின் முயற்சி அது.
மனிதம் மீது கவிந்த வெறுப்புத்தானே குண்டுகள் வடிவில்
குடிகளுக்குள் வருகின்றன?
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ள....
இருப்பதே வாடகைக்குடியில் இதற்குள் விளைவிப்பதற்கேது நிலம்?

ஒரு
நாளைக்கு உடம்புக்கு முடியாது போனால் வாடகை வீட்டு ஞாபகம்.
கிருஷ்ணனின் பிரமாண்ட காட்சியில் வாயில் விரியும் கோறையாக....,
அதற்குள் மானுடம் புழுவாக நெளியும் காட்சியாக விரியும்.

நேற்றும் வேலைக்குப் போனபோது என்னுடன் வேலைபார்க்கும் என்
நண்பன் ஞானத்தின் பெயரை நேர அட்டவணையில் இருந்து
நீக்கியிருந்தார்கள். போனமாதம் வேறொரு தொழிலாளியை வீட்டுக்கு
அனுப்பியபோது தட்டந்தனியனாக நின்று எதிர்த்தவன்.
டொச்சில்'Ausbeutung Systeme" (சுரண்டல் பொறிமுறை)
என்று கோசம் போட்டவன்.
நேற்று....

இன்று நான், என் குடும்பம் வெடிகுண்டுப் புகைக்குள் குருதி சிந்தி....
உயிர் கொடுத்து....
இடிபாடுகளுக்குள் இருந்து என்னால் எதுவும் செய்யமுடியவில்லை.
வேலைக்குப்போக முடியாமல் நேர்ந்ததையெண்ண அது பயமாகி என்
வீட்டு இழப்பைக்கூட மறக்கடிக்கிறது சில விநாடிகள்.

டொச்லாண்ட் புகைகளின் பின்னே...
எனக்கு ஈழம் இப்போ சிறப்பானதாகப்பட்டது.
யுத்தத்தை மறுத்து,

தூக்கம் வரும்போது தூங்கி, பசி வரும்போது
கொட்டாவி விட்டு மிஞ்சினால் மூக்கறச்சிக் கீரையுடன்
காலந்தள்ளி.... அமைதியாய் உடல் அசைந்து உயிர்தாங்கும்.

டொச்லாண்ட் எனக்கு எல்லாம் வழங்கி இருந்தது. ஆனால் குண்டை
எப்போது வழங்குமென்று தெரியாமற்போய்விட்டது! தெரிந்திருந்தால்....

என்வீரியம்.... என் கனவு.... என் மனைவி....
நான் அகோர இடிபாடுகளுக்கிடையில் இருந்து என்னை விடுவித்து, என் மனைவியை.... என் மழலையை அண்மிக்க முயற்சித்து தோற்றேன்.
சில நிமிடங்கள் கழிய.... கீக், கீக் ஒலி செவிகளில் பட்டுத் தெறித்தன.
இது எனக்கு அதே குண்டு வெடிப்பின் ஒலியை ஞாபகமூட்டியது.
நான் பிரபஞ்ச இரைச்சலுக்குள்....
இப்போது அத்வைதம் அம்மணமாய் எனக்குள் சதிராடியது.
சிவப்பு வான்களில் வந்தவர்கள் ஓடியடித்து எமை அண்மித்தனர்.
அவர்கள் Notruf காரர்கள் (அவசர அழைப்புக்காரர்கள்)
கற்குவியல்களுக்குள்ளிருந்து என் மழலையை இழுத்தெடுத்தார்கள்.
அது துவண்டுவிட்டது.
நான் அப்பன் என்று கூறிக்கொள்ள இயலவில்லை. அப்பனுக்குரிய முறையில் அவனைப் பார்க்கவில்லை. அவன் வாழ்நாளில் பல மணி நேரங்களை நான் அவனுக்காகச் செலுத்தாமல் புத்தகங்களுடன் செலுத்தினேன். மழலையொலி கேட்டு ஆனந்தமடையாமல் நூல்களுக்குள் புழுவாகிப் போனதாலேயோ என்னவோ அவன் என்னைவிட்டு இப்போது வெகுதூரம் சென்றுவிட்டான். நான் எனக்குள் நொந்து வெதும்பினேன்.
இனி இங்கு எந்த சவக்காலையில் நிம்மதியைத் தேடுமோ?
நான் இதையறியேன்.
ஏதோவொரு மூலையில் உணர்வு மரத்தவளாய் மனைவி.
அவள் விழிகள் வீங்கி நீர் சுரந்து.... அகோரமான வாழ்வுப் படலத்தை சொல்லாமற் சொன்னது.
இருவிழி சிந்தும் நீரைப் பாராதே என்
இதயம் மகிழ்வதைப்பார்! என்று அவைகள் கூறவில்லை.
இயற்கை வலிமையுடையது.
சூட்சுமமாக சிலவற்றைச் சொல்லும்.
மனைவியின் விழிகள் எனக்கு இப்படியே பட்டது.
தன் தொப்புள் கொடியுடன் இணைத்து வைத்த இயற்கை, தற்போது தன்னிடமிருந்து பறித்துக் கொண்டதாகப் பிதற்றினாள். துவண்டதை அணைத்து மூர்ச்சையானாள்.
அவள் உடலெங்கும் இரத்தக் காயங்கள். தலையிலிருந்து குருதி வடிந்து அவள் கூந்தலை சிவப்பாக்கியது.
என் குழந்தையின் பால்போச்சி ஒரு மூலையில் சிதறாமல் கிடந்தது.
என் குழந்தையும் இப்படி....
என் விழிகள் பனித்து மீசை வழியாக உதட்டை அடைந்தது.

உப்புநீர், சீதை சிந்திய கண்ணீர் மலைபோன்ற எதனூடோ சென்று எங்கோ அடைந்ததாம். எனக்குள் ஒரு கம்பன் இருந்தால் எப்படி வர்ணிப்பானோ தெரியாது.

ராமாயணத்தை சுவைபட விளக்கிய ஆசிரியர் சபாரட்ணம் என் விழிமுன் வந்து போனார்.

எல்லாம் கனவுபோல் விரிந்து கொண்டன.
என் மனைவியையும் என் மழலையையும் கிடத்தியும் எடுத்தும் சென்றார்கள். என்னைக் கைத்தாங்கலாய் கூட்டிச் சென்றார்கள்.
நேரம், அதிகாலை நான்கை நகர வைத்தியசாலை காட்டியது.
எனக்கு மருத்துவ விடுப்புத்துண்டு பத்து நாளைக்கு எழுதப்பட்டது.
கூடவே உடற் சிராய்ப்புக்கு பத்துக்கள் போடப்பட்டது.
மனைவியை விபத்து வாட்டில் போட்டு குருதியேற்றினார்கள். அவள் கடுமையாகக் குண்டடிபட்டுவிட்டாள்.
நான் என் பிள்ளையை எங்கு எடுத்துச் சென்றார்களோ என்று ஏங்கித் தவித்தேன்.
மனைவியின் உடல்நிலை இன்னும் பெரிய பேரிடியை எனக்கு வழங்கிற்று. இவற்றையெல்லாம் உணர்ந்துகொள்ள எனக்கு உணர்வும் உடல் இயக்கமும் இருந்தது.
என்ன பாவம் செய்தேனோ தெரியாது!
புண்ணியம் செய்திருந்தால் நானும் கூடவே போயிருப்பேன். இப்போது நான்...

இருள் விடிந்து காலை மணி ஏழாகியது.
என் உடலில் வலுவிருந்தது.
வேலை ஞாபகத்திற்கு வர மருத்துவ விடுப்புத் துண்டு வழி வகுத்தது.

அத்துடன் வேலைத்தலம் நோக்கிப் போவதாக டாக்டரிடம் கூறி, மனைவியைப் பார்த்து மனம் நொந்து வேலைத்தலத்திற்குச் செல்லக் கிளம்பினேன். வழியில் ஞானம் எதிர்ப்பட்டான்.
என்ன மச்சான் உடம்பெல்லாம் கட்டுக்கள்
நான் மௌனமாகியிருந்தேன்.
மச்சான் போன மாதம் வேண்டிய ஆயிரத்தையும் தாவன்ராப்பா.
வீட்டுக்காரர் கொழும்பிலை வந்து நிற்கினம். இப்ப அவையளோடை ரெலிபோன் கதைச்சிட்டு வரேக்கைதான் நீயும் கடவுளேயெண்டு

நேரிலை வாறாய். காசைத் தாவன்ரா.

ஆவீன மழை பொழிய இல்லாம் வீழ
அகத்தடியாள் மெய்நோக அடிமை சாக
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ள....

வேலை போகுதென்று மருத்துவ விடுப்புக் கொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ளச்
சாவீடு என் வீட்டில் நிகழ
நான் விழி பிதுங்கி நிற்க...

ஞானம் என் நிலைமைகளை அறியும் நிலையிலில்லை.
பத்தாண்டுகளுக்குப்பின் பெற்றோர்களுடன் உறவாடிய நினைவில்
அவன் தன்னை மறந்திருந்தான்.
பின்னேரம் உம்மைச் சந்திக்கிறேன் என்றேன்.
சரி மச்சான்' ஏதோ சிந்தனைவயப்பட்டவனாய் விடைபெற்றான்.
அவனைப் பிரிந்து கிளம்பினேன்.
வானம் அழத்தொடங்கியது.
எனக்காக...?

குண்டுச்சிராய்ப்பினால் ஏற்பட்ட காயங்கள் வலியை அதிகமாக்கின
எனக்கு.
நிம்மதி இல்லை.
என் மழலை பற்றிய கனவுகள்.
வாழ்வின்மீது வெறுமை கவ்வியது.
வேலை ஏன்?
மருந்து விடுப்பேன்?
எல்லாம் போனபின் இவையிருந்து இலாபமென்ன?

பொன் எழில்கொள் மேனியைக்
கண்ணீரினால் கழுவி ஆறுவேனோ?

மீண்டும் வைத்தியசாலை நோக்கி ஓடினேன்.
இடையில் விம்மி விம்மி அழுது வீங்கினேன்.
என் செல்வத்தின் எழில் முகத்தைப் பார்க்க மனம் அவாப்பட்டது.
அவன் பொங்கி எழும் முழுநிலவுக்கு ஒப்பானவன். ஆனால் அகதி.

கண்கள் மீண்டும் பனித்தன.

விழிநீரினூடே அவன் மலர்ந்தான்.
விழி நீரிலாட அவன் மலர்ந்தான்.

குயிலும் கரும்பும் செழுந்தேனும்
குயிலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதம் சுவைதீர்த்த
மொழியைப் பிரிந்தான் அழியானோ...!

சீதைக்கும் ராமனுக்குமா இது பொருந்தும்....?
எனக்கும் தாம்!
என் மழலையை எந்தச் சவக்காலைக்கு
எடுத்துச்
சென்றிருப்பார்கள்...?
மனைவியின் நிலை எப்படியோ? கேள்விகள் நீண்டன.

இரத்தம் ஏற்றினார்கள். எய்ட்ஸ் இரத்தம் வேண்டாம். பிளாஸ்மா
மூலம் வைத்தியம் பார்க்கச் சொன்னேன்.
டாக்டர்கள் கேட்கவில்லை.
அவள் நிலைமையை நானறியேன்.
ஓடினேன். ஓடினேன். என் குழந்தை நினைவால்.
அவள் நினைவால். வைத்தியசாலை அண்மித்தது.
என்னவளின் கட்டிலைச் சுற்றி பத்துக்கு மேற்பட்ட கருப்புத்
தலைகள் தென்பட்டன.
என்ன தம்பி உமக்கு இப்படி...? பெரியவர் ஒருவர் நா தளதளக்க
கேள்விக்குறியால் ஆறுதல்படுத்தினார்.
ஞானமும் மௌனமாகித் தலைகுனிந்து அவர்களுள் நின்றான்.
மனைவி கோமாவில் இருந்தாள்.
நான தலைமை வைத்தியரிடம் என் மழலைபற்றிய விபரம் அறியச்
செல்வதாய் அவர்களனைவருக்கும் கூறிச் சென்றேன்.
என் மழலையைப் பார்க்க யாவரும் வருவதாய்ச் சொன்னார்கள்.
பதில் கிடைத்தது.
தென் சவக்காலையில் மழலையின் உடலிருப்பதாய் பதில் வந்தது.
ஓடினேன் மீண்டும்.
அவர்களும் பின் தொடர்ந்தார்கள்.
பஸ், டிராம், கார் யாவுமே மெதுவாகச் செல்வதாய் உணர்ந்தேன்.

இதனாற் கால்களினால் ஓடினேன். ஓடினேன்.
பின் தொடர்ந்தவர்கள் எவரையும் திரும்பியபோது காணவில்லை.
இடைவழியில் களைப்புற்று வீதியோரம் வீழ்ந்தேன்.
இதயம் பலமாக அடித்தது. நெஞ்சு வலியெடுத்தது.

'மண் சுழன்றது. மால்வரை சுழன்றது,
மதியோர் எண் சுழன்றது, சுழன்றது
அவ்வெறி கடல் ஏழும்
விண் சுழன்றது ,விரிஞ்சன்
கண் சுழன்றது,சுழன்றது
கதிரொடு மதியும்.... 'என்று கம்பன் சொன்னதுபோல் நான் சுழன்றேன்.
வாய்மட்டும் அசைந்தது.

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய் நோக அடிமை சாக
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்றத்
தள்ளவொணா விருந்து வர சர்ப்பந்தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள் வந்து தட்சணை கொடு என்றாரே எனப் புலம்பினேன்.

எனக்கு நீர்த்தாகம் எடுத்தது. நா வரண்டு கண்கள் இருண்டன.
சாவோலை கொண்டு யாரும் எதிரே தோன்றவில்லை. அது என்
வீட்டிலேயே நிகழ்ந்தது.
அகதி வாழ்வில் விருந்துக்கு வர யாருமில்லை.
கோவேந்தர்கள் கடமை கேட்க வந்தார்கள் குருக்கள் வடிவில் போன
கிழமை.
அவர்கள் அவசரகால யுத்தநிதி என்
விருப்பை அறியாமலே ஐந்நூறு
மார்க் என எழுதி ரசீது தந்தார்கள்.
இவை யாவும் காட்சியுருவாகின.
கண்களை இருள் முழுமையாக கவ்வியது.
நான் மூர்ச்சையானேன்.
நினைவு திரும்பியபோது ஒரு வைத்திய சாலைக்கட்டிலில் கிடப்பது
புரிந்தது.
கண்ணெதிரே என் மழலை ஓடியாடுவது புலப்பட்டது.

விழிகளைக் கசக்கி மீண்டும் பார்வையைக் குவித்தேன்.
கண்ணீர் மட்டும் நிஜமாகியது.
விழிகளை இறுக மூடினேன்.
மனைவியின் ஞாபகம் பின் தொடர்ந்தது.
அகத்தடியாள் மெய்நோக...
அவள் இறக்கமாட்டாள் தன் மழலையின் உடலைப் பார்க்கும்வரை.
வைத்தியசாலைக் கட்டிலைவிட்டு எழ முயன்றேன். முடியவில்லை.
உடல் பலவீனப்பட்டுப் போய்விட்டது.
மீண்டும் என் மழலையின் பேச்சொலி செவிகளிற் பட்டுத் தெறித்தது.
இப்பேது கண்களில் இருந்து நீர் வரவில்லை.
வரண்ட பார்வையை சாளரத்துக்கூடாக வெளியில் செலுத்தினேன்.
வானத்தில் முழுநிலவு வட்டமிட்டது. அது என் மழலையின்
நிர்மலமான தோற்றத்தை உரித்து வைத்தாற்போல காட்டி நிற்க.
என் வாய்மட்டும் ஆவீன மழை பொழிய இல்லம் வீழ...? என
முணுமுணுக்க விழிகள் பனித்தன.

பதிவுகள் மார்ச் 2004 இதழ் 51
srirangan@T-Online.de

86. தவம் - திலகபாமா (சிவகாசி)

கிடக்கும் கல்
சாபம் தந்ததாய் உன்
சாணக்கிய சிரிப்பு
கட்டிய தாலிக்காய்
உடைமை ப் பொருளாய் எனை
சந்தித்த உன்னிடமிருந்து
விமோசனம் தந்த வரமாய்
என் சிந்திப்பின் தித்திப்பு
காலால் தீண்டி
பெண்ணாய் மாற்றும்
அவதாரம் நாடாது
கலையை நெஞ்சில் கொண்டு
சிலையாய் மாற்றும்
சிற்றுளிக்கும்
தாங்கிய கைதனுக்கும்
காத்திருக்கும் என் தவம்

ஏப்ரில் 2002 இதழ் 28 -

87. எங்கோ இருக்கும் கிரகவாசிக்கு... - வ.ந.கிரிதரன் -

முகமில்லாத மனிதர்களிற்காகவும்
விழியில்லாத உருவங்களிற்காகவும்
கவிதைத் தூது விடுப்பர். ஆயின், யான்
அவர்களிற்கல்ல நண்பா! உனக்குத்தான்
அனுப்புகின்றேனிச் செய்திதனை.
உன்னை நான் பார்த்ததில்லை.
பார்க்கப் போவதுமில்லை.
உனக்கும் எனக்குமிடையிலோ
ஒளியாண்டுச் தடைச்சுவர்கள்.
'காலத்தின் மாய' வேடங்கள்.
ஆயின் நான் மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
நிச்சயமாய் நானுனை நம்புகின்றேன்.
எங்கேனுமோரிடத்தில்
நீ நிச்சயம் வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய்.
ஆம்!
வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய்.
காடுகளில் , குகைகளில் அல்லது
கூதற்குளிர்படர்வரைகளில்
உன்
காலத்தின் முதற்படியில்...
அல்லது
விண்வெளியில் கொக்கரித்து
வீங்கிக் கிடக்கும் மமதையிலே..
சிலவேளை
போர்களினாலுந்தன் பூதலந்தனைப்
பொசுக்கிச் சிதைத்தபடி
அறியாமையில்...
ஒருவேளை
அதியுயர் மனத்தன்மை பெற்றதொரு
அற்புதவுயிராய்...
ஆயினும் உன்னிடம் நான்
அறிய விரும்புவது ஒன்றினையே..
'புரியாத புதிர்தனைப் புரிந்தவனாய்

நீயிருப்பின்
பகர்ந்திடு.
காலத்தை நீ வென்றனையோ?
அவ்வாறெனின்
அதையெனக்குப் பகர்ந்திடு.
பின் நீயே
நம்மவரின் கடவுள்.
காலத்தை கடந்தவர் தேவர், கடவுளென்பர்
நம்மவர்.
இன்னுமொன்று கேட்பேன்.
இயலுமென்றா லியம்பிடு.
இவ்வாழ்வில் அர்த்தமுண்டோ?
இதனை நீ அறிந்தனையோ?
உண்டெனில் அர்த்தம் தானென்ன?
சிலர்
அர்த்தமற்ற வாழ்வென்பர்.
யான்
அவ்வாறல்லன்.
அர்த்தம்தனை நம்புபவன். ஆயினும்
அதனையிதுவரை அறிந்திலேன்.
அதனை நீ அறிந்திடின்
அதனையிங்கு விளக்கிடு.
அது போதும்!
அது போதும்

88. எழுக அதிமானுடரே! - வ.ந.கிரிதரன் -

'காங்ரீட் '! காங்ரீட் '! காங்ரீட்' சுவர்கள்!
கதிருறிஞ்சிக் கனலுதிர்த்திடுங்
கள்ளங்கரவற்ற வெண்பரப்புகள்.

'சீமெந்து' சிரிக்கும் நடைபாதைகள்.

அஞ்சா நெஞ்சத் தூண்களின்
அரவணைப்பில்
மயங்கிக் கிடக்கும்

இட வெளிகள்.

வாயுப் படைகளின் வடிகட்டலில்
வடியுமுஷ்ணக் கதிர்கள்.

இடையில் சுழன்று வீசும் வாயுத்தேவன்.
செயற்கையின் தாக்கங்கள் செறிந்திட்ட
படர்ந்திட்ட
இயற்கையின் தேக்கங்கள்.

பனித் துளிகளின் குமிண் சிரிப்பினில்
சிலிர்த்திடும்
புல்வெளிகள் பற்றிய கற்பனைகள்,
கனவுகளில், நீலப்படுதாவின் கீழ்
நிலமடந்தை குளிர்ந்து கிடப்பாள்.

தலைகவிழ்ந்து அரவணைக்கும்
விருட்ஷக் கன்னியரின்
இளநகைகள்.

மரங்களில் புல்வெளிகளில் மந்தைகளாகக்
குழுக்களாகக் குகைகளில்
நடுங்கடிக்குமிருண்ட இராவினில்
நடுங்கி மின்னிடுமொளியினில்
மருண்டு கொட்டிடும் மழையினுள்
சுருண்டு
புரியாத பொழுதுகளில்
பதுங்கிக் குடங்கித் தொடர்ந்திட்ட
ஆதிப்பயணங்கள்.

இயற்கையின் தாக்கத்தினுள்
இலங்கிட்ட வட்டங்களில்
மயங்கிக் கிடந்த வாழ்க்கைச்
சக்கரங்கள்.

இனிய
அதிகாலைப் பொழுதுகள் அவை.

எழில் கொட்டிய இன்பப் பொழில்களா ?

விஞ்ஞானத்தின் இறுமாப்பில்
விண்வெளியில் கொக்கரித்து
வீங்கிக்கிடக்கும் மானுடத்தின்
நெஞ்சினிலோ.......

ஆ....அந்த அமைதி! அந்த இனிமை!
எங்கே ? எங்கே ? அவையெல்லாம்
எங்கே ? ஐயோ..அவையெல்லாம்
எங்கே போய் அடியோடு தொலைந்தனவோ ?
பொறி கக்கும் புகையினில் சுவாசம் முட்டி
புகைந்திட்ட வர்க்கப் போர்களால்
நிலைகுலையும் ககனத்தில்
குண்டுகளின் தாண்டவம்.

அச்சமின்றிப் பறந்த ஆருயிர் நண்பர்களே!
நகை தவள நீந்திச் சுகித்த என்னருமைத் தோழர்களே!
தென்றலணைப்பில் தூங்கிக் கிடந்திட்ட
விருட்சத்துக் குழந்தைகளே!
ஆறறிவால் நிலைகுலைந்து
நிற்கும் பிரிய சிநேகிதர்களே!
வளர்ச்சி தந்த வளர்ச்சியிலோ... ?

விரக்தி! அமைதியின்மை! ஆங்காரம்!
போர்! போர்!போர்!
போரென்றால்..போர்! போர்! போர்!

ஆ....

வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வழுதானென்ன ? வழுதானென்ன ?
வழுதானென்ன ?

ஆ..அந்த

அமைதி!அமைதி!அமைதி!
அன்பு!அன்பு!அன்பு!\இனிமை!இனிமை!இனிமை!
அதி மானுடரே!

எங்கு போயொளிந்தீர்?
நீர்! எங்கு போயொளிந்தீர்?
நீர்! எங்கு போயொளிந்தீர்?

89. ஆசை! - வ.ந.கிரிதரன் -

அர்த்த ராத்திரியில் அண்ணாந்து பார்த்தபடி
அடியற்று விரிந்திருக்கும் ஆகாயத்தைப் பார்ப்பதிலே
அகமிழந்து போயிடுதல்அடியேனின் வழக்கமாகும்.

கருமைகளில் வெளிகளிலே
கண் சிமிட்டும் சுடர்ப்பெண்கள்
பேரழகில் மனதொன்றிப்
பித்தனாகிக் கிடந்திடுவேன்.

நத்துக்கள் கத்தி விடும்
நள்ளிரவில் சித்தம் மறந்து
சொக்கிடுவேன்.

பரந்திருக்கும் அமைதியிலே பரவி வரும்
பல்லிகளின்
மெல்லொலிகள் கேட்டபடி
பைத்தியமாய்ப்படுத்திடுவேன்.

இயற்கையின் பேரழகில்
இதயம் பறிகொடுத்தே
இருப்பதென்றால் அடியேனின்
இஷ்டமாகும்.

90. விடிவெள்ளி - வ.ந.கிரிதரன் -

அதிகாலை மெல்லிருட்போதுகளில்
அடிவானில் நீ மௌனித்துக்கிடப்பாய்.
படர்ந்திருக்கும் பனிப்போர்வையினூடு
ஊடுருவுமுந்தன் நலிந்த ஒளிக்கீற்றில்
ஆதரவற்றதொரு சுடராய் நீ
ஆழ்ந்திருப்பாய்.
விடிவு நாடிப்போர் தொடுக்கும்
என் நாட்டைப்போல்.
விடிவின் சின்னமென்று கவி
வடிப்போர் மயங்கிக்கிடப்பர்.
ஆயின்
சிறுபொழுதில் மங்கலிற்காய்
வாடிநிற்கும் உந்தன் சோகம்
புரிகின்றது.
அதிகாலைப்பொழுதுகளில்
சோகித்த உந்தன் பார்வை
படுகையிலே,
என் நெஞ்சினிலே
கொடுமிருட்காட்டில் தத்தளிக்கும்
என் நாட்டின் , என் மக்களின்
பனித்த பார்வைகளில் படர்ந்திருக்கும்
வேதனைதான் புரிகின்றது.
என்றிவர்கள் சோகங்கள் தீர்ந்திடுமோ?
என்றிவர்கள் வாழ்வினில் விடிவு
பூத்திடுமோ?
விடிவினை வழிமொழியும்
சுடர்ப்பெண்ணே! வழிமொழிந்திடுவாய்

91. பார்த்துக் களித்திடவே! - பா.தேவேந்திர பூபதி

இலக்கியங்களின்
கர்ப்பப்பையே
எழுந்து வா !
உன் மீது
பாரம் சுமத்தியே
சோர்ந்து போனது
எங்கள் உடலும் மனமும் !
நீ மட்டும்
உனது பாரச் சிலுவைகளின்
உ S ணமறியாமல்
போலிக் களிப்பில் உனை மறந்த படியே !

மாரீச மான்களின்
போலி வேடங்களில்
ஏமாற்றப் பட்டாய்
உன்னை
சீதையென்று போற்றினோம் !

துச்சாதன விரல்கள்
உன்னில்
அக்னிக் கணைகள் வீசி
டை அவிழ்க்கையில்
பாஞ்சாலி என்று பரவசப் பட்டோம் !

அகலிகையாய் நீ
கல்லாய்ப் போனதில்
கையாலாகாத
கௌதமன் நாங்கள்
சாபம் கொடுத்து சந்தோசப் பட்டோம் !

எலும்பைத் தின்னும்
எச்சில் லத்திகள்
உன்னில் கருத்தரிப்பு
நடத்தையில்
கண்ணியம் பேசி
ஊர்வலம் நடத்தினோம் !

உன் மீது பாரம் சுமத்தியே
சோர்ந்து போனது
எங்கள் உடலும் மனமும்
நீ மட்டும்
பாலூட்டுதலில் பரவசமடைந்த படியே
காலையில் வீடு திரும்பும் கணவனுக்கும்
காத்திருக்கும் அனுசூயையயாய் .. .. ..

உணர் !
பழைய படியே
மீண்டும் வேலெடு
உனது வேடையாடுதலில்
உனை மறுக்கும்
அனைத்தும் மடியட்டும் !
இல்லையேல்
மீண்டும் ஒரு முறை
பார்த்துக் களித்திடவே
வேண்டும் வரம் கேட்போம்
காளியிடம்

kousick2002@yahoo.com
பதிவுகள், ஏப்ரல் 2004 இதழ் 52

92. தற்கால மனிதன்! - - எம்.ஏ.சலாம் -

வாழ்க்கை எனும் கானல் நீரில்
ஒளிர்கின்ற குருட்டொளியை
அமைதி என எண்ணுகின்ற
பகுத்தறிவு மனிதன் நான்.
அழகு ஓவியத்தில்
மனத்தை பறி கொடுத்து
உட்கருத்தை உணராமல்
குதூகலிக்கும் மனிதன் நான்.
கந்தலான பாய் தன்னில்
உறங்கி வந்த கனவினிலே
தேனும் பாலும் அருந்துகின்ற
செருக்குள்ள மனிதன் நான்.
காலிருக்க நடவாமல்
கரமிருக்க பற்றாமல்
கண்ணிருக்க நோக்காமல்
செவியிருக்க கேளாமல்
அழுது புலம்புகின்ற
அதிசய மனிதன் நான்.
சுடுகின்ற பனியை
கசக்கின்ற கனியை
மணம் வீசும் முள்ளை
குளிர்கின்ற நெருப்பை
புழுதி மிகு நிலவை
மனமுவந்து ஏற்கின்ற
புதிர்மிகு புதிய மனிதன் நான்.

93. ஹைக்கூக் கவிதைகள்: மின்விசிறி! தீக்குச்சி! கண்ணீர் முத்துக்கள்! - எம்.ஏ.சலாம்

1. வெப்பத்தைத் தாங்கி குளிமை தந்தது
   நீ உறங்க அது ஆடியது
   மின்விசிறி!

2. தலை கனத்து நின்றது
   தலை குனிந்ததும் அழிந்து விட்டது
   தீக்குச்சி!

3. இதயத்துள் வலி
   பிரிவின் வெளிப்பாடு
   கண்ணீர் முத்துக்கள்

moulana@eth.net
பதிவுகள் மார்ச் 2004, இதழ் 51

94: தனிமை! - நெப்போலியன் (சிங்கப்பூர்)

தனிமையுடன்
பேசும்பொழுது
எப்பொழுதும்
மௌனமாய் நான்......
சத்தமாய் அது !

ஆயிரம் நாக்குகள்
சுழற்றி
அபிநயம் காட்டும்
அந்த
அடவுகளின்
சூட்சுமம்
எப்பொழுதாவது மட்டுமே
எனக்குள் பிடிபடும்......

நெஞ்சம் பிளந்து
புதைத்த விதைகள்
முளைத்துக் கிளம்பும்
பிரசவ விரிசல்களில்
கத்தாமல் ஜனிக்கும்
தனிமையின் விருட்சம் !

விழுதுகளாய் சில சமயம்...
வேர்களாய் சில சமயம்...

என்னைப் புரட்டிப்
பதியம் போட்டபின்
யாருக்கோ
விதை புதைக்க
சத்தமிட்டு பிரியும்
தனிமை.

kavingarnepolian@yahoo.com.sg
பதிவுகள், மார்ச் 2004 , இதழ் 51

95. யானை பார்த்த குருடர்கள்! - வ.ந.கிரிதரன் -

யானை பார்த்துப் பெருமிதமுறும்
குருடரிவர்.
காலைப் பார்த்துரலென்பார்..
காதைப் பார்த்துச்சுளகென்பார்.
முழுவுரு அறிதற்கு
முயலார். ஆயின்
முற்றுந் தெரிந்ததாய்
முரசறைவார்.

சொல்லின் பொருளறியார்.
ஆயின் சொல்லழகில்
சொக்கி நிற்பார்.
'இஸம்' பல பகர்வாராயின்
'இஸம்' புரியார்.
குழுச் சேர்த்துக்
குளிர் காய்வார்.

இருப்போ தற்செயல்.
தற்செயலுக்குள்
இவர்தம்
தற்செயற் தந்திரம் தான்
என்னே!
நிலையற்றதனுள்
நிலைப்பதற்காயிவர்
போடும் ஆட்டம் தான்
என்னே!

புரிந்து கொள்ளப்
படிக்கார்.
அறிந்து கொள்ளப்
படிக்கார்.
புலமை பகிர்வதற்கன்றிப்
பகர்வதற்காய்ப்
படிப்பார்.

ஆனை பார்க்கும் அந்தகரே!

தனியறிவை
இணைத்தறிய என்றுதான்
முயல்வீர்?

பதிவுகள், மார்ச் 2004, இதழ் 51

96. புறச்சூழலில் அகக் குரல்கள்! - திலகபாமா

கரிசல் மண்
இறுக்கங்கள் துவண்டு
தூசாய் உதிரத் துவங்கியிருந்தது
எப்பவோ பெய்த தூறல்
தந்த நம்பிக்கைகளில்
ஏரோட்டப் பட்டிருந்த வரித் தடங்கள்

ஒற்றைக் கருவேலம்
தாங்கியிருந்த வறட்சியிலும்
தவறாது பூத்திருக்க
ஆடுகள்
முன்னங்கால்கள் உயர்த்தி
முயலும் கருவேலங்காய் கடிக்க

பறவையின் எச்சங்களில் இருந்து
வேர் ஊன்றி விழுது பரப்பி
நின்றிருந்த ஆல மர நிழலில்
என்னில் கோயில் அமைத்துக் கிடந்த
படேறியம்மனுக்கு படையலிட
பொங்கும் பொங்கலுக்காய்
நெருப்போடு எரிந்து கொண்டிருந்தாள்
கரிசல் கண்ணகி

அவளிட்ட நெருப்பும்,
அரிசி கழுவி ஊற்றிய நீரும்
ஒன்றாய்த் தாங்கிய நானும்
அவளும்
அவள்பெயர் தாங்கிய கண்ணகியும்
இங்கு ஒன்றாய் உலாவ

புறச் சூழலில்
நிறைந்து கிடந்த இரைச்சல்களுக்கிடையில்
என் அகக் குரல்
கேட்கவே இல்லாது போயிற்று
தப்பித் தவறி அமைதியின் இடையில்
கேட்டு விடுகின்ற குரலும்

அவரவர் வசதிக்காய்
மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு
சொல்லிய பொருள்கள்
உணரப்படாது கல்லறைக்குள் உயிரோடு

வெப்ப வெளிச்சத்தில்
எனக்கு காணக் கிடைத்தது
அவள் மனக் குரல்

என் குரலும்
அவளின் செவி ஏறலாம்
நம்பிக்கைகளில்
என் மனம் உரத்து பேசியது
மௌன மொழியில்

ஊன்றிய குத்துக்கால்களில் எல்லைகளிட்டு
பத்திரமெழுதி விட முடியாத
நம்பிக்கைகள் தந்திருந்த வாழ்வில்
காற்றும், நீரும், ஒளியும், நெருப்பும்

வாய்க்காது போயிருந்த வாழ்வோடு
வரப்புகளால் உடல்கள் மட்டுமன்றி
உணர்வுகளும்
தகர்க்கப் பட்டுக்கிடக்க

மகிழ்ந்து பெற்ற வரங்கள்
அறுவடையாகி
எவர் கைச்சரக்காகவோ போயிருக்க
நிரப்பப் படுகின்றன
சாபக் கழிவுகள் உரங்களாய்

எனக்குள் நீர் கருப்பை வாசமிருந்து
பிறப்பெடுத்து ஓடியது
தன் பாதை தன் தேடல் வழியில்

என்னில் வேரூன்றி இருந்த மரங்கள்
தன் சுவாசக் காற்றில்
வளியின் சுவாசமாகி
வலைகளுக்குள் சிக்காததாய்

எல்லாமாக நானிருந்தும்
எதுவும் எனதாயில்லாது
எவருக்கோ ஆகியிருக்க

புறச்சூழலில் ஒலித்த என் அகக் குரல்
அவளுக்கு மட்டும் அர்த்தமாகியிருந்தது
நேர் கோட்டும் பயணத்தில்
இருவர் திசைப் பயணமும் ஒன்றென்பதால்

எனக்காகவும் சேர்த்து குலவையிட்டாள்
பொங்கலிட்டு பிரித்து போட்டிருந்த
மூட்டியிருந்த கணப்பு
நீறு பூத்துக் கிடந்தது

உறங்கிக் கிடந்த நெருப்பு
கண்ணில் பட
தான் கொண்ட பெயர்க்காரி
கூடல் எரித்த பூம்புகார் கண்ணகி
குளிர்ந்தபடி
அவள் கண்ணெதிரில் வந்தாள்

கன்ண்று எரித்த மதுரை
மறந்து போனார்கள்
சிதற எறிந்த சிலம்பு
நினைவிலிருந்து சிதறிப் போனது

தெறித்து விழுந்த
இரத்தகண்ணீர் மாணிக்கங்கள்
வெளுத்துப் போனது

பெண்ணாய் அடையாளம் வெறுத்து
நீ பிய்த்து எரிந்த
பெண்மையின் சின்னம் மட்டும்
அக்னி சுமந்து வந்து வீழ்ந்த போதும்
நினைவுகளின் வக்ர காற்றூதி
கனன்ற கங்கை கரியாக்கி
சாதித்ததாய் பேசித் திரியும்
சதிக் கூட்டம்

வரைந்தது மீசை என்றாலும்
முகம் பூசியது கரிஎன்றுணராது
திருகி எரிய சேலை விளக்கினால்
அதையும் வியாபார மேடையேற்றும்
மானுடம் மறந்தவர்கள்

மங்கையின் அகக் குரல்
நெறித்தும்
மண்ணின் புறச் சூழலும்
பறித்தும்
சொத்தாய் மாற்றிவிட எத்தனிக்கும்
எத்தர்கள் சேர்ந்த்து எரிக்க இன்று
விழி வழி நெருப்பு
போதுமென்றுணர்ந்திருந்தாள்

காற்றின் ஈரமும் ,மண்ணின் ஈரமும்
மறந்து உலர்ந்து கிடந்த புற்கள்
பற்றி காட்டுத் தீயாய் எரிக்க
வண்ணம் ஏழு காட்டும்
ஒளி புகுந்த ஈரம் சுமந்த
விழி கொண்டிருந்தாள்

பாண்டியனையும் ,கோவலனையும்
மணிமேகலை கண்ட உதய குமாரர்களையும்
ஈரம் தாங்கிய விழிகள்
துளிர்க்க வைத்து கடந்தே போயிருக்க

கருமை சுமந்த சாம்பல்
வைத்தென்ன செய்ய
தலை வாழை இலையில் பரிமாறிய
பொங்கலோடு கேள்விகள்
நெருப்பில்லா நெருப்பில்
சமைத்துக் கொண்டிருந்தது
மானுடத்தை

mathibama@yahoo.com
பதிவுகள், ஏப்ரில் 2004, இதழ் 52

97. வருகல் ஆறு! - நெப்போலியன் (சிங்கப்பூர்)

கிழக்கே களப்பு
வடக்கே வன்னி
நடுவே பதட்டமாய்
வருகல் ஆறு.

கரையோர அதிர்வுகள்
கண்களுள் அபாயமிட
கண்ணீர் நுரைப்புடன்
வருகல் ஆறு.

இலை தளை
சுமந்த
என் மேல் உடம்பில்
இனி
தலை பல விழுமோ ?
என்றே திகிலுடன்
வருகல் ஆறு.

ஆண்டாண்டு வீரம்
அர்த்தமற்றுப் போனால்
மீண்டும் அகதியாகும்
ரத்தச் சகதியாகும்
வருகல் ஆறு.

கூட்டமாய் கட்டிய
கோட்டையில் ஓட்டையா ?
வேண்டாம்......
வேட்டை நாய்களின்
விருந்தாகிப் போகும்
வெட்கியபடியே
வருகல் ஆறு

புரட்சியும்
இயக்கமும்
பொய்யாகிப்போனால்
போய்ச் சேர்ந்த

போராளிகளுக்கென்ன பதில் சொல்ல ?
என்றே புலம்பலில்
வருகல் ஆறு.

போராளித் தாகம்
மாறாகிப் போனால்
வீணாகிப்போகும்
வருகல் ஆறு.

தண்ணீரின் இடமோ
தமிழ் ரத்தமாகும்
தவிப்பினில்
பயத்துடன்
வருகல் ஆறு.

நண்டுக் கதையாய்
துண்டு படாமல்...
ஒரே ஒலியாய்
ஓசை முழங்க...
கெஞ்சிக் கதறுது
வருகல் ஆறு.

kavingarnepolian@yahoo.com.sg
பதிவுகள், ஏப்ரில் 2004, இதழ் 52

98. மனசை உடைத்தெறிய பத்துக்கும் மேற்பட்ட வழிகள்! - மாலதி

வேண்டியழை! விருப்பம் சொல்லாதே!
யாரோ இடம் பெற்ற கனவை விவரி
வலிக்கிறதா என்று பார்க்காதே!

பிறர் எவ்வளவு மகத்தானவர்
என்று பிரித்துப் பகர்
என் மகத்தை யாருக்குச்சொன்னாய்
என்று தெரிவிக்காதே!
எப்போதும் பிறருக்காக என்னை அழவை!
மண்டியிடவை!
நான் அழும்போது தொலைந்து போ!
காதல் சொல்லு!விவரம் சொல்லாதே!
எந்த நிலையிலும்.
சதா பேசு எழுது சிரி என்று வற்புறுத்து!
எந்தப் பதிலையும் ஞாபகம் கொள்ளாதே!
உருக்கங்களை மறந்து போ!
தகவலில் முரணை மட்டும் புனைந்து
மீட்டு தடியால் அடி!
உடம்பில் துவண்டு துடிக்க அனுபவி!
உடம்பில் புண்ணாக்கில்லை என்று தத்துவம் பேசு!

காதலிக்கிறேன் என்று சொல்லு தினமும்.
இல்லவே இல்லையாகி இயங்குநிமிடநிமிடமும்.
வாழ்க்கை விளிம்பின் எங்கிருந்தோ
ஆதிமூலமே! என விளிக்கும்போது
போர்வைக்குள் புரண்டு களித்துறங்கு!
மறுநாள் ஒன்றுமிருக்காது என்று
நீ அறிந்திருந்ததைச் சொல்லு.
என்றுமிருக்காத உன்னை
நான் அறிந்ததை மறந்து.
நேரமில்லை என்று சொல் உடன்
உண்ட போகங்களைப் பட்டியலிடு
சாவகாசமாய்.
கணங்களைக் கொண்டாடாதே!
மனத்தைப் பத்துக்கும் மேற்பட்ட

வழிகளால் சம்மட்டியால் அடி!

என் சவத்தைப் பார்க்க வராதே!
சிரமம் எதற்குஉனக்கு?
நான் தானே உன்னை நேசித்தேன்!

malathi_n@sify.com
பதிவுகள், ஜூன் 2004, இதழ் 54

99. கானல்நீர் வேட்டை! - பிச்சினிக்காடு இளங்கோ(சிங்கப்பூர்)

ஆதியும் அற்ற
அந்த நாளிலிருந்து
அமீபாவாகி
அவதாரங்கள் எடுத்து
நீ
நாங்கள்
இணையா இடைவெளியானோம்

அந்தமும் அற்ற
அந்த நாள்வரை
அப்படியே...

எங்களுக்கிடையே
எத்தனையோ கோடுகள்

நிருவாணம் தொலைந்ததிலிருந்து
வர்ணங்களை அப்பிக்கொண்டோம்

வெற்றிடத்தை
இருளாள் நிரப்பிவிட்டோம்

மூல வயலில்
பார்த்தீனியங்களைப்
பயிர்செய்தோம்

ஒருமுறைகூட
நீ வெளிக்காட்டிக்கொள்ளாதவரை
கானல்நீர் வேட்டையில்
பற்றித்தான் எரிவோம்
வெடித்துத்தான் சிதறுவோம்

ilango@stamford.com.sg
பதிவுகள் மே 2004, இதழ் 53

100. மரமல்லிகைகள்! - மாலதி! -

நீண்ட கோசங்களாட
மணத்தினால் மூச்சிழையும்
எட்டாத உயரங்களின்
மரமல்லிகைகளும்

தேடித்தேடி முட்டிவிட்டு
மீளாத கொஞ்சல்களும்
தூங்கு மூஞ்சி மரநிழல்கள்
ஒதுக்கின செத்தைகளும்

கபினத்தடுக்குகளில்
கறுத்துக் கிடந்துறங்கும்
வெள்ளிப்பாத்திரங்களும்
தாலியை மூழ்கடிக்கும்
முலைத்துறைத்தடங்களும்

வெளிநாடு சென்ற மகள்
விட்டுச்சென்ற புடவைகளும்
மின்னியமும் எண்ணியமும்
மிதித்துப் புறக்கணித்த
மனக்கணிதங்களும்
'நான்'களும்.

[மரமல்லிகைகள்2003 தொகுப்பிலிருந்து]

malathi_n@sify.com
பதிவுகள், மார்ச் 2004, இதழ் 51